Not for sale

மே - ஜூன் 2010

தமிழாக்கம்

# The Herald
## of Christ's Kingdom



# சாலொமோன்


சாலொமோனின் துவக்க வருடங்கள் • சலொமோனின் இறுதி வருடங்கள்

நீதிமொழிகள் • பிரசங்கி • உன்னதப்பாட்டு • சாலொமோனின் ஆலயம்

சங்கீதம் 72

சாலொமோன்

# ஆதியிலே



சாலொமோனின் நாற்பது வருடம் சமாதான ஆட்சி, இஸ்ரயேலின் வல்லமையின் சிகரத்தை குறிப்பிட்டது. அதுவரையிலும், அதற்குப் பின்னும் அந்த தேசம் இவ்வளவு சுபிட்சமாய் இருந்ததில்லை. வரப்போகிற அதிக மேன்மைக்குரிய ஆட்சியை சித்தரிக்கும் வகையில், யோசேப்பு, யோசுவாவைப் போல சாலொமோனும் நம்முடைய ஆண்டவராம் இயேசுவை அடையாளப்படுத்துகிறார். வரக்கூடிய மகா சிறப்பான உலக சாம்ராஜ்யத்தில் நம்முடைய ஆண்டவராம் இயேசு கிறிஸ்து தம்முடைய மணவாட்டி சபையுடன் உயிர்த்தெழுப்பப்பட்ட மனுக்குலத்தின் மேல் ஆட்சி புரிந்து, இதுவரையில் உலகம் காணாத சமாதானத்தையும், செழிப்பையும் கொண்டுவருவார்.

இந்த பழைய ஏற்பாட்டின் ராஜாவின் அனுபவங்களையும், அவருடைய எழுத்துக்களையும், தற்காலிகமான ஆசரிப்புக் கூடாரம் அல்லது அக்காலத்தில் தேவன் வாசம் செய்யும் ஸ்தலம் என்று கருதப்படும் கூடாரத்திற்குப் பதிலாக அவர் கட்டின மகிமையான ஆலயத்தைக் குறித்தும் இந்த பிரதி விரிவாக ஆராய்கிறது.

சாலொமோன் அபிஷேகிக்கப்பட்டு, அதிகாரப்பூர்வமான இராஜாவாக அறிவிக்கப்பட்டபோதும், அதற்கு முன்னும், அதற்கு பின்னும் நடந்த சம்பவங்களை *சாலொமோனின் துவக்க வருடங்கள்* என்ற கட்டுரை விவரிக்கிறது. அவர் சரியான முறையில் ஒரு வாரிசாக கருதப்படாமல் போனாலும், தேவன் சகலத்தையும் மேற்கொண்டதினால், அந்த தேசத்திற்கு அவர் மூன்றாவது இராஜாவானார். அவர் மிகச் சிறப்பாக ஆட்சியை துவங்கினார், ஆனால் அது சீர்கேடாக முடிந்தது. இதை *சாலொமோனின் பிந்திய வருடங்கள்* தெளிவாக்குகிறது. சிறப்பான துவக்கம் மட்டும் போதாது என்பதற்கு சாலொமோன் ஒரு எச்சரிப்பாக நிறுத்தப்படுகிறார். தேவனை பிரியப்படுத்த விரும்பும் யாவரும் தங்களுடைய வாழ்க்கையின் சரியான பாதையில் இறுதிவரைக்கும் தொடர்ந்து நடக்கவேண்டும்.

வேதாகமத்தில், சாலொமோன் எழுதிய *நீதிமொழிகள், பிரசங்கி, உன்னதப்பாட்டு* என்ற மூன்று புத்தகங்களும் ஆராயப்படுகிறது. குறிப்பாக முதல் இரண்டு புத்தகங்கள் மதியீனனுடைய ஞானம், தேவனுடைய ஞானத்தோடு ஒப்பிடப்படுகிறது. மூன்றாவது புத்தகம் காதல் பாட்டுகளை கொண்டிருப்பதால், இது புறம்பானதாக கருதப்பட்டு பொதுவாக வேதமாணவர்களால் தவிர்க்கப்படுகிறது. ஆனால் சுவிசேஷ யுகத்தில் சபையின் அனுபவங்களை ஏழு நிலைகளில் கவிதை பாணியில் வடிவமைக்கப்பட்டதாக இந்த கட்டுரை கருதுகிறது.

தேவனுக்கு மகிமை சேர்ப்பதற்காக சாலொமோன் கட்டிய மிகப் பிரமாண்டமான ஆலயத்தோடு சம்பந்தப்பட்ட விபரங்களை *சாலொமோனின் ஆலயம்* என்ற கட்டுரை மிக ஆழமாக விவரிக்கிறது. ஆராதனைக்காக கட்டப்பட்டவைகளில் இதுவே மிக அழகான வீடாக அமைந்தது.

இரண்டு சங்கீதங்களின் மேல் சாலொமோனின் பெயர் எழுதப்பட்டிருக்கிறது. (127,72) அதில் ஒன்றாகிய 72**ம் சங்கீதத்தின்** வசன வாரியான விளக்கத்தோடு இந்த பிரதியின் முடிவுக்கு வருகிறோம். அதில் இராஜாவாகிய தாவீது தன்னுடைய மகனுக்காக வைத்திருக்கும் நம்பிக்கையை வெளிப்படுத்துகிறது.

வேதாகமத்தில் உள்ள ஒரு மிகச் சிறப்பான நபரைக் குறித்த இந்த ஆராய்ச்சியும், சாலொமோனின் வாழ்க்கையில் கிடைத்த பாடங்களும், தொடர்ந்து தேவனை பிரியப்படுத்த விரும்பும் யாவருக்கும் அவர் எழுதின எழுத்துக்களும், நிச்சயமாக மகிழ்ச் -சியளிக்கும் என்று நம்புகிறோம்.

**மே-ஜூன்**


**ஆதியிலே (சாலொமோன்) . . . . . . . . . 1**

**சாலொமோனின் துவக்க வருடங்கள் . . . . . . . . . 2**

நாத்தான் இவ்வளவு வேகமாக செயல் படாதிருந்திருந்தால், சாலொமோன் நிச்சயமாக ஆட்சியில் அமர்ந்திருக்க இயலாது.

**சாலொமோனின் இறுதி வருடங்கள் . . . . . . . . . 6**

மிக பெரிய ஆலய பணியை முடித்தபின் சாலொமொன் தேவனுக்காக கொண்டிருந்த பக்தியை இழந்தார்.

**நீதிமொழிகள் . . . . . . . . . 10**

ஞானத்தின் இந்த பொக்கிஷ வீட்டில் உள்ள அநேக நீதிமொழிகளை சாலொமொன் எழுதியிருந்தாலும் அனைத்தையும் அவர் எழுதவில்லை.

**பிரசங்கி . . . . . . . . . 14**

நாம் தேவனுக்கு பிரியமாக நடந்துக்கொள்வது எப்படி என்பதைக் குறித்து சாலொமொனின் இறுதி காலத்தில் எழுதப்பட்டிருக்கும், இந்த புத்தகம் காட்டுகிறது.

**உன்னதப்பாட்டு . . . . . . . . . 18**


நாடகத்தில் உள்ள ஏழு பகுதிகள், ஒவ்வொன்றும் ஒவ்வொரு நாளாக, இந்த "நேச பாடலின்" மூலம் மிக தெளிவாக புரிந்துக்கொள்ளப்படுகிறது.

**சாலொமோனின் ஆலயம் . . . . . . . . . 24**

சொல்லர்த்தமான இந்த ஆலயம், தேவனுடைய வீடும், உண்மையில் ஆவிக்குரிய ஆலயத்தை நிழலாக சுட்டிக்காட்டக்கூடியதுமாக இருக்கிறது.

**சங்கீதம் 72 . . . . . . . . . 30**

வருங்கால மேசியாவின் ஆட்சிக்கு சாலொமோனின் ஆட்சியை இந்த சங்கீதம் ஒரு காட்சியாக காட்டுகிறது



நம்முடைய தெரிந்துக் கொள்ளுதலை உறுதிப்படுத்தல்

# சாலொமோனின் துவக்க வருடங்கள்

"அவனுக்கு சாலொமோன் என்று பெயரிட்டான், அவனிடத்தில் கர்த்தர் அன்பாயிருந்தார். " - 11சாமுயேல் 12:24

**Michael Nekora**

தாவீது, பெத்தலகேமிலிருந்து வந்த பயமற்ற இளவயது மேய்ப்பன், தேவன் மேல் விசுவாசம் கொண்டவராக பெலிஸ்தியரில் உள்ள உயரமானவனும், மிகுந்த பலசாலியானவனை ஒரே கவண் கல்லைகொண்டு வீழ்த்தினார். கோலியாத்தின் நெற்றியில் பாய்ந்த அந்த கல்லுக்கு அவனுடைய சர்வாயுதவர்க்கங்களை ஒப்பிடமுடியாது. அதற்குபின் வெகு சீக்கிரத்தில் அவர் "ஆயிரம் பேருக்கு அதிபதியாக" நியமிக்கப்பட்டார். (1சாமு 18:13) அந்நேரத்தில் "என் கை அல்ல, பெலிஸ்தியரின் கையே அவன்மேல் விழட்டும் என்று சவுல் நினைத்துக்கொண்டு, தாவீதை நோக்கி, இதோ, என் மூத்த குமாரத்தியாகிய மேராவை உனக்கு மனைவியாகக் கொடுப்பேன், நீ எனக்கு நல்ல சேவகனாய் மாத்திரம் இருந்து, கர்த்தருடைய யுத்தங்களை நடத்து என்றான்." (1சாமு 18:17) ஆனால் பெலிஸ்தியர்களோ தாவீதை கொல்லவில்லை. மேலும். மேராவை தாவீதுக்கு மனைவியாக கொடுப்பதற்கான நாள் வந்த போது சவுல் அவளை வேறொருவனுக்கு கொடுத்தான்.

அதைத் தொடர்ந்து மேராவின் சகோதரி மீகாள் தாவீதை நேசித்தாள். (1சாமு 18:20) இதை கேள்விப்பட்ட சவுல், மீகாளை இரையாக பயன்படுத்தி தாவீதை கொல்ல மற்றுமோர் சந்தர்ப்பம் கிடைத்தது என்று எண்ணினான். தாவீது எளியவனாக இருந்தபடியால் இராஜாவுக்கு மருமகனாவதற்கு தயங்கினார். ஆனால் நூறு பெலிஸ்தியர்களை கொன்று அதன் ஆதாரத்தை என்னிடம் கொண்டுவந்தால் மீகாள் உன்னுடையவள் என்று சவுல் சொன்னான். சொன்னவுடன் அதை செய்துமுடித்தார். இப்படியாக தாவீதின் மனைவிகளின் வரிசையில் மீகாள் முதல் மனைவியானாள். தாவீதை கொல்ல சவுல் திட்டமிட்டபோது மீகாள் அவரை காப்பாற்றனாள். இதை அறிந்த சவுல் கடுங்கோபம் கொண்டவனாக மீகாளை மற்றொருவனுக்கு மனைவியாக கொடுத்தான். (1சாமு 25:44) அநேக நாட்களுக்கு பின் அவளுடைய புருஷனை எதிர்த்து அவள் அவனிடத்தில் திரும்ப கொண்டுவரப்பட்டாள். (11சாமு 3:13) தாவீதின் மற்ற மனைவிகளை போலில்லாமல், மீகாள் பிள்ளை பெறாதவளாக இருந்தாள். (11சாமு 6 :23)

எப்ரோனில், ஆறு மனைவிகள் மூலமாக தாவீது பெற்ற குமாரர்களை 11சாமுவேல் 3ம் வசனம் வரிசைப்படுத்துகிறது. சவுலின் மரணத்தைத் தொடர்ந்து, முதல் ஏழு வருடங்கள் எப்ரோனில் யூதாவை ஆட்சிசெய்தார். அதற்கு பின் காலப்போக்கில் பன்னிரெண்டு கோத்திரங்களையும், முப்பத்து மூன்று வருடங்கள் ஆட்சிபுரிந்தார். அம்னோன், தானியேல் (கீலேயாப் என்று 11சாமு 3:3ல் உள்ளது) அப்சலோம் மற்றும் அதொனியா, தாவீதின் நான்கு குமாரர்கள். தானியேல் / கீலேயாப் சிறுவனாக இருக்கும்போதே மரித்திருக்கவேண்டும். ஏனெனில், அவரைப்பற்றி வேதாகமத்தில் எங்கும் காணப்படுகிறதில்லை. ஆனால், மற்ற மூன்று பேர்களும், தாவீதின் வாழ்க்கையில் பாதி மட்டும் முக்கியமான பாத்திரங்களாக பங்குவகித்தார்கள்.

### பத்சேபாள்

தாவீதின் மனைவிகளின் வரிசையில் பத்சேபாளும் சேர்க்கப்பட்டாள். தாவீது அவளை மனைவியாக்கி கொண்டதும், அவளுடைய புருஷனாகிய உரியாவை யோவாபின் மூலமாக யுத்தத்தில் கொன்ற அந்த நாளை குறித்து எங்கும் சொல்லப்படவில்லை. பத்சேபாள் தன் புருஷனுக்காக துக்கங்கொண்டாடின நாட்களுக்கு பின் தாவீதுக்கு மனைவியானாள். தாவீது மரணமடைவதற்கு இருபது வருடங்களுக்கு முன் இந்த சம்பவம் நடந்திருக்கவேண்டும் என்று கணிக்கப்படுகிறது. முறைகேடாக கருத்தரித்த பிள்ளை மரித்துபோனது. அதற்குபின் பத்சேபாளுக்கு நான்கு குமாரர்கள் பிறந்தார்கள் - சிமீயா, சோபாப், நாத்தான் மற்றும் சாலொமோன். (1நாளா 3:5) இதில் சாலொமோன் மூத்தவராக இருந்தார். தாவீதுக்கு பத்சேபாளிடத்தில் பிறந்த முதல் குமாரன் இறந்தபோது, தாவீது தன் மனைவியாகிய பத்சேபாளுக்கு ஆறுதல் சொன்னான், அதற்குபின் அவள் ஒரு குமாரனைப் பெற்றாள், அவனுக்குச் சாலொமோன் என்று பேரிட்டான். அவனிடத்தில் கர்த்தர் அன்பாயிருந்தார். (11சாமு 12:24)

சாலொமோன் என்ற பெயரில் உள்ள மூன்று எபிரெய மெய்யெழுத்துக்களில் -SLM- சாலோம், சமாதானத்திற்கு பிரபலமான எபிரெய வார்த்தையை பிறப்பிக்கிறது. தேவன் அந்தக் குழந்தையை நேசித்ததினால், அவருக்கு யெதிதியா (யேகோவா -வினால் நேசிக்கப்பட்டவர்) என்று பெயரிடும்படி நாத்தானை கட்டளையிடுகிறார் என்று அடுத்த வசனத்தில் சொல்லப்படுகிறது. ஒரு வேளை தாவீதின் இந்த கொடூரமான பாவத்திற்காக மனம் வருந்தியபடியினால், தேவன் மீண்டுமாக அவரை ஏற்றுகொண்டதை வெளிப்படுத்தும்படிக்கு அவர் இந்த பெயரை விசேஷமாக சூட்டியிருக்கலாம். ஆயினும், வேதாகமத்தில் இந்த பெயர் அதற்குபின் எங்கும் காணப்படுகிறதில்லை.

### பங்காளிகள் போராட்டம்

அரசு மன்றங்கள் அநேக மனைவிகளாலும், மருமனையாட்டிகளாலும், குமாரர்கள், குமாரத்திகள் நிறைந்ததாக, பொதுவாக சதியாலோசனைகளோடு காணப்பட்டது. (11சாமு 5:13) அதாவது தாவீதுக்கு பின்

அடுத்த இராஜாவாக யாரை அபிஷேகிப்பது என்ற பிரச்சனை அவர்களுக்குள் இயல்பாக உருவானது. தாவீதின் மூத்த குமாரன் அம்னோன் இராஜாவாக அபிஷேகித்திருக்கவேண்டும். ஆனால் சாலொமோனின் பிறப்புக்குபின் அம்னோன் அப்சலோமின் சகோதரியாகிய தாமாரை பலாத்தகாரம்பண்ணி, சாவுக்குரிய ஒரு பாதகத்தை செய்து விட்டான். அவள் எவ்வளவோ கெஞ்சியும் அவன் அவளை விடவில்லை. அதற்கு பின் அவளை விவாகம் செய்து கொள்ளும்படி கேட்டபோது, அவன் அவளை நிராகரித்து, பகைத்து துரத்திவிட்டான். அவள் தன் தலையின்மேல் சாம்பலை வாரிப் போட்டுக்கொண்டு, தான் தரித்திருந்த பலவர்ணமான வஸ்திரத்தைக் கிழித்து, தன் கையைத் தன் தலைமேல் வைத்து, சத்தமிட்டு அழுதுகொண்டுபோனாள். (IIசாமு 13:12,13)

இதை கேள்விப்பட்ட தாவீது வெகு கோபமாயிருந்தான். ஆனாலும் அம்னோன் செய்த கொடூரமான செயலுக்காக அவனை எந்தவிதத்திலும் தாவீது தண்டிக்கவில்லை. இதை கண்டுகொண்டிருந்த முழு அரண்மனை ஊழியக்காரர்களும், அடுத்து என்ன நடக்கும் என்று ஆவலோடு காத்திருந்தார்கள். ஆனால் சகோதரியின் கற்பை சூறையாடினவனை, அப்சலோம் குறி வைத்தான் என்பதை ஒருவரும் அறியாதிருந்தார்கள். அவனுடைய திட்டத்தை செயல்படுத்த இரண்டு வருஷம் காத்திருந்தான். தாவீதின் சந்தேகத்திற்கு இடமில்லாமல் பாதுகாப்பான அந்த வீட்டை விட்டு, பட்டணத்திற்கு வெளியே ஆடுகளுக்கு மயிர் கத்திரிக்கும் ஒரு விழாவுக்கு அம்னோன் வரும்படி திட்டமிட்டான். நேரம் சாதகமாக அமைந்த போது அப்சலோமின் ஊழியக்காரர்கள் அம்னோனை கொன்று போட்டார்கள். (IIசாமு 13: 28,29)

அம்னோன் மரித்ததால், அவனுக்கு பின் அப்சலோம் அவனுக்கு பதிலாக இராஜாவாக இருந்திருக்கவேண்டும். இதுவே நடைமுறை. ஆனால் அப்சலோம் தன்னுடைய ஜீவனை தப்புவிக்க அம்மியூதின் குமாரனாகிய தல்மாய் என்னும் கேசூரின் ராஜாவினிடத்திற்கு ஓடிப்போனான். (IIசாமு 13:37)அங்கு அவன் மூன்று வருடங்கள் தங்கியிருந்தான், மீதியிருக்கும் வருடங்களையும் அப்சலோம் அங்கே தங்கியிருந்திருப்பான். ஆனால் யோவாப் ஒரு புத்தியுள்ள ஸ்திரியை கண்டு, ஒரு தந்திரமான யோசனையை அவளிடம் சொல்லி, அப்சலோமை தாவீதிடம் கட்டாயமாக அழைத்துவரும்படி செய்தார். (IIசாமு 14:1-24)

அப்சலோம் மிக சௌந்தரியமுள்ளவனாக இருந்தான். "இஸ்ரயேலர் அனைவருக்குள்ளும் அப்சலோமைப்போல் சவுந்தரியமுள்ளவனும் மெச்சிக்கொள்ளப்பட்டவனும் இல்லை, உள்ளங்கால் தொடங்கி உச்சந்தலைமட்டும் அவனில் ஒரு பழுதும் இல்லாதிருந்தது." (IIசாமு 14:25) ஆகவே தாவீதின் மரணத்திற்குப் பின் அப்சலோமை இராஜாவாக ஏற்படுத்துவது நியாயம் என ஜனங்களும் கருதினார்கள். இவைகள் அனைத்தும் இயல்பாக நடக்கும்முன் அப்சலோம் தன்னுடைய சுயலாபத்திற்காக மற்றவர்களுடைய அனுதாபத்தை பெற துவங்கி, வெற்றிகரமாக சிங்காசனத்தை பற்றிக்கொண்டான். தாவீதும் அவருடைய ஆட்களும் தங்களுடைய ஜீவன் தப்ப ஓடும் அளவுக்கு அப்சலோம் ஜெயம் பெற்றான்.

ஆனாலும் அவனுடைய இராஜ்யம் நீடிக்கவில்லை. அவன் தவறாக கணித்துவிட்டதற்கு நன்றி. யோவாபும் அவருடைய படைவீரர்களும் அப்சலோமை வென்றார்கள். அப்சலோமை விட்டு விடும்படி தாவீது சொல்லியும் யோவாப் அவனை கொன்றுபோட்டார். தாவீது அப்சலோமை அதிகமாக நேசித்ததால், அவர் ஆறுதலயடையாதபடிக்கு அவனுடைய மரணத்தின் துக்கம் வாட்டியது. "ராஜா தன்முகத்தை மூடிக்கொண்டு, மகா சத்தமாய் - என் மகனாகிய அப்சலோமே? அப்சலோமாகிய என் மகனே, என் மகனே என்று அலறிக்கொண்டிருந்தான்." (IIசாமு 19:4) இதை கேள்விப்பட்ட யோவாப் - "அதிபதிகளும் சேவகரும் உமக்கு அற்பமானவர்கள் என்று இன்று விளங்கப் பண்ணுகிறீர், அப்சலோம் உயிரோடிருந்து, நாங்கள் அனைவரும் இன்று செத்துப்போனால், அப்பொழுது உம்முடைய பார்வைக்கு நலமாயிருக்கும் என்று இன்று அறிந்துகொண்டேன்" (IIசாமு 19:6) என்றார்.

காலம் கடந்தது. இதுவரைக்கும் சாலொமோனை பற்றி எந்த தகவலும் இல்லை. ஆனால் நாத்தான் சாலொமோனை கல்வி கற்க நல்ல ஆசிரியரிடம் கொண்டு சென்றதாக தெரிகிறது. தேவனைப் பற்றியும், அவருடைய வாக்குத்தத் தங்களைப் பற்றியும் அவருக்கு நன்கு கற்றுகொடுக் கப்பட்டது. (உபா 28:1-14) தாவீது மற்றும் பத்சேபாளும் நாத்தானை அதிகமாக மதித்தார்கள். உண்மையில், பத்சேபாளின் மற்றொரு புத்திரர்களில் ஒருவனாகிய நாத்தானின் வழியில், மரியாள் வம்சத்தில் தாவீது வரைக்கும் காணமுடிகிறது.

தாவீதின் ஆயுசு நாட்கள் முடிவடைந்து கொண்டிருக்கும் அந்த நாட்களில் மற்றொரு ஸ்திரீ அவருடைய வாழ்க்கையில் நுழைந்தாள். "தாவீதுராஜா வயதுசென்ற விர்த்தாப் பியனானபோது, வஸ்திரங்களினால் அவனை மூடினாலும், அவனுக்கு அனல் உண்டாகவில்லை. அப்பொழுது அவனுடைய ஊழியக்காரர் அவனை நோக்கி - ராஜசமுகத்தில் நின்று, அவருக்குப் பணிவிடை செய்யவும், ராஜாவாகிய எங்கள் ஆண்டவனுக்கு அனல் உண்டாகும்படி உம்முடைய மடியிலே படுத்துக்கொள்ளவும் கன்னியாகிய ஒரு சிறு பெண்ணை ராஜாவாகிய எங்கள் ஆண்டவனுக்குத் தேடுவோம் என்று சொல்லி, இஸ்ரயேலின் எல்லையெல்லாம் அழகான ஒரு பெண்ணைத் தேடி, சூனேம் ஊராளாகிய அபிஷாகைக் கண்டு, அவளை ராஜாவினிடத்தில் கொண்டுவந்தார்கள். அந்த பெண் வெகு அழகாயிருந்தாள். அவள் ராஜாவுக்கு உதவியாயிருந்து அவனுக்குப் பணிவிடைசெய்தாள், ஆனாலும் ராஜா அவளை அறியவில்லை." (Iஇராஜா 1:1-4)

ராஜா மரித்துகொண்டிருந்தார். அடுத்த இராஜாவாக இருப்பது யார்? வரிசையின் படி அதொனியா, சாலொமோனைவிட வயதில் பெரியவனாக இருந்தான். அவன் நான் ராஜா ஆவேன் என்று சொல்லி, தன்னைத்தான் உயர்த்தினான்.(Iஇராஜ 1:6) அவன்

செயல்படவேண்டிய காலம் வந்தது என்று அறிந்து, அவனை சேர்ந்த ஆட்களை அழைத்துக்கொண்டு எருசலேமுக்கு வெளியே தன்னை இராஜாவாக பறைசாற்றத் துவங்கினான். காலப்போக்கில் அந்த சிங்காசனத்திற்கு இவரே சுதந்திரவாளி என்று சந்தேகத்திற்கு இடமின்றி நம்பினான். நடந்த காரியங்கள் அனைத்தும் தாவீது அறியாதிருந்தார். ஒருவேளை அவருக்கு தெரிந்திருந்தாலும், அவரால் ஏதும் செய்திருக்கமுடியாது.

ஆனால் அரண்மனை காரியங்களை இரகசியமாக வைப்பது மிகவும் கடினமான ஒரு காரியம். நாத்தான் நடந்த சதித்திட்டங்களை அறிந்தவராக பத்சேபாளிடம் சென்று செய்யவேண்டிய காரியங்களை அறிவித்தார் - "நம்முடைய ஆண்டவனாகிய தாவீதுக்குத் தெரியாமல், ஆகீத்தின் குமாரனாகிய அதொனியா ராஜாவாகிற செய்தியை நீ கேட்கவில்லையா ? இப்போதும் உன் பிராணனையும், உன் குமாரனாகிய சாலோமோனின் பிராணனையும் தப்புவிக்கும்படிக்கு நீ வா, உனக்கு நான் ஆலோசனை சொல்லுவேன், நீ தாவீதுராஜாவிடத்தில் போய் - ராஜாவாகிய என் ஆண்டவனே, எனக்குப்பின் உன் குமாரனாகிய சாலொமோன் ராஜாவாகி, அவனே என் சிங்காசனத்தின்மேல் வீற்றிருப்பான் என்று நீர் உமது அடியாளுக்கு ஆணையிடவில்லையா? அப்படியிருக்க, அதொனியா ராஜாவாகிறது என்ன? என்று அவரிடத்தில் கேள். நீ அங்கே ராஜாவோடே பேசிக்கொண்டிருக்கையில், நானும் உனக்குப்பின்வந்து, உன் வார்த்தைகளை உறுதிப்படுத்துவேன் என்றான்." (1இரா 1:11-14)

தாவீது உண்மையில், தன்னுடைய இடத்தில் அடுத்த இராஜாவாக சாலொமோனை நியமிக்கும்படி வாக்களித்திருந்தாரா? இல்லை என்று சில புலமைவாய்ந்தவர்கள் சந்தேகிக்கிறார்கள். ஏனெனில் தாவீது இப்படியாக வாக்குகொடுத்ததாக வேதாகமத்தில் எங்கும் காணப்படுகிறதில்லை. மேலும், தாவீதின் மற்ற குமாரர்களும் சாலொமோனை சிங்காசனத்திற்கு பங்காளி என்று நினைத்ததும் இல்லை. ஆனால் தாவீது முன்னதாகவே வாக்களித்ததாக நாத்தான் பத்சேபாளை சொல்ல சொல்கிறார். அதேபோல் அவளும் சொன்னாள். 29ம் வசனத்தில் தாவீதும் இதை சொன்னது போல வலியுருத்துகிறார். அவர் அந்த சூழ்நிலையில் அவர் உண்மைகளை அறிந்திருந்தாரா, அறியாமல் இருந்தாரா என்பது தெரியவில்லை. ஆனாலும் நாத்தான் ராஜாவின் அதிகாரத்தை தன்னுடைய கட்டுபாட்டுக்குள் கொண்டுவந்து, அவரை முழுமையாக ஏவினார். உடனடியாக சாலொமோனை கீகோனுக்கு அழைத்து சென்று தீர்க்கதரிசியாகிய சாதோக் மட்டும் நாத்தானால் அபிஷேகிக்கப்பட்டார். ஜனங்கள் அனைவரும் " தேவன் சாலொமோனை ராஜாவாக கொடுத்தார் " என்று ஆர்ப்பரித்தார்கள். (1இராஜ 1:39)

அதொனியாவின் வெற்றிகரமான திட்டங்கள் முடிவடைந்தது. அவன் தன்னுடைய ஜீவனை தப்புவிக்க பலிபீடத்தின் கொம்புகளை பிடித்துகொண்டான். சொல்ல போனால், இந்த கொம்புகள் அனைவரையும் தப்புவிக்காது. இருப்பினும் சாலொமோன் அவனை விட்டுவிட்டான் -" .. அவன் யோக்கியன் என்று விளங்க நடந்துகொண்டால் அவன் தலைமயிரில் ஒன்றும் தரையிலே விழப்போகிறதில்லை, அவனிடத்தில் பொல்லாப்புக் காணப்படுமேயாகில், அவன் சாகவேண்டும் என்றான்" (1இராஜ 1:52)

### நிறைவுபெறாத காரியங்கள்

தாவீது மரிக்கும் முன் யோவாப் மற்றும் சீமேயி செய்த தவறுகளை நினைவுப்படுத்தி அவர்களுக்கு நியாயமான தீர்ப்பு செய்யும்படி கேட்டுகொண்டார். (1இராஜ 2-1-10) தன்னுடைய தளபதியாகிய யோவாப் சமாதானத்தின் காலத்தில் அப்னேரை கொன்ற காரியத்தைக் குறித்த மனவேதனை அவரை ஆழ்த்தியது. (1இரா2:5, 11சாமு 3:26-28) ஆனால் அப்னேர் யோவாபின் சகோதரை வெட்டிக் கொன்றதை பற்றி தாவீது எந்த விதமான கவலையும் படவில்லை. (11சாமு 3:30) நெருக்கமாக பின்னிப் பிணைந்திருக்கும் குடும்பங்களின் சட்டங்களை அறிந்த யோவாப், அந்த தவறான மரணத்திற்கு பதிலாக பழிவாங்குவது தன்னுடைய கடமை என்று எண்ணினார். அதேபோல ஆபேலுக்கு பதிலாக தான் பழிவாங்க படுவோமோ என்று காயீனும் பயந்தான். (ஆதி 4:14)

தாவீது உரியாவிடம் ஒரு நிருபத்தை கொடுத்தனுப்பியபோது, யோவாப் தாவீதின் படைத்தலைவனாக இருந்தார். ".. மும்முரமாய் நடக்கிற போர்முகத்திலே நீங்கள் உரியாவை நிறுத்தி, அவன் வெட்டுண்டு சாகும்படிக்கு அவனை விட்டுப் பின்வாங்குங்கள்..." என்று அந்த நிருபத்தில் எழுதியிருந்தது. (11சாமு 11:15) யோவாப் சொன்னதைச் செய்தான், எதிர்ப்பார்த்தபடி உரியா மரித்தான். வெகு சீக்கிரத்தில் உரியாவின் மனைவி தாவீதுக்கு மனைவியானாள். அதற்கு பின் யோவாப் தாவீதை சந்தித்தபோது நடந்த மௌனமான சம்பாஷனைகள் என்னவென்று நாம் உணரலாம். ஆனால் தாவீது செய்த இந்த அற்பமான காரியத்திற்கு யோவாப் நிச்சயமாக தாவீதை நிந்தித்திருக்கவேண்டும். ஏனெனில் தாவீதை காட்டிலும் உரியா மேன்மையான குணம் படைத்த நல்ல விசுவாசமுள்ள ஊழியக்காரனாக இருந்தார்.

சீமேயிவின் சரித்திரம் வேறு விதமாக இருந்தது. அப்சலோம் தாவீதை எதிர்த்தபோது, தாவீது தன் ஜீவன் தப்ப ஓடுவதற்கான ஒரு நிர்பந்தம் ஏற்பட்டது. பகூரிமிக்கு அவர்கள் வந்தபோது சவுலின் வீட்டானாகிய சீமேயு தாவீதின் மேல் கல்லெறிந்து அவரை தூஷித்தான் -"இரத்தப்பிரியனே, பேலியாளின் மனுஷனே, தொலைந்துபோ, தொலைந்துபோ. சவுலின் ஸ்தலத்தில் ராஜாவான உன்மேல் கர்த்தர் சவுல்வீட்டாரின் இரத்தப் பழியைத் திரும்பப்பண்ணினார். காத்தர் ராஜ்யபாரத்தை உன் குமாரனாகிய அப்சலோமின் கையில் ஒப்புக்கொடுத்தார், இப்பொழுதும் இதோ, உன் அக்கிரமத்தில் அகப்பட்டாய்.." (11சாமு 16:7,8) இதை கேட்ட அபிசாய் மிகவும் கோபம் மூண்டவராக அவனுடைய தலையை உடனே வெட்டவேண்டும் என்றார். ஆனால் தாவீதோ - "அவன் என்னைத் தூஷிக்கட்டும், தாவீதைத் தூஷிக்கவேண்டும் என்று கர்த்தர் அவனுக்குச் சொன்னார், ஆகையால் ஏன்

இப்படிச் செய்கிறாய் என்று கேட்கத்தக்கவன் யார் என்றான்... இதோ என் கர்ப்பப்பிறப்பான என் குமாரனே என் பிராணனை வாங்கதேடும்பபோது, இந்தப் பென்யமீனன் எத்தனை அதிகமாய்ச் செய்வான்.... ஒரு வேளை கர்த்தர் என் சிறுமையைப் பார்த்து, இந்த நாளில் அவன் நிந்தித்த நிந்தனைகளுக்குப் பதிலாக எனக்கு நன்மையைச் சரிக்கட்டுவார் என்றான்" - (11சாமு 16:10-12) அந்நேரத்தில் தாவீது அதை பொருட்படுத்தாமல் இருந்தாலும், அந்த அவமானத்தை அவர் மனதில் வைத்திருந்தார்."..சீமேயு உன்னிடத்தில் இருக்கிறான், நான் மக்னாயீமுக்குப் போகிற நாளிலே, அவன் என்னைக் கொடிய தூஷணமாய் தூஷித்தான், ஆனாலும் அவன் யோர்தானிலே எனக்கு எதிர்கொண்டுவந்தபடியினால் - நான் உன்னைப் பட்டயத்தாலே கொன்றுபோடுவதில்லை என்று கர்த்தர் மேல் அவனுக்குஆணையிட்டுக் கொடுத்தேன். ஆகிலும் நீ அவனைக் குற்றமற்றவன் என்று எண்ணாதே. நீ புத்திமான், அவனுடைய நரைமயிரை இரத்தத்துடன் பாதாளத்தில் இறங்கப்பண்ண, நீ அவனுக்குச் செய்யவேண்டியதை அறிவாய்" என்றான்.

இவ்வாறாக, சாலொமோன் தன்னுடைய பார்வையை சில தனிநபர்கள் மேல் வைத்தவராக அவருடைய ஆட்சி துவங்கியது. சாலொமோன் யோவாபினால் பாதிக்கப்பட்டிருந்தாலும், யோவாப் மற்றும் சீமேயுவை தாவீது பெயர் சொல்லிக் குறிப்பிட்டார். தாவீதின் மிக சிறந்த தளபதி அதொனியாவுடன் இசைந்து போனார். ஆகவே சாலொமோனின் நம்பிக்கைக்கு அபாத்திரரானார். அதொனியாவை இஸ்ரயேலின் அடுத்த ராஜாவாக அபிஷேகம் செய்வதற்கு வந்த ஆசாரியனாகிய அபியத்தாரையும் சாலொமோன் கவனித்துக்கொண்டிருந்தார். எல்லாவற்றிருக்கும் மேல் அதொனியா இன்னும் உயிரோடிருந்தான். அவன் சிங்காசனத்தை அடையமுடியாமல் பெறும் ஏமாற்றம் அடைந்தான்.

அதே நேரத்தில், சீர்த்தூக்கிப் பார்ப்பதிலும், ஞானத்திலும், சமாதானத்திலும் தன்னுடைய தந்தையைவிட எதிரிடையாக இருப்பதன் மதிப்பை உணர்ந்தார். அவர் ஒன்றும் செய்யவில்லை. அதொனியா அடுத்த கட்டத்திற்கு அடியெடுத்து வைத்தான். அவன் பத்சேபாளிடம் சென்று தாவீதுக்கு அனல் கொடுத்த பெண்ணை தனக்கு மனைவியாக கொடுக்கும்படி சாலொமோனிடம் கேட்கச்சொன்னான். அதில் எந்த விதமான தவறும் இல்லை என்று கருதி தன்னுடைய மகனிடம் இந்த விண்ணப்பத்தைக் கேட்டாள். ஆனால் அதொனியாவின் உள்நோக்கத்தை அறிந்த சாலொமோன் -"... நீர் சூனேம் ஊராளாகிய அபிஷாகை அதொனியாவுக்குக் கேட்பானேன் ? அப்படியானால் ராஜ்யபாரத்தையும் அவனுக்குக் கேளும், அவன் எனக்கு மூத்த சகோதரன், அவனுக்கும் ஆசாரியனாகிய அபியாத்தாருக்கும் செருயாவின் குமாரன் யோவாபுக்குமே அதைக் கேளும் என்றான்." (1இராஜ 2:22) உடனடியாக அதொனியாவை கொல்லும்படி கட்டளையிட்டார். ஆசாரியனாகிய அபியாத்தாரை ஆசாரியனாயிராதபடிக்குத் தள்ளிப்போட்டார். (27)

இதை கேள்விப்பட்ட யோவாப் அடுத்து தன்னை குறிவைப்பார்கள் என்று அறிந்தான். அவன் உயிரை தப்புவிப்பதற்கு பலிபீடத்து கொம்பை பிடிப்பதைத் தவிர வேறு வழியில்லை என்று எண்ணினான். ஆனால் அதுவும் வீணாய் போனது, சாலொமோனின் உத்தரவின் படி பெனாயா அவனை கொன்றுபோட்டான். (1இரா 2:29,34) யோவாபை கொல்ல உத்தரவு கொடுத்தபோது அவன் அப்னேரைக் கொன்றதை சாலொமோன் குறிப்பிட்டார். (32) அப்னேர் தாவீதால் கொல்லப்படவில்லை என்றும் யோவாபினால் கொல்லப்பட்டார் என்றும் சாலொமோன் விவரித்தார். அப்னேரை தங்களுடைய தலைவனாக கொண்டிருந்தவர்களுக்கு இந்த விளக்கம் தேவைப்பட்டதினால், சாலொமோன் இதை விவரித்திருக்கவேண்டும்.


ஒருவன் மற்றவனை கொலை செய்ததினால், கொன்றவனை வேறொருவன் கொலை செய்வது. இது எங்குப் போய் முடிவடையும் மகாத்மா காந்தி சொன்னது போல - " கண்ணுக்கு கண் என்ற கற்பனை முழு உலகத்தையும் குருடாக்கிவிடும்"

அடுத்து சாலொமோன் சீமேயியை அழைத்தனுப்பினார். அவருடைய கண்காணிப்பில் இருப்பதற்கு அவனை எருசலேமில் தங்கியிருக்கும்படி கட்டளையிட்டார். அதை ஏற்றுக்கொண்டு சீமேயு மூன்று வருடங்கள் எருசலேமில் தங்கியிருந்தான். அதற்குபின் தன்னுடைய வேலைக்காரர்களை தேடும்படி எருசலேமை விட்டு காத் ஊருக்கு போயிருந்தான். அவன் பட்டணத்தை விட்டு போனான் என்று சாலொமோனுக்கு அறிவிக்கப்பட்டபோது, அவனையும் கொல்லும்படி உத்தரவிட்டார். இந்தக் காரியங்கள் அனைத்தும் - "ராஜ்யபாரம் சாலொமோனின் கையிலே ஸ்திரப்பட்டது" என்ற வாசகத்தோடு முடிவடைகிறது. (1இராஜ 2:46)

சாலொமோனுக்கு உபத்திரவம் கொடுத்த ஒவ்வொருவரும் கொல்லப்பட்டார்கள் அல்லது செயல் இழக்கச்செய்யப்பட்டார்கள். இவ்வளவு தடைகளை தாண்டி இவர் சிங்காசனத்தில் அமர்ந்தார். தன்னுடைய இராஜ்யத்தை நடத்தும்போது, அயல் தேசத்தாரோடு நல்ல நட்புறவுகளை ஏற்படுத்தினார். தேவனுடைய வீட்டைக் கட்டுவதற்கு தேவையான பொருட்களை தன்னுடைய தந்தையாகிய தாவீது சேகரித்து வைத்திருந்தார். கலகத்தை அறிவித்து ஆலோசனை கூறுவதற்கு ஞானமுள்ள நாத்தான் கூடயிருந்தார். அவர் சிறந்த வரலாற்றாசிரியரும், தீர்க்கதரிசியுமாக இருந்தார். அவர் நீண்ட காலம் உயிரோடிருந்திருக்கவேண்டும். ஏனெனில், தாவீதின் ஆட்சியை குறித்து இன்னும் அதிகமான தகவல்கள் நாளாகமத்தில் காணப்படுவதாக சொல்லப்படுகிறது. (1நாளா 29:29) மற்றும் சாலொமோனின் ஆட்சியைக் குறித்தும் மற்ற புத்தகங்களில் காணப்படும் என்று சொல்லப்படுகிறது. (11நாளா 9:29) இந்த இரண்டு புத்தகங்களைத் தவிர நாத்தானால் எழுதப்பட்ட மற்றொரு புத்தகம் காணாமல் போய்விட்டது, ஒருவேளை அது என்றுமே கிடைக்காமலும் போகலாம்.

சாலொமோனின் ஆட்சி இவ்வளவு மகிழ்ச்சியாகத் துவங்கியது, ஆனால் அதை தொடர்ந்து வரும் நாற்பது வருடங்களில், எவ்வளவு மாற்றங்கள் ஏற்படும் என்று சிலர் மட்டுமே அறிந்திருந்தார்கள்.

# சாலொமோனின் இறுதி வருடங்கள்



"ராஜாவாகிய சாலொமோன், ... அந்நிய ஜாதியாரான அநேகம் ஸ்திரீகள்மேலும் ஆசைவைத்து... அவர்களோடு ஐக்கியமாயிருந்தான்... அவனுடைய ஸ்திரீகள் அவன் இருதயத்தை வழுவிப்போகப் பண்ணினார்கள்." - 1இராஜாக்கள் 11:1-3

**Regis Liberda**

நீண்ட காலம் மகிமையான ஆட்சி புரிந்தபின், தேவன் மேல், பற்றி எரிகிற பக்திவைராக்கியத்தோடு சாலொமோன் தன்னுடைய வாழ்க்கையை முடித்திருக்கவேண்டும் என்று ஒருவர் எதிர்பார்க்கலாம். ஆனால், துரதிஷ்டவசமாக அப்படி ஏதும் நடக்கவில்லை. மகா மேன்மையான அந்த இராஜாவின் ஆளுகையின் முடிவில் அவருடைய அவிசுவாசத்தினால், அவருடைய வாழ்க்கையில் தீராத களங்கம் ஏற்பட்டது.

சாலொமோனின் இறுதி நாட்களில் நடந்த சம்பவங்களை பற்றி 1இராஜாக்கள் 11ம் அதிகாரத்தில் வாசித்தறியலாம். ஆனால் இந்த காரியங்கள் நாளாகமம் புத்தகத்தில் காணப்படுவதில்லை. அவருடைய விசுவாசம் மற்றும் மகிமையான ஆட்சியைக் குறித்தே அறிவிக்கப்படுகிறது. கூடுதலான சில விபரங்கள் ரெகொபேயாமின் ஆட்சியின் துவக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ளது.

"அவனுக்குப் பிரபுக்கள் குலமான எழுநூறு மனையாட்டிகளும், முந்நூறு மறுமனையாட்டிகளும் இருந்தார்கள். அவனுடைய ஸ்திரீகள் அவன் இருதயத்தை வழுவிப்போகப் பண்ணினார்கள்." (1இராஜா 11:3) என்று வாசிக்கிறோம். ஆதாமின் பாவத்திற்கான பழி ஏவாளின் மேல் விழுந்ததுபோல குறிப்பாக, இந்த வேத பகுதி, சாலொமோனின் மேல் குற்றத்தை சுமத்தாமல், அவருடைய ஸ்திரீகள் மேல் குற்றம்சாட்டுகிறது.

நாளாகம புத்தகம் சாலொமோனின் ஆட்சியை மிக மேன்மையாக விவரித்தாலும், அப்படிப்பட்ட சூழ்நிலையில் அவருடைய தனிப்பட்ட பொறுப்புகளை குறைவாக விவரிக்க முடியாது. ஒரு ஞானமுள்ள இராஜா தன்னுடைய இருதயத்தை வழுவவிட்டிருக்கக்கூடாது அல்லது அவருடைய இருதயத்தை வழுவப்பண்ணும் மனைவிகளை அவர் திருமணம் செய்திருக்கக்கூடாது.

மிகவும் அருமையான ஆட்சி துவங்கிய ஞானமுள்ள இராஜாவின் ஆட்சி இவ்வளவு மோசமாக முடிவுக்கு வந்த காரணம் என்ன ?

### மனைவிகள் மற்றும் விக்கிரகாராதனை

இராஜாக்களின் புத்தகத்தின் துவக்கத்தில் சாலொமோன் இராஜாவின் சிறந்த நல்லொழுக்கமுள்ள பண்புகள் விவரிக்கப்பட்டிருந்தாலும் அவருடைய முடிவு நாட்களில் சோதனைகளை எதிர்த்து நிற்க திராணியற்றவராக போனார்.

இப்படிப்பட்ட செயல்பாடுகள் சாதாரணமாக நடக்ககூடியதே. நியாயாதிபதிகளின் காலத்தில், யோசுவாவின் மரணத்திற்கு பின் இஸ்ரயேலின் புத்திரர் தேவனுடைய பார்வையில் பொல்லாப்பானதை நடப்பித்து, பாகாலை பலவேறு வழிகளில் சேவித்தார்கள். (நியா 2:11) தேவனுடைய கற்பனையின்படி, நேர்மையான நடத்தையோடு தேவனை தொழுதுகொள்வதை காட்டிலும் விக்கிரகங்களை தொழுதுகொள்வது மிகவும் கவர்ச்சிகரமாக இருந்தது. சிற்றின்பங்களை தூண்டக்கூடிய கலாச்சாரங்கள், நாட்டியங்கள் மற்றும் அநேக பழக்கவழக்கங்கள் இதில் அடங்கும். தேவன் விக்கிரகங்களை வழிப்படுவதை அடியோடு வெறுப்பதாக அறிவித்திருந்ததால், அதை செய்யும் போது நிச்சயமாக மோசமான சூழ்நிலைகளை எதிர்பார்த்திருக்கவேண்டும். அல்லது இஸ்ரயேலில், இராஜாவைக்கூட இது பாதிக்கலாம் என்ற அபாயத்தைக் குறித்து அவர் அறியாதிருந்தாரா ?

பொதுவாக இஸ்ரயேல் ஜனங்கள் தங்களுக்கு ஒரு இராஜா வேண்டும் என்று தேவனிடம் கேட்கும்போது, தேவன் - "உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கும் தேசத்தில் நீ போய்ச் சேர்ந்து, அதைச் சுதந்தரித்துக்கொண்டு, அதில் குடியேறினபின், நீ - என்னைச் சுற்றிலும் இருக்கிற சகல ஜாதிகளையும்போல, நானும் எனக்கு ஒரு ராஜாவை ஏற்படுத்தவேண்டும் என்பாயானால், அவன் இருதயம் பின்வாங்கிப் போகாதபடி அவன் அநேகம் ஸ்திரீகளைப் படைக்கவேண்டாம், வெள்ளியும் பொன்னும் தனக்கு மிகுதியாய்ப் பெருகப்பண்ணவும் வேண்டாம்." என்று கட்டளையிட்டார். (உபா 17:14,17)

ஆகவே ஏற்படப்போகும் அபாயத்தை குறித்து சாலொமோன் முன்னதாகவே அறிந்திருந்தார். குறிப்பிட்ட எண்ணிக்கை சொல்லப்படாமல் இருந்தாலும், ஆயிரம் என்ற எண்ணிக்கை கூடுதலாகவே தோன்றுகிறது. தன்னுடைய இராஜ்யத்தை ஸ்திரப்படுத்துவதற்காக மட்டும் அவர் அந்நிய இராஜாக்களோடு சம்பந்தம் வைக்கவில்லை, அவரும் விழுந்து போன மனித நிலையில் இருந்ததினால், தன்னுடைய சுயத்திற்காகவும், சுகத்திற்க்காகவும், வீண் பெருமைக்காகவும் அவர் இவைகளை நடப்பித்தார்.

"மாயை, மாயை, எல்லாம் மாயை என்று பிரசங்கி சொல்லுகிறான்" (பிரச 1:2) இராஜாக்களின் புத்தகம்

குறிப்பாக செய்திகளை கொடுக்காவிட்டாலும், அவருடைய மனைவிகள் விக்கிரகங்கள் நிமித்தமாக அவரை எப்படியாக வழிவிலக செய்திருப்பார்கள் என்று நாம் கற்பனை செய்வதற்கு தகவல்களைக் கொடுக்கிறது.

❖ புறஜாதி மனைவிகள் தங்களுடைய தெய்வங்களை வழிபட ஒரு இடத்தையும், அதற்கேற்ற பலிபீடங்களையும் இன்னும் மற்ற பல காரியங்களையும் இராஜாவினிடத்தில் பொறுமையோடு வேண்டியிருக்கலாம். அதற்குப்பின் அவர்களின் வழிபாட்டை காணும்படி இராஜாவை அழைத்திருக்கலாம். விசேஷமாக அவர்களின் சம்பிரதயாத்தின்படியும், முறைமையின் படியும் இப்படிப்பட்ட மகிமையான இராஜாவை புகழக்கூடிய காரியங்களை அவர் கண்டிருக்கலாம். நிச்சயமாக அனைத்தும் சாலொமோனின் வீழ்ச்சிக்கு சாதகமாகவே அமைந்திருக்கும்.

❖ சாலொமோன் வயது சென்றவரான போது, அவருடைய வாலிப நாட்களில் இருந்த பலத்தை போலிராமல், அவருடைய பலமும், அதினால் அவரடைந்த மகிழ்ச்சியும் குன்றிபோயிருக்கவேண்டும். ஆகவே அவர் - " சீதோனியரின் தேவியாகிய அஸ்தரோத்தையும், அம்மோனியரின் அருவருப்பாகிய மில்கோமையும் (மீண்டும் செழுமையாக்கும் )பின் பற்றினான்" (1இரா 11:5) என்று வாசிக்கிறோம். ஒருவேளை இவைகளை வழிபட்டால் மீண்டுமாக அந்த பலமும், இளமையும் கிடைக்கும் என்று அவருடைய மனைவிகள் அவரிடத்தில் சொல்லியிருக்கலாம்.

இன்னும் பல காரணங்கள் இருந்தாலும், தன்னுடைய முப்பதாம் வருட ஆட்சிக்குபின் அவர் வயது சென்றவராகவும், தன்னுடைய பெலன் குன்றிபோனதை அவர் அறிந்திருக்கவேண்டும்.

சாலொமோனுக்கு பின்வந்த இருபது யூத ராஜாக்களில், ஏழு பேர் மட்டுமே தேவனுடைய பார்வையில் நியாயமானதை செய்தார்கள் என்றும் மற்ற இஸ்ரயேல் தேசத்தில் பத்தொன்பது ராஜாக்களில் ஒரே ஒரு ராஜா தேவனுடைய பார்வையில் நீதியை நடப்பித்தார் என்றும் வாசிக்கிறோம். இராஜ்யத்தின் இரண்டு பாகங்களிலும் விக்கிரகராதனை அதிகமான ஆதரிக்கப்பட்டது என்றும் அதன் காரணமாக ஜனங்கள் அதிகமாக பாதிப்புக் -குள்ளானார்கள் என்பதையும் இது தெளிவாக காட்டுகிறது.

சிலர் பகிரங்கமாக விக்கிரகராதனைகளை செய்தார்கள் என்றும் சிலர் தேவனையும், விக்கிரகங்களையும் ஆராதித்தார்கள் என்றும் இராஜாக்கள் மற்றும் நாளாகம புத்தகத்தில் நாம் வாசித்து அறியலாம். தேவனை தொழுதுகொண்டபின் எதையும் செய்யலாம் என்று எண்ணினார்கள்.

உண்மையில் சாலொமோன் மட்டும் மனைவிகளால் விழுந்துபோகவில்லை, யேசபேலினால் ஆகாப் இராஜாவும் விழுந்துபோனார். ஆனால் யேசபேல் ஆகாபின் ஒரே மனைவியாக இருந்தாள். அவனுடைய ஆட்சியின் துவக்கத்திலிருந்தே, அவனை தீமையான வழியில் நடத்துவதில் அவள் மிகவும் புத்திசாலியாக இருந்தாள். ஆனால் சாலொமோனின் விஷயத்தில் இப்படி நடந்திருக்க வாய்ப்பில்லை. ஏனெனில் சாலொமோன் வயது சென்றபோது அவருடைய மனது வழுவிப்போனதாக நாம் வாசிக்கிறோம். ராஜாவாகிய சாலொமோன் தன்னுடைய நடத்தையை ஏன் மாற்றிக்கொண்டார்?

### சவால்

எல்லாவற்றையும் அதிகமாக விரும்புவது மனித இயல்பு. அது பணம், ஐசுவரியம், புகழ், பேர், இன்னும் எதுவானாலும் சரி. ஆனால் சாலொமோனின் விஷயத்தில் தேவனால் ஆசீர்வதிக்கப்பட்ட நிலையில் தன்னுடைய இளவயதிலேயே அவர் அனைத்தையும் பெற்றிருந்தார். அவர் செய்யவேண்டும் என நினைத்த அனைத்தையும் செய்து முடித்தார். அவர் அடையவேண்டிய இலக்கு ஒன்றும் இல்லை.

சாலொமோன் ஐசுவரியவானாக இருந்தார். ஒரு ஐசுவரியமுள்ள மனுஷன், தன்னுடைய சுற்றுப்புற சூழ்நிலையில் அடிக்கடி காணக்கூடிய விலையேறப்பெற்ற பொருட்களை பார்த்துக்கொண்டிருப்பதால் - "ஏற்ற சமயத்தில் சொன்ன வார்த்தை வெள்ளித்தட்டில் வைக்கப்பட்ட பொற்பழங்களுக்கச் சமானம்" - என்ற வசனங்களை சொல்லமுடிந்தது. (நீதி 25:11)

தாவீதின் வாழ்க்கையை விட சாலொமோனின் வாழ்க்கை வித்தியாசமானது. தாவீது ஆட்சி செய்ய தன்னுடைய முப்பதாவது வயது வரைக்கும் காத்திருக்கவேண்டியதாக இருந்தது. அநேக பிரச்சனைகளையும், அநேக யுத்தங்களையும், தன்னுடைய பிள்ளைகள் இடையில் ஏற்பட்ட சண்டைகளையும் அவர் தீர்க்கவேண்டியதாக இருந்தது. மேலும், அவர் துணிகரமாக செய்த பாவத்திற்கு தண்டனைகளை சர்வதேசளவில் அனுபவிக்க வேண்டியதாக இருந்தது. ஆனால் சாலொமோன் அமைதியாக ஆட்சியில் அமர தாவீது வழிவகுத்தார். முதலாவது, தாவீது உயிரோடிருக்கையில், அவருக்கு பின் சாலொமோனை இராஜாவாக ஜனங்கள் ஏற்றுக்கொள்ளும்படியாக தன்னுடைய சிங்காசனத்தில் சாலொமோனை முடிசூட்டினார். (1இரா 1) அவர் தன்னுடைய ஊழியக்காரர்களின் அமைப்பைப் பற்றி கட்டளைகளையும், அறிவுரைகளையும் சாலொமோனுக்கு கொடுத்தார்.

### ஆலயம் கட்டுதல்

சாலொமோன் இளவயதிலேயே தன்னுடைய ஆட்சியை துவங்கினார். ஆலயம் கட்டி தீர்ந்தபின் ஒரு மகிமையான விருந்தை ஏற்பாடு செய்தார். தன்னுடைய மாளிகையை கட்டித்தீர்க்க இருபது வருடங்களானது. (1இரா 9:10) அவரை பொறுத்தவரையில் இன்னும் முக்கியமான

காரியங்கள் கட்டுவதற்கோ, உருவாக்குவதற்கோ ஒன்றுமில்லை. சமுதாயத்தில் அவருடைய செல்வாக்கையும், தகுதியையும் வரக்கூடிய வருடங்களில் தக்கவைத்தால் போதுமானதாக இருக்கும்.

இயல்பாக, சில வியாபாரங்களிலும், தொழில் நுட்ப காரியங்களிலும் ஈடுபட்டு, தன்னுடைய எல்லைகளை விஸ்த்தரித்து, தன்னுடைய ஐசுவரியத்தை கூட்டியிருக்கலாம். ஆனால் அது சவாலாக இருக்கவில்லை. சொத்தை பராமரிப்பதிலும், மகிமையை தக்கவைத்துகொள்வதிலும் எந்தவிதமான சுவாரஸ்யமும் இருப்பதில்லை.

பல வருடங்கள் மிகவும் கஷ்டப்பட்டு ஒரு தொழிற்சாலையை உருவாக்கினவர், அதை தொடர்ந்து நல்ல முறையில் பராமரித்து நடத்திவருவதை காட்டிலும், அதை உருவாக்கும்போது அவர் பெற்ற சந்தோஷங்கள் அதிகம் என்று சொல்லுவார்.

உசியா இராஜாவின் காரியத்தை எடுத்துக் கொள்ளலாம் (11நாளா 26) அவர் பெறவேண்டிய சகலத்தையும் அவருடைய கீழ்படிதலினால் தேவனிடத்திலிருந்து பெற்றார். நன்றி, அவருக்கு இனி வேண்டியது ஒன்றும் இல்லை. ஆசாரியர்களை தடுத்து அவர்கள் செய்யவேண்டிய தூபம் காட்டும் வேலையை அவர் செய்தார். தேவன் குஷ்டரோகத்தினால் அவரை தண்டித்தார். இன்னும் அதிகமாக விரும்பி, அதை அடைய ஆவலோடு முயற்சிக்கும் நேரத்தில் வீழ்ச்சி அடைவோருக்கு உசியா இராஜா ஒரு எடுத்துகாட்டாக இருக்கிறார்.

"அவன் அநேக குதிரைகளைச் சம்பாதியாமலும், அநேக குதிரைகளைச் தனக்குச் சம்பாதிக்கும்படிக்கு ஜனங்களைத் திரும்ப எகிப்திற்குப் போகப்பண்ணாமலும் இருக்கக்கடவன், இனி அந்த வழியாய் நீங்கள் திரும்பிப்போகவேண்டாம் என்று கர்த்தர் உங்களுக்குச் சொல்லியிருக்கிறாரே. அவன் இருதயம் பின்வாங்கிப் போகாதபடி அவன் அநேகம் ஸ்திரீகளைப் படைக்கவேண்டாம், வெள்ளியும் பொன்னும் தனக்கு மிகுதியாய்ப் பெருகப்பண்ணவும் வேண்டாம்." (உபா 17:16,17) ஏனெனில் வருங்காலத்தில் எந்த ஒரு ராஜாவுக்கும் அதிகமான ஐசுவரியங்கள் ஆபத்தை விளைவிக்கும் என்று தேவன் முன்னறிந்திருந்தார். அதிகமான மனைவிகள் அதிக சொத்துக்களாக இங்கு கருதப்படவில்லை. ஆனால் அதிகமான மனைவிகளை உடையவர்கள், தங்களுடைய மனைவிகளின் பழக்கவழக்கத்தின்படி வாழவைப்பதற்கு அதிக வசதியும், மகிமையும், ஆஸ்திகளும் தேவைப்படும். இஸ்ரயேல் தேசத்திற்கு அருகாமையில் இருக்கும் தேசங்கள் (எகிப்து மற்றும தீரு) சாலொமோனுக்கு இருந்த செல்வாக்கையும், இராஜ்யத்தின் மகிமையையும் கண்டு தங்களுடைய ராஜகுமாரத்திகளை அவருக்கு மனைவிகளாக கொடுத்தார்கள்.

தேவன் குதிரைகளை ஏன் குறிப்பிடவேண்டும்? அபாயம் வரும்போது பயத்தினால், ஜனங்கள் மீண்டும் எகிப்துக்கு போய்விடுவார்கள் என்ற பயத்தினால் இவ்வாறு சொன்னார் என்று 16ம் வசனம் கூறுகிறது. ஆனால் சாலொமோனின் நாட்களில் இஸ்ரயேல் பரிசுத்த பூமியில் ஸ்திரமாக ஸ்தாபிக்கப்பட்டது. இன்றைய காலத்தில் கார்கள் நான்கு சக்கரவாகனங்கள் நம்முடைய சொத்துகளை மதிப்பிடுவதை போல அக்காலத்தில் குதிரைகள் ஆஸ்திகளை அளவிட்டது. உண்மையில் விலையுயர்ந்த கற்கள் மிகவும் மேன்மையுள்ளதாகவும், ஐசுவரியவான்களை அடையாளப்படுத்துகிறது. இவைகளைப் பற்றிய சம்பாஷனை பணக்காரர்களுக்கு இடையில் மட்டுமே காணப்படும்.

சாலொமோனுக்கு ஆயிரத்து நானூறு இரதங்களும், பன்னீராயிரம் குதிரைவீரரும் இருந்தார்கள். பழங்காலத்து படையில் குதிரைகளும், இரதங்களும் மிக வல்லமையான ஆயுதங்களாக இருந்தது. தேவன் அவரோடிருந்தார் என்ற உறுதியை சாலொமோன் பெற்றிருந்தாலும், அக்காலத்தில் மிக வல்லமையான படை அவருக்கு தேவைப்பட்டது. அவர் தேவன் மேல் வைத்திருந்த விசுவாசத்தில் குறைவுள்ளவராக இருந்தாரா? இருந்திருக்கக்கூடும். ஏனெனில், அவருடைய இறுதி காலத்தில், மிக வல்லமையான சேனையும் மாயையே என்பதை உணர்ந்து மனம் வருந்தினார்.

**வந்த பயன்கள்**

சாலொமோன் தேவனுக்கு கீழ்படிந்து, விசுவாசத்தோடிருந்த காலம் வரைக்கும், தேவன் "எருசலேமிலே வெள்ளியைக் கற்கள்போலவும், கேதுரு மரங்களைப் பள்ளத்தாக்குகளில் இருக்கும் காட்டத்தி மரங்கள்போலவும் அதிகமாக்கி...சாலொமோனை மிகுதியாக ஆசீர்வதித்தார்." (1இரா 10:27) இஸ்ரயேல் ஜனங்கள் எந்த விதமான பாடுகளை அனுபவியாதபடி இவ்வளவு திரளான சொத்துக்களை சேர்ப்பதற்கு தேவன் சாலொமோனை அனுமதித்தார்.

ஆனால் சாலொமோன் தேவனை சேவிப்பதை விட்டுவிட்டபோது, தேவனுடைய ஆசீர்வாதங்கள் நிறுத்தப்பட்டது. ஆயினும், அரண்மனை செலவுகள் அதிகரித்ததினால், அதற்கான வருவாயை வேறு வழிகளிலிருந்து பெறவேண்டியதாக இருந்தது. வலுக்கட்டாயமாக ஜனங்கள் அதிகமான வேலைகளை செய்திருக்கவேண்டும் என்பது தெளிவாக காணப்படுகிறது. ஏனெனில், "உம்முடைய தகப்பன் பாரமான நுகத்தை எங்கள்மேல் வைத்தார், இப்போதும் நீர் உம்முடைய தகப்பன் சுமத்தின கடினமான வேலையையும், அவர் எங்கள்மேல் வைத்த பாரமான நுகத்தையும் இலகுவாக்கும்" என்று ஜனங்கள் ரெகொபேயாமிடம் வேண்டினார்கள் என்று வாசிக்கிறோம். ( 1இரா 12)

சாலொமோனுக்கு எதிராக ஆதாத் மற்றும் ரேசோன் ஆகிய இரண்டு எதிராளிகளை தேவன் தூண்டிவிட்டார். இவர்களின் பெற்றோர் அல்லது எஜமான்களை தாவீதின் சேனை கொலை செய்ததால், இவர்கள் பழிவாங்க வகைதேடினார்கள். "ஆதாத் பொல்லாப்புச் செய்ததுமல்லாமல், ரேசோன் சாலொமோனுடைய நாளெல்லாம் இஸ்ரயேலுக்கு விரோதியாகி, சீரியாவின்மேல் ராஜாவாயிருந்து, இஸ்ரயேலைப் பகைத்தான்." (1இராஜ 11:25) ஒருவேளை ஆதாத் தெற்கில் ஏதோமுக்கும், சிரியாவின் இராஜா ரேசோன் வடக்கிலிருந்து வந்தும் தங்களால் முடிந்த வரைக்கும் சாலொமோனின் உடைமைகளை கொள்ளையிட்டிருக்கலாம்.

இருப்பினும், இஸ்ரயேலின் பத்து கோத்திரங்களை ஆட்சிசெய்யும்படி அகியா தீர்க்கதரிசியால் முன் அறிவிக்கப்பட்ட யெரோபேயாம், சாலொமோனின் முதல் எதிரியானான். சவுலின் ஆட்சி தாவீதுக்கு கொடுக்கப்படும் என்று சாமுயேல் முன்னதாக அறிவிக்கப்பட்டது போல இதுவும் அறிவிக்கப்பட்டது.

வருங்காலத்தில் நடப்பதை சாலொமோன் அறிந்தபோது, யெரோபேயாமை அவன் கொல்ல முயற்சித்தும் தோல்வியடைந்தான். (1இரா 11:40) இதை அறிந்த யெரோபேயாம் எகிப்துக்கு விரைந்தோடினான். சவுல் தாவீதை பகைத்துபோல, சாலோமோன் யெரோபேயாமை பகைத்தார். தன்னுடைய அவிசுவாசத்தினால் தேவன் செய்யக்கூடிய காரியங்களை ஏற்றுக்கொள்ள சாலொமோன் மறுத்தார். ஒரே விதமான வரலாறு இஸ்ரயேலில் தொடர்ந்தது.

நாற்பது வருடங்கள் ஆட்சிசெய்தபின் சாலொமோன் தன்னுடைய அறுபதாவது வயதில் மரித்துபோனார். தன்னுடைய தந்தையாகிய தாவீதைவிட பத்துவருடங்கள் முன்னதாகவே மரித்தார். அதிகமான யுத்தங்களிலும், போர்களிலும், வனாந்திரபிரயாணங்களிலும் தாவீது தன்னுடைய காலங்களை செலவழித்தார். சாலொமோனோ இன்பமான வாழ்க்கையை வாழ்ந்து பத்து வருடங்களுக்கு முன்னதாகவே மரித்துபோனார்.

இருப்பினும், பிரசங்கியில் வாசிக்கிறபடி, சாலொமோனின் இறுதிகாலத்தில், அவர் வித்தியாசமான கண்ணோட்டதில் இருந்ததாக தோன்றுகிறது. சாலொமோனின் மயக்கம் தெளிந்தபின் எல்லாம் மாயை என்று அவர் தெளிவாக அறிந்துகொண்டார். "வாலிபனே, உன் இளமையிலே சந்தோஷப்படு, உன் வாலிப நாட்களிலே உன் இருதயம் உன்னைப் பூரிப்பாக்கட்டும், உன் நெஞ்சின் வழிகளிலும், உன் கண்ணின் காட்சிகளிலும் நட, ஆனாலும் இவையெல்லாவற்றினிமித்தமும் தேவன் உன்னை நியாயத்திலே கொண்டுவந்து நிறுத்துவார் என்று அறி." (பிரச 11:9)

தேவன் இஸ்ரயேல் தேசத்தை பிரித்து சாலொமோனின் இறுதிநாட்களில் செய்த பாவத்திற்கு தகுந்தபடி அவரை தண்டித்தார். ஒருவேளை இவர் தாவீதின் குமாரனாக இராவிட்டால் தண்டனை இன்னும் கொடுமையாகவும் இருந்திருக்கக்கூடும். ஏனெனில் -" ஆனாலும் ராஜ்யபாரம் முழுவதையும் நான் அவன் கையிலிருந்து எடுத்துப் போடுவதில்லை, நான் தெரிந்துகொண்டவனும், என் கற்பனைகளையும் என் கட்டளைகளையும் கைக்கொண்டவனுமான என் தாசனாகிய தாவீதினிமித்தம், அவன் உயிரோடிருக்கும் நாளெல்லாம் அவனை அதிபதியாக வைப்பேன்" (1இரா11:34) என்று தேவன் சொல்லியிருந்தார்.

**கிறிஸ்தவர்களுக்கான பாடங்கள்**


இராஜாவாகிய சாலொமோனின் வாழ்க்கை நமக்கு அநேக பாடங்களை கற்பிக்கிறது. நம்முடைய உடன்படிக்கையின் துவக்கத்தில் நாம் தேவனுக்குரிய சகல காரியங்களையும் செய்யவும், சகலத்திலும் அவருடைய சித்தத்தின்படி செய்து நம்முடைய குணங்களை வளர்த்துகொள்ளுவோம் என்று உறுதியளிக்கிறோம். கிறிஸ்துவின் குடும்பத்தினராக ஏற்றுக்கொள்ளப்படவும், வரக்கூடிய ராஜ்யத்தில், உலகத்தில் உள்ள முழு குடும்பங்களையும் ஆசீர்வதிக்க - நமக்கு ஒரு குறிக்கோள் இருக்கிறது, ஒரு சவால் முன்வைக்கப் பட்டிருக்கிறது. இந்த இலக்கை அடைய நம்முடைய ஜீவிய காலம் முழுவதும் முயற்சிக்கவேண்டும். இதை அறிந்திருந்த சாலொமோன், மிக பிரமாண்டமான ஆலயத்தை கட்டி தீர்ந்தபின் அவர் சகலத்தையும் அடைந்ததாக எண்ணி, மேலும் ஏதோ காரியங்களை கண்டடைய தன்னுடைய நோக்கத்தை திருப்பினார், அது விக்கிரகாராதனையில் முடிவடைந்தது.

நம்முடைய இலக்கை அடைய நித்தமும் நாம் கடுமையாக முயற்சிக்கவேண்டும். அதற்காக தேவனுடைய வார்த்தைகளை ஆழமாக படிக்கவேண்டும், வாய்ப்புகள் கிடைக்கும்போதெல்லாம் அவருடைய நற்செய்திகளை அறிவிக்கவேண்டும். நம்முடைய வாழ்க்கையை இப்படியாக செலவழித்தால் நாம் நிச்சயமாக திசை திருப்பப்படுவதற்கு அனுமதிக்கப் படமாட்டோம். "இப்படிப்பட்ட வாக்குத்தத்தங்கள் நமக்கு உண்டாயிருக்கிறபடியினால், பிரியமானவர்களே, மாம்சத்திலும் ஆவியிலும் உண்டான எல்லா அசுசியும் நீங்க, நம்மைச் சுத்திகரித்துக்கொண்டு, பரிசுத்தமாகுதலைத் தேவபயத் -தோடே பூரணப்படுத்தக்கடவோம்." (11கொரி 7:1)

நாம் அளித்த வாக்குறுதிகள் நம்முடைய சிந்தைகளை பரலோக நம்பிக்கைகளுக்கும், ஆவிக்குரிய ஆதாயத்திற்கேற்ற மேலான காரியங்களை நோக்கி உயர்த்தட்டும். ஆகவே நாம் சாலொமோனின் பாவங்களுக்கு விலகியிருப்போமாக.

இணைகளைக் கொண்ட ஒரே புத்தகம்

# நீதிமொழிகள்



"அவன் மூவாயிரம் நீதிமொழிகளைச் சொன்னான், அவனுடைய பாட்டுக்கள் ஆயிரத்து ஐந்து."

- 1இராஜாக்கள் 4:32

**Timothy Thomssen**

பரலோக பிதாவினுடைய அங்கீகாரத்தை பெற விரும்பும் கிறிஸ்தவர்கள், வேதாகமத்தில் உள்ள கற்பனைகளை தங்களுடைய அன்றாட வாழ்க்கையில் நடைமுறைப்படுத்தி, ஒழுக்கமான வாழ்க்கை வாழ்வது, மிக முக்கியமானதொன்று என்று இந்த வேத பகுதி கருதுகிறது. அநேக விசுவாசிகள் தங்களை ஊக்குவிப்பதற்காகவும், ஆவிக்குரிய ஐக்கியத்திற்காகவும், கிறிஸ்துவ அனுபவங்களை பகிர்ந்து கொள்வதற்காகவும், உபதேசங்களுக்காகவும் வேத பாட வகுப்புகளில் பங்கெடுத்தாலும், இவையனைத்தையும் ஒருவருடைய தனிப்பட்ட வாழ்க்கையில் நடைமுறைப் படுத்தினால் மட்டுமே ஆவிக்குரிய வாழ்க்கையில் பயனுள்ளதாக இருக்கும். "நீங்கள் என்னிடத்தில் கற்றும் அடைந்தும் கேட்டும் கண்டும் இருக்கிறவைகளெவைகளோ, அவைகளையே செய்யுங்கள், அப்பொழுது சமாதானத்தின் தேவன் உங்களோடிருப்பார்." (பிலி 4:9)

**பலி**

ஒருவர் கிறிஸ்துவுக்குள் புது சிருஷ்டியாக இருந்தால், அவர் நிச்சயமாக பலி செலுத்த வேண்டும். இராஜரீகமான ஆசாரியத்துவம், ஆசீர்வதிப்பதற்கு முன் பலிசெலுத்த வேண்டும். பொதுவாக நம்முடைய சமுதாயத்தை பொருத்த வரையில் "பலி" என்ற வார்த்தை அந்நியமாக தோன்றலாம். இருப்பினும், நாம் கிறிஸ்துவின் சீஷர்களாக இருந்து, நம்மை நாமே வெறுத்தால், புது சிருஷ்டியை பணையமாக வைத்து, நம்முடைய உலக பிரகாரமான விருப்பங்களின் வளர்ச்சியை குறைத்து கொள்ளலாம். அநேக தேவ ஜனங்களுக்கு குடும்ப பொறுப்புகளையும் , நியாயமான கடமைகளையும் பலிசெலுத்த முடியாமல் போகிறது. ஆகவே நம்முடைய தனிப்பட்ட நேரங்கள் மற்றும் தேவைகளை சரியான முறையில் பலி செலுத்தினாலே போதும், தேவன் நம்முடைய பலிகளை மகிழ்ச்சியோடு அங்கிகரிப்பார். ஏனெனில், நாம் அவர் மேல் வைத்திருக்கும் அன்பை வெளிப்படுத்த இதுவே வழியாக இருக்கிறது. "துர்இச்சைகளுக்கு இடமாக உடலைப் பேணாமலிருந்து, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைத் தரித்துக்கொள்ளுங்கள்." (ரோமர் 13:14)

நாம் நம்மையே பலி செலுத்துவதற்கு நம்மை சுற்றி அநேக தடைகள் சூழ்ந்திருக்கிறது. அவைகள் நம்முடைய பலத்தை குறைத்து, ஆவியை குன்ற செய்கிறது. இதில் நம்முடைய கண்களுக்கு குளிர்ச்சியானவைகளும், மாம்சத்திற்கு இன்பமானவைகளும் (பொதுவான மனிதர்கள் இவைகளை உரிமையோடு அனுபவித்து மகிழும் காரியங்கள்) அடங்கும். நாம் என்ன செய்யவேண்டும் என்றும், என்ன செய்யக்கூடாது என்றும் தீர்மானிக்க, ஒரு எளிமையான வழிகாட்டியாக நமக்குள்ளே எழும் கேள்விகளை நாம் எடுத்துகொள்ளலாம். நாம் செய்யும் வேலைகள் நமக்குள் இருக்கும் புது சிருஷ்டியை வளர்க்குமா அல்லது நம்முடைய மாம்சத்தை மட்டும் திருப்திப்படுத்துமா என்று நாம் கேள்விகளை எழுப்பி, சிந்தித்து செயல்படவேண்டும். புது சிருஷ்டியின் வளர்ச்சிக்காக நாம் முயற்சிக்கும் பொழுது, நிச்சயமாக நாம் தேவனால் அங்கிகரிக்கப்பட்ட நன்மையான காரியங்களை நடப்பிக்கிறோம் என்று உறுதிகொள்ளலாம். ஒவ்வொரு விசுவாசிகளுக்கும் எதை பலி செலுத்த வேண்டும் என்று தீர்மானிப்பதற்கு முழுமையான சுதந்திரம் அளிக்கப்பட்டிருக்கிறது. "எல்லாவற்றையும் அனுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு, ஆகிலும் எல்லாம் தகுதியாயிராது, எல்லாவற்றையும் அனுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு, ஆகிலும் எல்லாம் பக்திவிருத்தியை உண்டாக்காது. ஆகையால் நீங்கள் புசித்தாலும், குடித்தாலும், எதைச் செய்தாலும், எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக்கென்று செய்யுங்கள்." (1கொரி10:23,31)

**ஒப்புக்கொடுத்தல்**

தேவனுடைய சித்தத்திற்கு ஒப்புக்கொடுக்க, அநேக வசனங்களில் உள்ள எடுத்து காட்டுகள் விசுவாசிகளுக்கு வழிகாட்டுகிறது - "கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது, அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார்." (பிலி 2:5- 8)

நம்முடைய தனிப்பட்ட சித்தங்களை தேவனுடைய சித்தமாக ஒப்புக்கொடுப்பது நடைமுறைக்கு அப்பார்ப்பட்ட ஒன்றாகும். வசனங்களின் ஆதாரங்கள் இன்றி நம்முடைய தனிப்பட்ட நோக்கங்கள் இருந்தாலும், "எழுதப்பட்டிருக்கிறது" என்று எந்த விதமான மாற்றங்கள் இல்லாதபடி துவங்குகிறார். நம்முடைய சில குறிப்பிட்ட சூழ்நிலைகளில், நாம் விரும்பாமலிருந்தாலும், பொறுமையுடன் நம்மை அர்ப்பணிப்பதே தேவனுடைய சித்தத்தை செய்வதின் ஒரு பகுதியாகும். "ஆகையால், ஏற்றகாலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்." (1பேது 5:6)

உங்களுக்கு எப்போதாவது ஒரு இக்கட்டான அனுபவங்கள் ஏற்பட்டு "இதை நான் அனுபவிக்க அவசியமில்லை" என்று நினைத்ததுண்டா ? நாம் கிறிஸ்துவின் சிந்தையை தரித்திரக்க வேண்டியவர் களாயிருக்க, கிறிஸ்து எதிர்நோக்கின ஒவ்வொரு -கசப்பான அனுபவங்களையும் சற்று சிந்தித்து

பார்க்கவேண்டும். தேவனுடைய சித்தத்தை செய்வதில் நமக்கு தொய்வு ஏற்பட்டால் நாம் பாவத்திற்கு விரோதமாய்ப் போராடுகிறதில் இரத்தஞ்சிந்தப்படத்தக்கதாக நாம் எதிர்த்து நிற்கவில்லை என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும். (எபி 12:1-14)

**பிறரை விமர்சிப்பதை தவிர்க்க வேண்டும்**

"உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல், அவராலே உலகம் இரட்சிக்கப்படுவதற்காகவே அவரை அனுப்பினார்." (யோவா 3:17) நம்மால் முடிந்த வரையில் கிறிஸ்துவின் ஆவியை பெற்றுக்கொள்ளவேண்டி -யவர்களாயிருக்கிறோம். நம்முடைய ஆண்டவர் அனைவரின் சிந்தைகளை அறிந்தவராக இருந்தாலும், அவரை பரியாசம் செய்து, அவர் மேல் குற்றம் சுமத்தின பரிசேயர்கள், சதுசேயர்கள் உட்பட அனைவருக்காகவும், மரித்தவர் அவரே. நம்முடைய கிரியைகளும், நோக்கங்களும், நம்முடைய நீதிகளை மற்றவரிடத்தில் வெளிப்படுத் -தக்கூடாது. நாம் மாம்சத்திலிருக்கும் நாள்வரை இதை நிலைநிறுத்த தொடர்ந்து போராடவேண்டும். ஜெபத்தின் வழியாகவும், மனம் வருந்துதலினாலும், இதற்கு ஏற்படும் தடைகளை அகற்ற முயற்சிக்கவேண்டும்.

இதைக் குறித்து நம்முடைய ஆண்டவர் கூறும் பொழுது - "நீ உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை உணராமல், உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பைப் பார்க்கிறதென்ன ? இதோ, உன் கண்ணில் உத்திரம் இருக்கையில் உன் சகோதரனை நோக்கி - உன் கண்ணிலிருக்கிற துரும்பை எடுத்துப்போட வகைபார்ப்பாய். " (மத் 7:3-5) என்று நமக்கு அறிவுரை கூறுகிறார். எந்த தனிப்பட்ட நபரின் இருதயத்தின் நோக்கங்களையும் நியாயந்தீர்க்க நமக்கு அதிகாரம் கொடுக்கப்படவில்லை. கூடுதலாக, நாம் கிறிஸ்துவின் ஆவியில் அளவில்லாமல் நிரப்பப்பட்டவர்களாக, எல்லா தீய காரியங்களும் மாம்சத்தின், கிரியைகள் என்று அடையாளம் கண்டுகொள்ளவேண்டும். ஏனெனில், "அன்பு தீங்கு நினையாது" (1கொரி 13:5) என்று நாம் வாசிக்கிறோம். மற்ற சகோதரர்கள் தங்களுடைய அர்ப்பணிக்கப்பட்ட வாழ்க்கைக்கு முரண்பாடாக செய்யும் தவறுகளை நாம் சந்தேகிக்கக்கூடாது. அதற்கு பதிலாக அவர்களுடைய அறியாமையினாலே இவைகள் நடந்து விட்டது என்று நாம் கருதிவிட்டு, அவர்களை நியாயந்தீர்க்காமல், விசாரித்து, அறிவுரைகளை கூறுவது மிகவும் ஏற்றதாக இருக்கும். ஏனெனில், பொதுவாக அனைவரும் இப்படிப்பட்ட தவறுகளுக்கு குற்றம் சுமத்தப்படுகிறோம். ஆனால் இப்படிப்பட்ட பாடங்களின் மூலம் தேவனுடைய பிள்ளைகள் வார்த்தைகளினால் ஏற்படும் தவறுகளை தடுக்க எடுக்கும் பிரதிக்கினை களை அதிகமாக உறுதிப்படுத்திகொள்வார்கள்.

**பிரிவு**

சத்தியத்தின் ஆவியை தங்களுடைய வாழ்க்கையில் நடைமுறைபடுத்தும் விசுவாசிகளை அடையாளப்படுத்தும் ஒரு முக்கியமான குணலட்சணம் - பரிவு. "அன்பு, அக்கறை மற்றும் மற்றவர்களுக்கு உதவிசெய்யும் மனப்பான்மையின் கலவையே பரிவு. சில நேரங்களில் இரக்கம் என்ற வார்த்தையும் இதற்கு பதிலாக பயன்படுத்தப்படுகிறது. ஆனால் பரிவு என்ற வார்த்தைக்கு இதை விட அதிகமான அர்த்தங்கள் உள்ளடக்கப்பட்டு, துன்பப்படும் ஜனங்களுக்கு மனப்பூர்வமாக முன்வந்து உதவிசெய்யும் மனப்பான் -மையையும் உடையதாக இருக்கிறது." என்று Illustrated வேதத்தில்பரிவு என்ற வார்த்தைக்கான விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது.

வேதவசனங்களில், தேவன் மனுக்குலத்தின் மேல் வெளிப்படுத்தும் நன்மைகளை பலவழிகளில் விவரிக்க "பரிவு" என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. "ஆனாலும் ஆண்டவரே, நீர் மனவுருக்கமும், இரக்கமும், நீடிய பொறுமையும், பூரண கிருபையும், சத்தியமுமுள்ள தேவன்." (சங் 86:15) தேவன் சபையின் மேல் வெளிப்படுத்தும் அன்பையும், இரக்கத்தையும் குறித்தும் வசனங்கள் தெளிவாக குறிப்பிடுகிறது -"கிறிஸ்து இயேசுவுக்குள் அவர் நம்மிடத்தில் வைத்த தயவினாலே, தம்முடைய கிருபையின் மகா மேன்மையான ஐசுவரியத்தை வருங்காலங்களில் விளங்கச்செய்வதற்காக."(எபேசியர் 2:6,7)

மனுக்குலத்தில் விழுந்து போன நிலைமையை கண்ட இயேசு அவர்களுக்காக பரிதபித்து, தன்னுடைய ஊழியத்தின் போது அதிகமான பரிவையும், இரக்கத்தையும் வெளிப்படுத்தினார். (எபிரெ 4:15) அவர் விழுந்துகொண்டி -ருக்கும் அபூரணமான மனுக்குலத்தின் துக்கங்களை கண்டார். அதே போல் நாமும் இரக்கமுள்ள ஆசாரிய வகுப்பிற்கு தகுதியடையும் பயிற்சியை பெறுவதற்கு, இந்த வேதனைப்படும் மனுக்குலத்திற்காக பரிதபிக்கவேண்டும். தேவனுடைய இராஜ்யம் பகிரங்கமாக ஸ்தாபிக்கப்படும் வரைக்கும், இன்றைய காலத்தில் நித்தியமான நன்மைகளை நம்மால் செய்ய இயலாமல் போனாலும் - "ஆகையால் நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குத்தக்கதாக, யாவருக்கும், விசேஷமாக விசுவாச குடும்பத்தார் -களுக்கும், நன்மைசெய்யக்கடவோம்." (கலா 6:10)

இதற்கு தொடர்பாக யோசேப்பு எகிப்தில் பெற்ற அனுபவங்களை சற்று புரட்டிப்பார்ப்போம். தன்னுடைய சகோதரர்கள் பகைத்து, அவரை விற்றுபோட்டார்கள். ஆனால் அதற்கு பின்பு அவர் எகிப்தின் இரண்டாவது அதிபதியானார். யோசேப்பு தன்னுடைய சகோதரனாகிய பென்யமீனை தன்னோடு, ஒரு வேலைக்காரனாக வைத்துகொள்வேன், என்று அவர்களை சோதித்தபோது, அவர்களின் இருதயத்தின் மாற்றங்களை கண்டு, தன்னுடைய சகோதரர்களுக்கு தன்னை வெளிப்படுத்தின போது, யோசேப்பு சத்திமிட்டு அழுது, அனைவரையும் கட்டி தழுவினார். இதை தொடர்ந்து யோசேப்பு தன்னுடைய தந்தை யாக்கோபோடு சேர்ந்து வாழ்ந்தார். அவரோடு கூட அவருடைய சகோதரர்களும் அவர்களின் குடும்பங்களும் எகிப்தில் சுகிர்த்து வாழந்தார்கள். யாக்கோபின் மரணத்திற்கு பின்பு யோசேப்பின் சகோதரர்கள் அவர் பழிவாங்கிவிடுவாரோ என்று அஞ்சினார்கள். அப்பொழுது யோசேப்பு - ".... பயப்படாதிருங்கள், நான் உங்களையும் உங்கள் குழந்தைகளையும் பராமரிப்பேன் என்று, அவர்களுக்கு ஆறுதல்சொல்லி, அவர்களோடே பட்சமாய்ப் பேசினான்." (ஆதியாகமம் 50:21)

விசுவாச வீட்டாரின் அங்கமாக இருக்கும் விசுவாசமுள்ளவரின் அற்புதமான ஆவி எவ்வளவு நேர்த்தியாக செயலாற்றப்பட்டிருக்கிறது. கிறிஸ்துவுக்கு புது சிருஷ்டிகளாக இருக்கும் நாம், இந்த விசுவாச வீட்டாரின் கிரியைகளை காட்டிலும், சற்று குறைவாக கிரியைகளை வெளிப்படுத்துவதை இந்த உலகமும், தேவனுடைய நீதியும் ஏற்றுகொள்ளுமா ?

எந்த சூழ்நிலையிலும், நம்முடைய அசௌகரியத்தின் மத்தியிலும், மற்றவர்கள் மேல் அன்பு செலுத்தி, அவர்களுக்கு உதவி செய்யும் மனப்பக்குவத்தை இந்நாள் வரைக்கும் நமக்குள் அதிகரித்திருக்கிறோமா ? கிறிஸ்துவின் ஆவி நமக்குள் இருக்கும் பட்சத்தில், பரிவு என்ற குணம் நிச்சயமாக நமக்குள் இருக்கவேண்டும். மேலும், நாம் படித்த வேதபாடங்களை நாம் நடைமுறை படுத்தவேண்டும்.

**ஜெபம்**

பரலோக பிதாவை அணுகுவதற்காக புது சிருஷ்டிகளுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் மாபெரும் சிறப்புரிமையே ஜெபம். நமக்கு வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம், தேவனுடைய கிருபைக்காகவும், இரக்கத்திற்காகவும் கிருபாசனத்தண்டையில் சேருவோமானால் நமக்குள் இருக்கும் கிறிஸ்துவ வாழ்க்கையின் வளர்ச்சி நிச்சயமாக அதிகரிக்கும். ஆகவே நம்முடைய அன்பான சிருஷ்டிகரிடம் தேவையான விண்ணப்பங்களை விண்ணப்பிப்பதற்கு நாம் வசனங்களில் உள்ள போதனைகளை தேடுவதற்கு ஊக்குவிக்கப் படுகிறோம்.

"பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரமபிதாவானவர் தம்மிடத்தில் வேண்டிக் கொள்ளுகிறவர்களுக்குப் பரிசுத்த ஆவியைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா என்றார்." (லூக்கா 11:13) அவருடைய ஆசீர்வாதங்களுக்காக நாம் தேவனிடம் விண்ணப்பித்த பின்பு வேதபடிப்பின் மூலம் வெகு ஜாக்கிரதையாக நம்முடைய சிந்தையையும், கிரியைகளையும், வார்த்தைகளையும் ஆராய்ந்து, நம்முடைய இருதயத்தில் பரிசுத்தத்தை அதிகரித்து, அவருக்கு பிரியமானவைகளை நாம் நடப்பிக்கவேண்டும்.

இயேசு இந்த உலகத்தில் ஒரு ஜெப வாழ்க்கையை வாழ்ந்து, நமக்கும் ஓர் மாதிரியை விட்டுசென்றிருக்கிறார் -"நீர் அவர்களை உலகத்திலிருந்து எடுத்துக்கொள்ளும்படி நான் வேண்டிக்கொள்ளாமல், நீர் அவர்களைத் தீமையினின்று காக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன்."(யோவான் 17:15) நம்முடைய சோதனை நாட்களிலிருந்து நம்மை விடுவித்து, அபாயத்திலிருந்து நம்மை தப்புவிக்க விரும்புகிறார். நாமோ இப்படிப்பட்ட சோதனைகளிலும், பொல்லாத வழிகளில் நம்மை காத்துக்கொண்டு, அசுத்தங்களுக்கு விலகி, ஆண்டவருடைய அருகாமையில் வாழ்ந்து, அவருடைய வார்த்தைகளை பின்பற்றி நடக்க வேண்டும்.

ஞானத்திற்காக நாம் தேவனிடத்தில் ஜெபிக்கவேண்டும் என்று யாக்கோபு எச்சரிக்கிறார். (யாக்கோபு 1:5)நம்முடைய விண்ணப்பங்களை பொறுத்த வரையில் அவைகளுக்கு பதில் அளிக்கப்பட வேண்டுமானால், நாம் அதற்காக கிரியைசெய்யவேண்டும் என்று தேவன் எதிர்பார்க்கிறார். நாம் ஞானத்தை பெற விரும்பினால், பரிசுத்த ஆவியின் வழிநடத்துதலின் மூலம் நாம் வேதத்தை படிக்கவும், அதை தியானிக்கவும், சகோதரர்களோடு அவைகளை குறித்து சம்பாஷிக்கும் பொழுது தேவன் நம்முடைய ஜெபங்களுக்கு எல்லா கோணங்களிலிருந்தும் பதில் அளிப்பார்.

இந்த சுவிசேஷத்தை பரப்புவதற்கான முயற்சிகள் எடுக்கும் சகோதரர்களுக்காகவும், அவர்கள் இந்த தேவனுடைய பிரதிநிதிகளாக தங்களுடைய ஊழியத்தில் முன்னேறவும் நாம் ஜெபிக்கவேண்டும். சுயவிருப்பங்களுக்காக ஏறெடுக்கப்படும் ஜெபங்களை தேவன் ஏற்றுகொள்வதில்லை, ஏனெனில் நாம் அனைவரும் ஒரே சரீரத்தின் அங்கங்களாக இருக்கிறோம்.

நம்முடைய சத்துருக்களுக்காகவும் நாம் ஜெபிக்கவேண்டியவர்களாக இருக்கிறோம். (மத்தேயு 5:44) நாம் எந்த விதமான கசப்பும், கபடமும், வஞ்சகங்களும் இல்லாதவர்களாக, மனப்பூர்வமாக நம்முடைய சத்துருக்களுக்கு ஜெபித்தோமானால், அன்பின் உச்சக்கட்டத்தை அடைந்திடுவோம். இப்படிப்பட்ட அன்பை இயேசு இந்த மனுக்குலத்தின் மேல் வெளிப்படுத்தினார். உயிர்த்தெழுதலின் போது அவருடைய துரோகிகளும் திரும்பவருவார்கள். அவரை குத்தினவர்களும் அவரை காண்பதினால் துக்கித்து அவமானத்தால் புலம்புவார்கள்.

**நீடிய பொறுமை**

"உங்கள் விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்குமென்று அறிந்து, அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள். நீங்கள் ஒன்றிலும் குறைவுள்ளவர்களாயிராமல், பூரணராயும் நிறைவுள்ளவர்களாயும் இருக்கும்படி, பொறுமையானது பூரண கிரியை செய்யக்கடவது."(யாக்கோபு 1:3,4) நம்முடைய விழுந்துபோன நிலைமையினால், அநேக சூழ்நிலைகளில் நாம் பொறுமையை இழந்துவிடுகிறோம். நாம் எதிர்பார்க்கும் விதத்தில் மற்றவர்கள் செயல்படாதபோது நாம் எரிச்சலடைகிறோம். ஒருவேளை சில வியாபாரிகளோடு வியாபாரம் செய்ய நேரிடும்பொழுது, அந்த வியாபாரிகள் நம்மை ஏமாற்றியோ அல்லது கால தாமதமாக சில காரியங்களை செய்வதினாலோ நமக்கு பல சோதனைகள் நேரிடும். இவையனைத்தும் நம்முடைய நீடிய பொறுமையை சோதிப்பதற்காக அனுமதிக்கப்படுகிற சோதனைகளா ?

சிலருடைய சிந்தையில், பூமியில் உள்ள முழு குடும்பங்களையும் ஆசீர்வதிக்கக்கூடிய நீதியுள்ள இராஜ்யம் ஸ்தாபிக்கப்படுவதற்கு சற்று தாமதமாகிறது. இது நம்முடைய விசுவாசத்தின் பரிட்சையாக இருக்கக்கூடுமா ? விசேஷமாக, நாம் எதிர்பார்த்து சில காரியங்கள் நடைபெறாமல் போனதினால், நாம் ஆண்டவருடைய இரண்டாம் வந்திருத்தலில் வாழ்ந்துகொண்டிருக்கிறோம், என்பதற்கான முக்கியமான ஆதாரங்களை ஒதுக்கிவிட கூடுமோ? அல்லது ஒரு இமைபொழுதில் பரிசுத்தவான்கள் மறுரூபமாக்கப்பட்டு, ஏற்கனவே எந்த பரிசுத்தவான்களோடு இணைந்துகொண்டிருக்கிறார்கள் என்பதை மறுக்கக்கூடுமோ?

பரலோக பிதாவை பொறுத்தவரையில், சாத்தானுடைய துன்மார்க்கத்தின் நிமித்தம் அவர் பொறுமை இழந்தவராக இருக்கவேண்டும். மேலும், இன்றைய கொடூரமான சூழ்நிலைகளை பார்க்கும்பொழுது, நம்முடைய ஆண்டவராம் இயேசுவுக்கு சபை பூரணமடைவதற்கு காலங்கள் குறைவாக இருப்பதினால் அவர் இது வரைக்கும் பூரணப்பட்ட மணவாட்டியோடு சபையை முடித்துகொள்வாரா ?

நம்முடைய கிறிஸ்துவ பயணத்தில் நாம்

தொடர்ச்சியான தவறுகளை செய்யும் பொழுது நம்முடைய சிருஷ்டிகர் என்ன செய்யவேண்டும் ? நிச்சயமாக, அநேக சந்தர்ப்பங்களில், தேவன் நம்மேல் நீடிய பொறுமையாக இருக்கவேண்டும் என்று விரும்புகிறது போல நாமும் பல நேரங்களில் இந்த நீடிய பொறுமையை தக்கவைக்கவேண்டியவர்களாக இருக்கிறோம். இப்பொழுது நாம் நம்மையே சற்று ஆராய்ந்து பார்போம், நம்முடைய அழைப்புக்கு ஏற்றவாறு கடுமையாக உழைத்து, அதே சமயத்தில் நாம் இயலாத போது செய்யும் தவறுகளுக்கு மன்னிப்பு பெறாமல் இருந்தால், நம்மால் கிறிஸ்துவ வாழ்க்கையில் முன்னேற முடியுமா ? ஆகவே நாம் தொடர்ச்சியாக நம்முடைய மீறுதல்களுக்காகவும், ஏற்ற சமயத்தில் உதவிகளுக்காகவும் தேவனை நோக்கி அவருடைய இரக்கங்களுக்காகவும், கிருபைக்காகவும் கெஞ்சுவோம். அதேபோல தேவன் நம்மீது காட்டவேண்டும் என்று நாம் எதிர்ப்பார்க்கும் நீடிய பொறுமையையும், கிருபையையும் நாம் மற்றவர்களுக்கும், நம்முடைய சகோதரர்களுக்கும் நம்மால் முடிந்த வரைக்கும் காட்டவேண்டும். இதை தவிர நம்முடைய கிறிஸ்துவ வளர்ச்சியை வேறு எந்த குணலட்சனங்களும் அதிகரிக்கமுடியாது.

சகோதர சகோதிரிகளே, வேதாகம படிப்பானது நம்முடைய அறிவை அதிகரிப்பதற்கு மட்டும் அல்லாமல் நமக்குள் இருக்கும் தனிமனித பழக்கத்தில் அவைகளை நடைமுறைபடுத்தவேண்டியவர்களாக இருக்கிறோம். வேத படிப்புகள் நம்முடைய மூளையை மட்டும் அல்ல குணங்களையும், செயல்முறைகளையும், நடக்கையையும், மாற்றவேண்டும், தேவனுடைய வார்த்தைகள் கண்ணாடியையபோல் இருக்கிறது. அதனுடைய வெளிச்சத்தின் கட்டளைகளில் நம்முடைய நடத்தையை ஒப்பிடும்பொழுது, நாம் சீர்பொருந்தப்பட்டு, ஆவிக்குரிய வளர்ச்சியில் ஒரு உயர்வான நிலையை அடைந்திடுவோம். "ஆகையால், நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு, இவைகளின்படி செய்கிறவன் எவனோ, அவனைக் கன்மலையின்மேல் தன் வீட்டைக் கட்டின புத்தியுள்ள மனுஷனுக்கு ஒப்பிடுவேன்." (மத்தேயு 7:24) ஆகவே நாம் அனைவரும் ஆண்டவருடைய வார்த்தைகளை கேட்டு, அவருடைய மாதிரியை உணர்ந்து, அதன்படி நடந்து, அவருடைய உபதேசத்திற்கு ஏற்றவாறு ஜீவிப்போம்.

# நீதியின் குணாதிசயங்கள்

நீதிமொழியின் புத்தகம் நீதியின் குணாதிசயங்களை விவரிப்பதோடு, அன்றாட வாழ்க்கைக்கு தேவைப்படுகிற ஞானமும், ஆலோசனைகளையும் அநேக எடுத்துக்காட்டுகள் மூலமாக கொடுக்கிறது.

"நீதிமானுடைய நாவு சுத்தவெள்ளி, துன்மார்க்கனுடைய மனம் அற்பவிலையும் பெறாது. நீதிமானுடைய உதடுகள் அநேகரைப் போஷிக்கும், மூடரோ மதியீனத்தினால் மாளுவார்கள்." -நீதி 10:20,21

"நீதிமானுடைய வாய் ஞானத்தை வெளிப்படுத்தும், மாறுபாடுள்ள நாவோ அறுப்புண்டுபோம்." - நீதி 10:31

"மரணமும் ஜீவனும் நாவின் அதிகாரத்திலிருக்கும், அதில் பிரியப்படுகிறவர்கள் அதின் கனியைப் புசிப்பார்கள்." - நீதி 18:21

"நீடிய சாந்தமுள்ளவன் மகாபுத்திமான், முற்கோபியோ புத்தியீனத்தை விளங்கப்பண்ணுகிறான்." - நீதி 14:29

"ஞானிகளோடே சஞ்சரிக்கிறவன் ஞானமடைவான், மூடருக்குத் தோழனோ நாசமடைவான்." - நீதி 13:20

"மெதுவான பிரதியுத்தரம் உக்கிரத்தை மாற்றும், கடுஞ்சொற்களோ கோபத்தை எழுப்பும்." - நீதி 15:1

"நீண்ட பொறுமையினால் பிரபுவையும் சம்மதிக்கப்பண்ணலாம், இனிய நாவு எலும்பையும் நொறுக்கும்." - நீதி 25:15


"முற்கோபி மதிகேட்டைச் செய்வான், துர்ச்சிந்தனைக்காரன் வெறுக்கப்படுவான்." - நீதி 14:17

"தன் புத்திக்குத்தக்கதாக மனுஷன் புகழப்படுவான், மாறுபாடான இருதயமுள்ளவனோ இகழப்படுவான்." - நீதி 12:8

"கோபக்காரனுக்குத் தோழனாகாதே, உக்கிரமுள்ள மனுஷனோடே நடவாதே.அப்படிச் செய்தால் நீ அவனுடைய வழிகளைக் கற்றுக்கொண்டு, உன் ஆத்துமாவுக்குக் கண்ணியை வருவிப்பாய்." - நீதி 22:24,25

"துன்மார்க்கரின் வார்த்தைகள் இரத்தஞ்சிந்தப் பதிவிருப்பதைப்பற்றியது, உத்தமர்களுடைய வாயோ அவர்களைத் தப்புவிக்கும்." - நீதி 12:6

# பிரசங்கி



"காரியத்தின் கடைத்தொகையைக் கேட்போமாக, தேவனுக்குப் பயந்து, அவர் கற்பனைகளைக் கைக்கொள், எல்லா மனுஷர்மேலும் விழுந்த கடமை இதுவே." - பிரசங்கி 12:13

**Homer Montague**

சாலொமோன் வயது சென்ற காலத்தில் பிரசங்கியின் புத்தகம் அவரால் எழுதப்பட்டதாக நம்பப்படுகிறது. அவர் தாவீதின் குமாரனும், எருசலேமின் ராஜாவும், தேவனிடத்தில் ஞானத்தை பெற்றவரும், புகழ்வாய்ந்தவரும், ஐசுவரியமுள்ளவர் என்பதினால் உண்மையில் சாலொமோனை "பிரசங்கி" என்று அழைக்கப்படும் காரியம் நிருபணமாகிறது. (பிர 1:1, 12,16,17, 2:4-8)

இந்த புத்தகத்தில் உள்ள சில பகுதிகள் தவறு என்று சில விமர்சகர்கள் கோருகிறார்கள். ஏனெனில், வானமும், பூமியும் அழிக்கப்படும் என்று பேதுரு கூறுவதற்கு- "பூமியோ என்றைக்கும் நிலைத்திருக்கிறது" (பிரச 1:4) என்ற சொற்றொடர் எதிரிடையாக இருப்பதினால், இந்த வசன பகுதி ஒரு எடுத்துகாட்டாக கொடுக்கப்படுகிறது. ஆனால் "வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது" (சங் 19:1) என்ற வசன பகுதியின் சொல்லப்படுகிற வானங்கள் என்றுமே அழியாதிருப்பது எப்படி என்ற கேள்வியை கேட்கும்போது தான் - பேதுரு சொல்லர்த்தமான வானத்தையும், பூமியையும் குறிப்பிடாமல், அடையாளமாக அவைகளை குறிப்பிட்டிருக்கிறார் என்பது தெளிவாகிறது.

"வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது, தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது."(11தீமோ 3:16,17) வேதாகமத்தில் காணப்படுகிற சாலொமோனின் வார்த்தைகள் தேவனிடமிருந்து வரும் நன்மைகளோடு, கிறிஸ்துவின் அடிச்சுவடுகளை பின்பற்றும் விசுவாசிகள் தங்களுடைய அர்ப்பணிக்கப்பட்ட வாழ்க்கையில் ஆவிக்குரிய வளர்ச்சியை ஊக்குவிப்பதற்கு மிகவும் விலையேறப்பெற்ற பாடங்களை கொண்டுள்ளது.

தேவனை விட்டு விட்டு, வாழ்க்கையில் முழுமை அடைவது பயனற்ற காரியம் என்பதை உணர்த்துவதே பிரசங்கியின் புத்தகத்தின் முக்கிய நோக்கமாக இருக்கிறது. கூடுதலாக, மனித இயல்பு, மரண நிலை, உண்மையான வழிபாடு மற்றும் மனித ஞானம் செயல்படுதல் போன்ற விதவிதமான தலைப்புகளில் செய்திகளையும் காணலாம்.

**முதலாம் அதிகாரம்** - வாழ்க்கையில் அநேக செயல்பாடுகள் இருப்பினும், அது நிலையற்றதாகவே இருக்கிறது என்று முதலாம் அதிகாரம் உறுதியாக வலியுருத்துகிறது. "மாயை, மாயை, எல்லாம் மாயை என்று பிரசங்கி சொல்லுகிறான். சூரியனுக்குக் கீழே மனுஷன் படுகிற எல்லாப் பிரயாசத்தினாலும் அவனுக்குப் பலன் என்ன ?" (பிர 1:2,3)

அவருடைய தனிப்பட்ட அனுபவங்களில், எல்லா துறைகளிலும், அவர் பெற்றிருந்த அதிகமான ஞானத்தை குறித்து அவர் மேன்மைபாராட்டியிருக்கலாம். ஆனால் அதன் முடிவு வேதனைகளும், சஞ்சலங்களும், அதிர்ப்தியுமே என்று கண்டறிந்தார். (வசனம் 13-18) "கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம், அவருடைய கற்பனைகளின்படி செய்கிற யாவருக்கும் நற்புத்தியுண்டு, அவர் புகழ்ச்சி என்றைக்கும் நிற்கும்." (சங் 111:10) என்று அவருடைய தந்தையாம் தாவீதின் ஆலோசனை எவ்வளவு பொருத்தமாக இருக்கிறது.

**அதிகாரம் இரண்டு** - "நான் என் உள்ளத்திலே சொல்லிக்கொண்டது என்னவென்றால் - வா, இப்பொழுது உன்னைச் சந்தோஷத்தினாலே சோதித்துப்பார்ப்பேன், இன்பத்தை அநுபவி என்றேன், இதோ, இதுவும் மாயையாயிருந்தது. நகைப்பைக்குறித்து, அது பைத்தியம் என்றும், சந்தோஷத்தைக்குறித்து, அது என்ன செய்யும்? என்றும் சொன்னேன். வானத்தின்கீழ் மனுபுத்திரர் உயிரோடிருக்கும் நாளளவும் பெற்று அநுபவிக்கத்தக்கது இன்னதென்று அறியும் பொருட்டு, என் இருதயத்தை ஞானத்தால் தேற்றிக்கொண்டிருக்கும்போதே, நான் என் தேகத்தை மதுபானத்தால் சீராட்டிக்கொண்டிருக்கவும், மதியீனத்தைப் பற்றிக்கொண்டிருக்கவும் என் உள்ளத்தில் வகைதேடினேன்." (பிர 2:1-3) என்று இந்த அதிகாரம் துவங்குகிறது.

பேரின்பத்தையும், திரளான செல்வங்களையும் உலகாதாயம் சார்ந்த தன்னுடைய திறமையினால் சம்பாதிக்கும்படி தேடின காரியங்கள் சாலொமோனுக்கு திருப்தியளிக்கவில்லை. மனுஷனுடைய இருதயத்தில் தோன்றும் எந்த விருப்பத்தையும் அவர் அடைந்திருந்தாலும், அவைகள் தொல்லையை தவிர வேறு எதையும் கொடுப்பதில்லை என்ற முடிவுக்கு வந்தார். (வசனம் - 12) சாலொமோனின் வழிகளை பின்பற்றுவதை காட்டிலும் அப்போஸ்தலனாகிய பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதினதை பின்பற்றுவது விசுவாசிகளுக்கு ஏற்றதாக இருக்கும். "போதுமென்கிற மனதுடனே கூடிய தேவபக்தியே மிகுந்த ஆதாயம்." (1தீமோத் 6:6)

**அதிகாரம் மூன்று** - சுயமுயற்சியாக நிகழும் நிகழ்ச்சிகளை மனுஷன் எந்த விதத்திலும் கட்டுபடுத்த முடியாது என்று இந்த அதிகாரம் வலியுறுத்துகிறது. (வசனம் 1-8) மனுஷர் கண்ணோட்டத்திலிருந்து பார்க்கும்போது அவன் புசித்து, குடித்து, தன்னுடைய அனுதின வாழ்க்கையில் இன்பத்தை அடைய தேடுகிறான் என்று சாலொமோன் கண்டறிந்தார். (வசனம் 13) ஆயினும், விசுவாசிகள் அதற்கும் மேலாக, தேவனுடைய ஊழியத்தில் காலத்தின் அடையாளங்களை கவனித்தவர்களாக ,அவர்களுடைய பொருத்தனைகளை விசுவாசத்தோடு செய்து முடிக்கும்படி அறிவுரை அளிக்கப்படுகிறது. அக்காலத்தில், தீர்க்கதரிசனமாக ஒரு அத்திமரம்

ஒப்புயர்வற்ற தேசமாக விரைவாக வளர்ந்து. (இஸ்ரயேலின் அடையாளம்) மற்ற விருட்சங்கள் மற்ற தேசங்களை அடையாளப்படுத்துகிறது. அடிமையின் நுகத்தடியிலிருந்து விடுதலைபெற்றவர்களாக, தங்களுடைய சுதந்திரத்தைப் பெற்றுக்கொண்டு, தேவன் வாக்களித்த இராஜ்யத்திற்கு வெகு அருகாமையில் வந்திருப்பதை குறிப்பிடுகிறது. (லூக் 21:29-32)

**அதிகாரம் நான்கு** - கூட்டாளிகள் அல்லது ஐக்கியத்தினால் வரும் நன்மைகளைக் குறித்து இந்த அதிகாரம் குறிப்பிடுகிறது. "ஒண்டியாயிருப்பதிலும் இருவர் கூடியிருப்பது நலம், அவர்களுடைய பிரயாசத்தினால் அவர்களுக்கு நல்ல பலனுண்டாகும். ஒருவன் விழுந்தால் அவன் உடனாளி அவனைத் தூக்கிவிடுவான், ஒண்டியாயிருந்து விழுகிறவனுக்கு ஐயோ, அவனைத் தூக்கிவிடத் துணையில்லையே. இரண்டுபேராய்ப் படுத்துக்கொண்டிருந்தால் அவர்களுக்குச் சூடுண்டாகும், ஒண்டியாயிருக்கிறவனுக்குச் சூடுண்டாவது எப்படி? ஒருவனை யாதாமொருவன் மேற்கொள்ள வந்தால் இருவரும் அவனுக்கு எதிர்த்துநிற்கலாம், முப்புரிநூல் சீக்கிரமாய் அறாது." (பிர 4: 9-12)

இயற்கையாக, ஒரு குறிப்பிட்ட கோணத்தில் நாம் பார்க்கும்போது, இந்த எடுத்துகாட்டுகளை எளிதாக புரிந்துகொள்ளமுடிகிறது. ஆனால் இதே எடுத்துக்காட்டை ஆவிக்குரிய காரியத்திற்கு நாம் பொருத்தி பார்க்கும்போது -"சபைக்கூடுதலை நீங்கள் விட்டுவிடாதபடிக்கு... " எச்சரிக்கையாயிருங்கள் என்று பவுல் வலியுருத்துகிறார். (எபி 10:24,25) நாம் சபை கூடிவரும்போது, நம்முடைய நம்பிக்கைகள், விருப்பங்களை வெளிப்படுத்தவும், ஒருவருக்கொருவர் ஊக்குவிக்கவும் எவ்வளவு ஆறுதலாகவும், பலமாகவும் இருக்கிறது. மேலும் இப்படிப்பட்ட ஐக்கியங்கள் கிறிஸ்துவின் சரீர அங்கங்களாக இருப்பவர்கள், ஒருவருக்கொருவர் தாங்கிக்கொண்டு உதவிகளை செய்வார்கள். ".. சரீரம் முழுவதும், அதற்கு உதவியாயிருக்கிற சகல கணுக்களினாலும் இசைவாய்க் கூட்டி இணைக்கப்பட்டு..." (எபே 4:16, 1கொரி 12:26) நாம் அனைவரும் ஒரே தலையின் கட்டுபாட்டின் கீழ் இருப்பதினால் ஒருவரை ஒருவர் தாங்கவேண்டிய பொறுப்பைப் பெற்றிருக்கிறோம்.

**அதிகாரம் ஐந்து** - நாம் தேவனோடு கொண்டுள்ள உறவைப் பற்றி இந்த அதிகாரம் நமக்கு நினைப்பூட்டுகிறது. பரலோக பிதாவுக்கும் அவருடைய திட்டங்களுக்கும் மிகவும் பயபக்திக்குரிய கனத்தை நாம் என்றுமே ஏறெடுக்கவேண்டியவர்களாக இருக்கிறோம். (வசனம் 1,2) தேவனை ஆராதிக்கும்போது நாம் நிர்விசாரமாக இருக்கக்கூடாது. ஆவிக்குரிய கூட்டங்களுக்கு சரியான நேரத்தில் கலந்துகொள்வது, நம்முடைய இருதயத்தின் சிந்தனைகளை ஓர்முகப்படுத்துவது, நினைவுகளை அலைபாயவொட்டாமல், பிரசங்கங்களை கூர்ந்து கவனிப்பது, அங்கு பாடப்படும் பாடல்களையும் பாமாலைகளையும் உள்ளம் உணர்ந்து பாடுவது, மனப்பூர்வமாக அவருக்கு நன்றிகளை ஏறெடுப்பது போன்ற காரியங்களினால் நாம் நம்முடைய சிருஷ்டிகரை நெருங்கலாம்.

மேலும், நாம் நம்முடைய பொருத்தனைகளை நிறைவேற்றுவதன் மூலமாக தேவனோடு ஐக்கியப்படலாம். (வசனம் 4,5) நம்முடைய வாழ்க்கையை தேவனுடைய சித்தம் செய்ய தத்தம் செய்தால், எந்தவிதமான நிர்பந்தமான சூழ்நிலையிலும், எப்படிப்பட்ட காரியங்களை பணயம் வைத்தாலும், நாம் தேவனுடைய காரியங்களிலும் நிர்விசாரமாக இருப்பதற்கு வாய்ப்பில்லை. "மோசம்போகாதிருங்கள், தேவன் தம்மைப் பரியாசம்பண்ணவொட்டார், மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான். தன் மாம்சத்திற்கென்று விதைக்கிறவன் மாம்சத்தினால்

அழிவை அறுப்பான் ஆவிக்கென்று விதைக்கிறவன் ஆவியினாலே நித்தியஜீவனை அறுப்பான்." (கலா 6:7,8)

**அதிகாரம் ஆறு** - இந்த அதிகாரம் ஐசுவரியத்தின் மாயையைப் பற்றி பேசுகிறது. முன்னதாகவே திட்டமிட்டு, மிகவும் சிரமப்பட்டு சேர்த்து வைக்கும் சொத்துக்களை நம்முடைய மரணத்தில் அவைகளை கொண்டுசெல்லமுடியாததினால் அவைகளை சேர்ப்பது மடமையான செயல் என்று அநேகர் தங்களுடைய கசப்பான அனுபவங்கள் மூலமாக கற்றறிந்திருக்கிறார்கள். "ஆசையானது அலைந்துதோடுகிறதைப் பார்க்கிலும் கண் கண்டதே நலம், இதுவும் மாயையும், மனதைச் சஞ்சலப்படுத்துகிறதுமாயிருக்கிறது."(பிர 6:9) இந்த வேதபகுதியை நடைமுறைப்படுத்தும் உடன்படிக்கை செய்த கிறிஸ்தவர்களுக்கு தேவன் கொடுக்கும் அங்கீகாரமாக இருக்கிறது. ஏனெனில், முதலாவது தேவனுடைய இராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடும் பொழுது, மற்ற அனைத்து உலக காரியங்கள் தேவனுடைய சித்தத்தின்படி நமக்கு கொடுக்கப்படும். (மத் 6:33) ஆகவே நாம் எதைக் குறித்தும் கவலை படவேண்டாம். நமக்கு தேவன் கொடுத்திருக்கும் அனைத்திற்கும் நாமே உக்கிராணக்காரனாக இருக்கிறோம். இவைகளை தேவனுடைய மகிமைக்காக விசுவாசத்தோடு பயன்படுத்துவதை வெளிப்படுத்தவேண்டியவர்களாக இருக்கிறோம்.

**அதிகாரம் ஏழு** - இந்த அதிகாரம் அனைவருக்கும் முக்கியமான ஆலோசனைகளை கொடுக்கிறது. "உன் மனதில் சீக்கிரமாய்க் கோபங்கொள்ளாதே, மூடரின் நெஞ்சிலே கோபம் குடிகொள்ளும்."(பிர 7:9) இந்த சராசரியான பொது அறிவுரையை ஒருவருடைய அனுதின வாழ்க்கையில் அவசியமாக கடைப்பிடிக்கவேண்டும். விசுவாசிகளாக இருக்கும் நாம் இதை கடைபிடிக்கும் பட்சத்தில் சில நேரங்களில், மற்றவர்கள் இதை சாதகமாக எடுத்துகொள்வதை நாம் காணலாம். நமக்கு விரோதமாக அவதூராக செயல்படுபவர்களை பழிவாங்க நாம் சில நேரங்களில் தூண்டப்படுகிறோம். நாம் அவர்களுக்கு எதிர்த்துசெயல்படும் போது எவ்வளவு ஆறுதலாக இருக்கும் - இதை தான் சாத்தான் நம்மிடத்தில் எதிர்பார்க்கிறான். எல்லா கிறிஸ்தவர்களுக்கும் தேவனை சந்தோஷிப்பிக்கும் நீடிய பொறுமை மிக அவசியமாக இருக்கிறது. "சகலவிதமான கசப்பும், கோபமும், முழக்கமும், கூக்குரலும், தூஷணமும், மற்ற எந்தத் துர்க்குணமும் உங்களை விட்டு நீங்கக்கடவது. ஒருவருக்கொருவர் தயவாயும் மனஉருக்கமாயும் இருந்து, கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்ததுபோல, நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்" (எபே 4:31,32) பரிசுத்த ஆவியின் வழிநடத்தலோடு இந்த வேத பகுதியில் உள்ளவைகளை நாம் பெற்றுகொள்ளமுடியும்.

**அதிகாரம் எட்டு** - துன்மார்க்கர்களின் செயலுக்கேற்ற தண்டனை தாமதிப்பதால், சட்ட ஒழுங்குகள் அவமதிக்கப்படுவதை இந்த அதிகாரம் குறிப்பிடுகிறது. "துர்க்கிரியைக்குத்தக்க தண்டனை சீக்கிரமாய் நடவாதபடியால், மனுபுத்திரரின் இருதயம் பொல்லாப்பைச் செய்ய அவர்களுக்குள்ளே துணிகரங்கொண்டிருக்கிறது." (பிரச 8:11) தோல்வியடைந்த நீதி வேகமாகவும் மிக தெளிவாகவும் செயல்படுவதில்லை என்று சில தனி நபர்கள் இந்நாளிலும் குறை சொல்லுகிறார்கள். தண்டனைக்கு தப்பித்துகொள்ளலாம் அல்லது ஏதோ ஒரு சிறிய தண்டனையை பெறலாம் என்ற நம்பிக்கையில், குற்றவாளிகள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் சட்டங்களை முறிக்க உறுதிப்படுகிறார்கள். மேலும், குற்றமற்றவர்களுக்கு எதிராக தவறான அல்லது வஞ்சகமான மோசடிகள் சுமத்தப்பட்டாலும், அவர்களை விடுவிப்பதற்காக வலுக்கட்டாயமாக செயல்படவேண்டிய சட்டங்கள் ஆழமாக புதைக்கப்படுகிறது.

சுவிசேஷ யுகம் முழுவதுமாக, நீதியின் நிமித்தம் விசுவாசிகள் உபத்திரவப்படுத்தப் படுகிறார்கள். (வெளி 6:9-11) தேவனுடைய ஊழியத்தின் நிமித்தம் கிறிஸ்தவர்கள் உபத்திரவப்படுத்தப்பட்டார்கள் என்ற இந்தவசன பகுதி அடையாளமாக சொல்லுகிறது. மேலும், ஆபேல் மற்றும் கடந்த காலத்தின் விசுவாசமுள்ள தீர்க்கதரிசிகளும் தங்களுக்கு விரோதமாக எழும்பின தீமைகளுக்கு பதிலாக பழிவாங்கும்படி கூக்குரலிட்டார்கள். ஆயினும், தேவனுடைய இராஜ்யத்தில் கடந்த காலத்தில் நடந்த அனைத்து துர்க்கிரியைகளுக்கும் சரிக்குசரியாக பதில் அளிக்கப்படும் என்று வசனங்கள் உறுதியளிக்கிறது. "மேலும் ஒரு நாளைக் குறித்திருக்கிறார், அதிலே அவர் தாம் நியமித்த மனுஷனைக்கொண்டு, பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார், அந்த மனுஷனை மரித்தோரிலிருந்து எழுப்பினதினாலே அதின் நிச்சயத்தை எல்லாருக்கும் விளங்கப்பண்ணினார் என்றான்." (அப் 17:31)

**அதிகாரம் ஒன்பது** - வேதத்தில் மரித்த நிலையில் உள்ளவர்கள் "நித்திரை" செய்கிறார்கள் என்றும் அழியாத ஆத்துமா இல்லை என்ற தெளிவான ஒரு வாக்கியத்தை கொண்டுள்ளது. ஏனெனில் - "உயிரோடிருக்கிறவர்கள் தாங்கள் மரிப்பதை அறிவார்களே, மரித்தவர்கள் ஒன்றும் அறியார்கள், இனி

அவர்களுக்கு ஒரு பயனுமில்லை, அவர்கள் பேர்முதலாய் மறக்கப்பட்டிருக்கிறது. செய்யும்படி உன் கைக்கு நேரிடுகிறது எதுவோ, அதை உன் பெலத்தோடே செய், நீ போகிற பாதாளத்திலே செய்கையும் வித்தையும் அறிவும் ஞானமும் இல்லையே" (பிர 9:5,10, சங் 6:5, சங் 88:10-12, சங் 115:17, சங் 146:4) மரித்து கல்லறைக்குள் கிடக்கும் அனைவரின் நம்பிக்கையும், தேவனுடைய இராஜ்யத்தின் போது எழுப்பப்படுவார்கள் என்ற வாக்குறுதியில் அமர்ந்திருக்கிறது. "மரித்தோர் உயிர்த்தெழாவிட்டால், கிறிஸ்துவும் எழுந்திருக்கவில்லை. கிறிஸ்து எழுந்திராவிட்டால், உங்கள் விசுவாசம் வீணாயிருக்கும், நீங்கள் இன்னும் உங்கள் பாவங்களில் இருப்பீர்கள். கிறிஸ்துவுக்குள் நித்திரையடைந்தவர்களும் கெட்டிருப்பார்களே. கிறிஸ்துவோ மரித்தோரிலிருந்தெழுந்த, நித்திரையடைந்தவர்களில் முதற்பலனானார். மனுஷனால் மரணம் உண்டானபடியால், மனுஷனால் மரித்தோரின் உயிர்த்தெழுதலும் உண்டாயிற்று. ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறதுபோல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள்." (1கொரி 15:16-18, 20-22, ரோம 5:12,17-19)

**அதிகாரம் பத்து** - நாவை மூர்க்கமாகவும், மதீயினமாகவும் பயன்படுத்துவதன் விளைவுகளாகிய பேராபத்துகளை பற்றி இந்த அதிகாரம் பேசுகிறது. "ஞானியினுடைய வாய்மொழிகள் தயையுள்ளவைகள், மூடனுடைய உதடுகளோ அவனையே விழுங்கும்"(பிர 10:12) வேதாகமத்தில் உள்ள போதனைகளின்படியும், கோட்பாடுகளின் படியும் கிறிஸ்தவர்கள் பேசவேண்டும். " ஒருவன் போதித்தால் தேவனுடைய வாக்கியங்களின்படி போதிக்கக்கடவன், ஒருவன் உதவிசெய்தால் தேவன் தந்தருளும் பெலத்தின்படி செய்யக்கடவன், எல்லாவற்றிலேயும் இயேசுகிறிஸ்துமூலமாய்த் தேவன் மகிமைப்படும்படியே செய்வீர்களாக, அவருக்கே மகிமையும் வல்லமையும் சதாகாலங்களிலும் உண்டாயிருப்பதாக."(பேதுரு 4:11)நாம் ஒருவரோடொருவர் பேசுகையில்-"தேவன் இப்படியாக சொல்லியிருக்கிறார்" என்ற வார்த்தைகளோடு நம்முடைய கருத்துக்களுக்கு ஆதாரத்தை சேர்க்கும்போது, பெரும்பாலான ஒழுங்கற்ற சிந்தனைகளை தவிர்க்கலாம். நமக்கு தேவைப்படும் ஆவிக்குரிய உற்சாகத்தை தேவனுடைய வெளிச்சம் நமக்களிக்கிறது. (சங் 119:105)

**அதிகாரம் பதினொன்று** - "காலையிலே உன் விதையை விதை, மாலையிலே உன் கையை நெகிழவிடாதே, அதுவோ, இதுவோ, எது வாய்க்குமோ என்றும், இரண்டும் சரியாய்ப் பயன்படுமோ என்றும் நீ அறியாயே. (பிர 11:6)இந்த வசன பகுதியை ஆவிக்குரிய காரியங்களுக்கு நாம் பொருத்திபார்க்கையில், எவ்வளவு குறைவான பலன் கிடைத்தாலும் சரி, இந்த சுவிசேஷத்தின் நற்செய்தியை நம்மால் முடிந்த வரைக்கும் விசுவாசத்தோடு பறைசாற்றவேண்டிய -வர்களாக இருக்கிறோம். தேவனுடைய இராஜ்யத்தை குறித்து சாட்சிகொடுக்கும்போது வரும் புறக்கணிப்பு, ஏளனம், எதிர்ப்புகளை கண்டு நாம் என்றுமே அஞ்சக்கூடாது. "சுவிசேஷத்தை நாம் பிரசங்கித்து வந்தும், மேன்மைபாராட்ட எனக்கு இடமில்லை, அது என்மேல் விழுந்த கடமையாயிருக்கிறது. சுவிசேஷத்தை நான் பிரசங்கியாதிருந்தால், எனக்கு ஐயோ." (1கொரி 9:16) என்று பவுல் குறிப்பிடுகிறார்.

**அதிகாரம் பன்னிரெண்டு** - வாலிப நாட்களில், அளவுக்கு அதிகமான உலகத்தின் இன்பங்களை தவிர்ப்பது எவ்வளவு நலமாக இருக்கும் என்ற ஞானத்தைக் குறித்து சாலொமோன் பன்னிரெண்டாம் அதிகாரத்தில் பிரதிபலிக்கிறார். இருப்பினும், அவ்வழியை அவர் பின்பற்றவில்லை. "நீ உன் வாலிபப்பிராயத்திலே உன் சிருஷ்டிகரை நினை, தீங்குநாட்கள் வராததற்குமுன்னும், எனக்குப் பிரியமானவைகளல்ல என்று நீ சொல்லும் வருஷங்கள் சேராததற்குமுன்னும்.."(பிர 12:1) வெகு சீக்கிரத்தில் நாட்கள் கடந்தபின் இவ்வளவு வருடங்களை வீணாக செலவழித்தோமே என்று நாம் வேதனைப்படாமல் இருக்கவேண்டும் என்பதை 4,5 மற்றும் 8ம் வசனம் தெளிவாக காட்டுகிறது. கிறிஸ்துவின் சரீர அங்கங்களாகும்படி விரும்பும் எல்லா விசுவாசிகளும் ஆவிக்குரிய வளர்ச்சிக்கு வரும் தடைகளைக் குறித்து மிகவும் எச்சரிக்கையாக இருந்து, நம்முடைய முழு பலத்தையும் ஆவிக்குரிய கனிகளை வளர்க்கவும், வசனங்கள் சொல்லுகிறபடி வாழவும் நாம் முயற்சிக்கவேண்டும். (11பேதுரு 1:4-9)


தேவனை நியாயமாக தொழுதுகொண்டு அவருக்கேற்ற பக்தியும், கனத்தையும் செலுத்துவதற்கான கற்பனைகள் இந்த புத்தகத்தில் உள்ள இறுதி வசனங்களில் கொடுக்கப்பட்டுள்ளது. "காரியத்தின் கடைத்தொகையைக் கேட்போமாக, தேவனுக்குப் பயந்து, அவர் கற்பனைகளைக் கைக்கொள், எல்லா மனுஷர்மேலும் விழுந்த கடமை இதுவே. ஒவ்வொரு கிரியையையும், அந்தரங்கமான ஒவ்வொரு காரியத்தையும், நன்மையானாலும் தீமையானாலும், தேவன் நியாயத்திலே கொண்டுவருவார்." (பிர 12:14)

அவருடைய சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவதுபோல பூலோகத்திலும் செய்யப்பட்டு, தேவனுடைய நித்தியமான நோக்கம் நிறைவடையும் என்று நாம் உணரும்போது எவ்வளவு ஆறுதலாக இருக்கிறது. (மத் 6:10)

நித்தியமான ஒரு நேச பாட்டு

# உன்னதப்பாட்டு

"... என் பிரியமே, என் ரூபவதியே, நீ எழுந்துவா... " - உன்னதப்பாட்டு 2:13



Tom Ruggirello

உன்னதப்பாட்டு என்ற புத்தகம் இராஜாவாகிய சாலொமோன் மற்றும் ஒரு இளம் பெண்ணுக்கு இடையில் உள்ள நேசப் பாட்டை போல் தோன்றுகிறது. அந்த இளம் பெண் அபிஷாகாக இருந்திருக்கக்கூடும். இவள் இராஜாவாகிய தாவீதின் வயது சென்ற காலத்தில் அவருக்கு பணிவிடை செய்யும்படி கொண்டுவரப்பட்ட பெண்மணி. (1இரா 1:1-14) தாவீதுக்கு மிக அன்புடன் பணி செய்யும் அவளுடைய மேன்மையான குணத்தை கண்ட சாலொமோனுக்கு, அவளை திருமணம் செய்யவேண்டும் என்ற விருப்பம் அதிகரித்தது. ஆகவே அவர் அபிஷாக்கின் மேல் கொண்ட உணர்வுகளையும், அவள் அவர்மேல் கொண்ட உணர்வுகளையும் இந்த அழகான பாடல் வெளிப்படுத்தியிருக்கலாம்.

பதினேழாம் நூற்றாண்டில் பிரன்ச்சு மத நூல் சாஸ்திரி ஜாக்குவிஸ் போசுயுட்டு ஆர்வமூட்டும் ஒரு காரியத்தை கவனத்திற்கு கொண்டுவந்தார். மக்கிலின்டோக்கு மற்றும் ஸ்டிராங்ஸ் சைக்கிலோபீடியா கூறுகிறபடி - " போசுயுட்டு கருத்தின்படி இந்த கவிதை வழக்கமாக ஏழு நாட்களாக நடிக்கப்பட்டுவந்த ஒர் நாடகமாக இருந்தது. ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு நிலை நடிக்கப்பட்டு ஓய்வு நாளில் முடிவடைந்தது. பொதுவாக இந்த நாட்களில் மணவாளன் எந்த விதமான வேலைகளிலும் ஈடுபடாமல், தன்னுடைய மணவாட்டியுடன் திருமண அறையிலிருந்து புறப்பட்டு பகிரங்கமாக பொது ஜனங்கள் மத்தியில் வருவார்."

போசுயுட்டின் யோசனைகள் முழுமையான அர்த்தம் கொண்டதாக இருக்கிறது. உன்னதப்பாட்டில் ஏழு நிலையான நடிப்புகளை தொடர்ந்து ஓய்வு நாளில் மணவாளனும் மணவாட்டியும் பகிரங்கமாக காணப்படுவார்கள். ஆகவே இந்த புத்தகம் சுவிசேஷ யுகத்தின் ஏழு நிலைகளை விவரிக்கிறதாக கருதப்படுகிறது. சுவிசேஷ யுகத்தின் கடைசி கட்டத்தில் இயேசுவுக்கும் சபைக்கும் திருமணம் நடைபெறும். விசேஷமான இந்த திருமணமும் பெரிய ஓய்வு நாட்களில் - ஏழாவது ஆயிர வருட நாளில் - அதாவது ஆயிர வருட ஆட்சியில் முடிவடையும். இதை தொடர்ந்து திருமணம் செய்து கொண்ட அந்த தெய்வீக தம்பதிகள் பூமியின்மேல் பொறுப்பெடுத்துக்கொண்டு, அவருடைய இராஜ்யத்தை ஸ்தாபித்து மனுக்குலத்திற்கு தங்களை வெளிப்படுத்துவார்கள். இவர்கள் அற்புதமான ஐக்கியத்தின் மூலமாக வரும் உலகத்தில் மிக பெரிய ஆசீர்வாதங்களின் காரணமாக அந்த காலம் மிக மகிழ்ச்சிகரமாக இருக்கும். யோவான் கூறுகிறபடி - "நாம் சந்தோஷப்பட்டுக் களிகூர்ந்து அவருக்குத் துதிசெலுத்தக்கடவோம். ஆட்டுக்குட்டியானவருடைய கலியாணம் வந்தது. அவருடைய மனைவி தன்னை ஆயத்தம்பண்ணினாள் என்று சொல்லக் கேட்டேன்." (வெளி 19:7)

சபையின் ஏழு நிலைகளுக்கு ஒத்து காணப்படுகிற உன்னதப்பாட்டின் ஏழு பிரிவுகள், வெளிப்படுத்தலின் புத்தகத்தில் உள்ள ஏழு நிலைகளுக்கு இணையாக காணப்படுகிறது.

**நிலை 1** (உன்னதப்பாட்டு 1:1 - 2:13)

**இயேசு முதல் வருகையின் போது சபையின் நிலை**

**எபேசு சபை** (வெளி 2:1-7)

மணவாட்டியின் சத்தத்தோடு இந்த புத்தகம் துவங்குகிறது - "அவர் தமது வாயின் முத்தங்களால் என்னை முத்தமிடுவாராக - உமது நேசம் திராட்சரசத்தைப்பார்க்கிலும் இன்பமானது. உமது பரிமளதைலங்கள் இன்பமான வாசனையுள்ளவைகள், உமது நாமம் ஊற்றுண்ட பரிமளதைலமாயிருக்கிறது, ஆகையால் கன்னியர்கள் உம்மை நேசிக்கிறார்கள்."

பரிசேயர்கள் பேசின கடுமையான வார்த்தைகளைபோல் இராமல், இயேசு மிகவும் கனிவோடும், தயவோடும், உள்ளார்ந்த உணர்வுகளோடும் சீஷர்களோடு பேசினார். அவருடைய அன்பின் வெளிப்படையான வார்த்தைகள் முத்தத்தை போலிருந்தது.

அவருடைய நேசம் திராட்சரசத்தைப்பார்க்கிலும் இன்பமானது என்று மணமகள் விவரிக்கிறாள். ஆதி சபையின் இந்த உணர்ச்சி வசப்பட்ட கருத்துக்கள் யூதர்களிடமிருந்து வந்தது. திராட்சரசம் போதனையை அடையாளப்படுத்துவதால், இயேசுவின் வார்த்தைகள் யூத மத போதனைகளை விட மதுரமாக அல்லது இன்பமாக இருந்தது. "சுமப்பதற்கரிய பாரம்" என்று இயேசு பரிசேயர்களின் போதனையை விவரிக்கிறார். (மத் 23:4) ஆனால் இயேசு தன்னுடைய மணவாட்டியை மிக கனிவோடு நேசித்ததினாலும், யூத கற்பனைகளை விட

அவருடைய வாக்குறுதிகள் சுமப்பதற்கு இலகுவாக இருந்தது.

மேலும், மணவாட்டி -"உமது நாமம் ஊற்றுண்ட பரிமளதைலமாயிருக்கிறது" என்கிறாள். இயேசுவின் இரத்தத்தை ஏற்றுக்கொண்ட மணவாட்டி பரலோக பிதாவின் நேரடியான பராமரிப்பின் வழிநடத்தப்பட்டு, புது ஆவிக்குரிய நிலைக்கு பரிசுத்த ஆவியினால் ஜெனிப்பிக்கப்படுகிறாள். இந்த தைலம் வைத்தியத்திற்கும் பயன்படுத்தப்பட்டது. அதேபோல நம்முடைய ஆண்டவர் விசேஷித்த சுகமளிக்கும் வல்லமையை பெற்றிருந்தார். நாம் அனைவரும் பாவத்தினால் அநேக சேதங்களை அடைந்திருக்கிறோம். சிலர் சுயநலத்தினாலும், பெருமையினாலும், மற்றும் சிலர் அழுத்தத்தினாலும் அதிகமாக பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். சுதந்தரிக்கப்பட்ட இந்த பாவங்களையுடையவர்கள் இயேசுவோடு தொடர்பு கொள்ளும்போது குணப்படுத்தப்படுகிறார்கள். அவர் "ஊற்றுண்ட பரிமளதைலம்" என்பதை நாம் இப்பொழுது அனுபவித்துக்கொண்டிருக்கிறோம்.

4ம் வசனத்தில் ஒரு எளிமையான விண்ணப்பத்தை வேண்டுகிறாள். "என்னை இழுத்துகொள்ளும்" புதிதும், ஜீவனுமான வழியில் நடப்பதற்கான அழைப்பை இங்கு மணவாட்டி பெறுவதை இந்த விண்ணப்பம் நமக்கு சித்தரிக்கிறது. அவள் தொடர்ந்து -"ராஜா என்னைத் தமது அறைகளில் அழைத்துக்கொண்டுவந்தார்." பழங்காலத்தில், நெருக்கமாக இருப்போர் அதாவது நெருங்கிய நண்பர்கள் மட்டுமே ராஜாவின் அறையில் அனுமதிக்கப்படுவார்கள். இந்த ஒரு அறை ஆசரிப்புக் கூடாரத்தில் உள்ள பரிசுத்த ஸ்தலத்தை நமக்கு நினைவுப்படுத்துகிறது. மணவாட்டி விசேஷித்த சிறப்புரிமைபெற்று இந்நிலையை அடைந்து (அறைக்குள் பிரவேசித்து), ஆவிக்குரிய ஆகாரத்தை பெற்று, அதிகமான வெளிச்சத்தை அடைந்து தேவனோடு ஐக்கியப்படுகிறாள்.

மணவாட்டி தன்னைப் பற்றி வழக்கத்திற்கு மாறான ஒரு வாக்கியத்தை 5ம் வசனத்தில் குறிப்பிடுகிறாள் -"நான் கருப்பாயிருந்தாலும் அழகாயிருக்கிறேன்" இவள் மேல் வெயில் பட்டதினால் கருப்பாகிவிட்டாள். பொதுவாக வயலில் வேலை செய்பவர்களை இந்த அடையாளம் காட்டுகிறது. ஆகவே கிறிஸ்துவின் மணவாட்டியாக இருப்பதற்கான அழைப்பு பொது ஜனங்களுக்கு கொடுக்கப்பட்டதை இது நிழலாக காட்டுகிறது. சுவிசேஷ யுகத்தின் நற்செய்தியை பெறுவதற்கு கருப்பாக இருக்கும் மணவாட்டியின் அபாத்திர நிலையையும் காட்டுகிறது.

6ம் வசனத்தில் -"என் தாயின் பிள்ளைகள் என்மேல் கோபமாயிருந்து, என்னைத் திராட்சத்தோட்டங்களுக்குக் காவற்காரியாக வைத்தார்கள், என் சொந்தத் திராட்சத்தோட்டத்தையோ நான் காக்கவில்லை." முதலாம் வருகையில் "என் தாயின் பிள்ளைகள்" என்பது யூதர்களை அடையாளப்படுத்தவேண்டும். அவர்கள் கோபம் கொண்டு ஆதி சபையை உபத்திரவப்படுத்தி, "திராட்சத்தோட்டங்-களுக்குக் காவற்காரியாக"வைத்தார்கள். வேறு வார்த்தைகளில் சொல்லபோனால், ஆதி கால சீஷர்களை எப்படியாவது யூதமத கோட்பாடுகளின் சுவருக்குள் கட்டுபடுத்தவேண்டும் என்று எல்லா விதமான முயற்சிகளும் யூதமத தலைவர்களால் மேற்கொள்ளப்பட்டது.

யூத மத கோட்பாடுகளாகிய திராட்சத் தோட்டத்தை காவல் காத்தபின், "என் சொந்தத் திராட்சத்தோட்டத்தையோ நான் காக்கவில்லை." என்று மணவாட்டி தன்னில் தான் கவலைப்படுகிறாள். அவளுடைய சொந்த ஆவிக்குரிய வளர்ச்சிக்கு ஏதுவாக எந்தவிதமான கவனமும் செலுத்தப்படவில்லை. ஆனாலும் ஆண்டவரின் புதிதான அன்பை பெற்றதினாலும், தன்னுடைய திராட்சைத்தோட்டம் கவனிக்காமல் விட்டுவிட்டதையும் உணர்ந்து அவருடைய மந்தையில் சேர விருப்பதை 7ம் வசனத்தில் வெளிப்படுத்துகிறாள். "என் ஆத்தும நேசரே, உமது மந்தையை எங்கே மேய்த்து, அதை மத்தியானத்தில் எங்கே மடக்குகிறீர்? எனக்குச் சொல்லும்." மணவாட்டியானவர் தன்னுடைய சொந்த மாம்ச யூத மந்தையை விட்டுவிட்டு, புதிய மேய்ப்பனிடத்தில் ஒரு புதிய மந்தையில் சேரவேண்டியதாக இருந்தது. வெகு சீக்கிரத்தில் புறஜாதிகளும் இதில் பங்கடைந்தார்கள்.

மேலும் -"என்னை விருந்துசாலைக்கு அழைத்துக்கொண்டுபோனார், என்மேல் பறந்த அவருடைய கொடி நேசமே." (உன்ன 2:4) என்று மணவாட்டி தொடருகிறாள். "ஊழியக்காரர்களின் வீடு" என்ற யூதர்களின் சகோதர அனுபவங்கள் "புத்திரர்களின் வீடு" என்ற அனுபவத்திற்கு மாற்றப்பட்டதை இந்த வசனம் அடையாளப்படுத்துகிறது. (எபி 3:5,6) புத்திரர்களின் வீடு "புது திராட்சைரசமாக" இருக்கிறது. (மத் 9:17) ஏனெனில்,மோசேயின் நியாயப்பிரமாணம் அநேக காரியங்களை கொண்டிருந்தாலும், சுவிசேஷத்தின் புதிய சத்தியங்களை அது போதிப்பதில்லை. இந்த புதிய அமைப்பு அன்பு மற்றும் கிருபையின் அடிப்படையில் கொடுக்கப்பட்டது.

மணவாட்டியின் நிலை திடீர் என்று மாற்றப் பட்டதை 5ம் வசனத்தின் துவக்கம் குறிப்பிடுகிறது. அவள் மிகவும் **தோய்ந்து** போய்விட்டாள் - "திராட்சரசத்தால் என்னைத் தேற்றுங்கள், கிச்சிலிப்பழங்களால் என்னை ஆற்றுங்கள், நேசத்தால் சோகமடைந்திருக்கிறேன்.

அவர் இடதுகை என் தலையின்கீழ் இருக்கிறது, அவர் வலதுகை என்னை அணைத்துக்கொள்ளுகிறது." மணவாட்டி கீழே விழுந்து கிடக்கிறதுபோல இந்த ஒரு நிலை தோன்றுகிறது. நேசத்தால் அவள் ஏன் சோகமடைந்தாள் ?

அவளுடைய நேசர் எடுத்துகொள்ளப்பட்டதால் இந்த நிலைமை வந்திருக்கவேண்டும். ஆனால் அவரை கண்டும் அவருடைய சத்தத்தை கேட்டும் அவள் மீண்டும் புதுப்பிக்கப்பட்டதை 8ம் வசனம் குறிப்பிடுகிறது. தன்னுடைய நேசர் சிலுவையில் அறையப்பட்டபோதும், எதிர்பாராத வகையில் அவர் உபத்திரவப்பட்டபோதும், அவள் நேசரின் நிமித்தம் **தொய்ந்து**போனாள். இயேசுவின் பாடுகள் நிறைந்த மரணத்தால் ஆதி சபை எவ்வளவு வேதனையை அனுபவித்திருப்பார்கள் என்று நம்மால் கற்பனை செய்து பார்ப்பது கூட மிக கடினமானது. ஆகவே அவள் வியாதி அதிகரித்துகொண்டதினால் படுத்திருந்தாள் என்று வாசிக்கிறோம்.

ஆனால் வெகு சீக்கிரத்தில் - "இது என் நேசருடைய சத்தம், இதோ, அவர் மலைகள்மேல் குதித்தும் மேடுகள்மேல் துள்ளியும் வருகிறார். என் நேசர் வெளிமானுக்கும் மரைக்குட்டிக்கும் ஒப்பாயிருக்கிறார்" (உன்ன 2:8) மணவாட்டியின் இருதயத்தின் நோய் சில நாட்களுக்குள் குணப்பட்டத்திற்கு நன்றி. ஆண்டவரின் உயிர்த்தெழுதலினால், (மலைகள் மேல் குதித்தும்), இந்த உலக ராஜ்யங்கள் மேல் அதிகாரம் பெற்றார். முன்குறிக்கப்பட்ட மணவாட்டியை அன்பாக அணைத்தார்.

தொடர்ந்து - "இதோ, அவர் எங்கள் மதிலுக்குப்புறம்பே நின்று, பலகணி வழியாய்ப்பார்த்து, கிராதியின் வழியாய்த் தமது மலர்ந்த முகத்தைக் காண்பிக்கிறார்."(உன்ன 2:9) இயேசு உயிர்த்தெழுந்தபின் இரகசியமாக சீஷர்களுக்கு கொடுத்த காட்சியை இது எடுத்துக்காட்டலாம். இப்பொழுது அவர் ஒரு ஆவிக்குரிய ஜீவி, இதை மதிலுக்குப் புறம்பே என்றும் பலகணி வழியாய் என்றும் வித்தியாசப்படுத்தி காட்டப்படுகிறது. நாட்கள் செல்ல செல்ல அவர் எழுதப்பட்டிருக்கும் வார்த்தைகளின் பின்னல்களின் (கிராதி) வழியாக மட்டுமே அவரை காணமுடிந்தது.

10-13ம் வசனத்தில் மணவாளன் தன்னுடைய மணவாட்டியுடன் பேசுகிறார் - "என் பிரியமே, என் ரூபவதியே, எழுந்துவா, இதோ மாரிகாலம் சென்றது, மழைபெய்து ஒழிந்தது. பூமியிலே புஷ்பங்கள் காணப்படுகிறது, குருவிகள் பாடுங்காலம் வந்தது, காட்டுப்புறாவின் சத்தம் நமது தேசத்தில் கேட்க்கப்படுகிறது. அத்திமரம் காய்காய்த்தது, திராட்சக்கொடிகள் பூப்பூத்து வாசனையும் பரிமளிக்கிறது, என் பிரியமே, என் ரூபவதியே, நீ எழுந்துவா."

இந்த வேதபகுதி சபையின் முதல் கட்டத்தின் முடிவை குறிக்கிறது. யூதர்களின் மாரிகாலம் முடிவடைந்தது. அத்திமரமாகிய இஸ்ரயேல் ஜனங்களின் அறுவடை முடிவடைந்தது. திராட்சக்கொடிகள் **பூப்பூத்தது**. தன்னுடைய விசுவாசமுள்ள அங்கத்தினர்களை ஆண்டவர் மிகவும் நேசித்தார். அவர்களின் உண்மையையும், தன்னுடைய மந்தையில் உறுப்பினராக இருக்கவேண்டும் என்ற அவர்களுடைய நேர்மையான விருப்பத்தையும், அவர் நேசித்தார். இதனிமித்தம் அவர்கள் யூதர்களால் பகைக்கப்படுவதை மனப்பூரவமாக ஏற்றுகொண்டு சகிப்பதை அவர் பாராட்டினார். இரகசிய அறையில் வசிப்பதன் சிறப்புரிமையை அவர் கண்டறிந்தார்கள்.

**நிலை 2** (உன்னதப்பாட்டு 2:14-17)

### யூத அறுவடையின்போது சபையின் நிலை

## சிமிர்னா சபை (வெளி 2:8-11)

2ம் அதிகாரம் 14ம் வசனத்தில் சுவிசேஷ யுக சபையின் அடுத்த கட்டம் துவங்குகிறது. "கன்மலையின் வெடிப்புகளிலும் சிகரங்களின் மறைவிடங்களிலும் தங்குகிற என் புறாவே, உன் முகரூபத்தை எனக்குக் காண்பி, உன் சத்தத்தை நான் கேட்கட்டும், உன் சத்தம் இன்பமும், உன் முகரூபம் அழகுமாயிருக்கிறது என்றார்."

வெளிப்படுத்தலில் இந்த சபை சிமிர்னா என்று அழைக்கப்படுகிறது. சிமிர்னா என்பதற்கு கசப்பு என்று பொருள். அக்காலத்தில் சபை மிககொடுமையான உபத்திரவங்களுக்குள் உட்படுத்தப்பட்டபடியால் இந்த பெயர் அதற்கு பொருத்தமாக இருக்கிறது. இவைகள் சம்பவித்த வருடங்கள் கிபி 70 முதல் கிபி 313வரை. மெழுகுவர்த்தியை அணைப்பது போல இவர்கள் நிர்மூலமாக்கப்பட்டார்கள். ரோம சாமராஜ்யத்தின் கொடூரமான இந்த வாதைகளின் மத்தியில் மணவாட்டி என்ன செய்திருக்கக்கூடும் ? மண்மேடுகளின் கீழும், பாறைகளின் வெடிப்பிலும் இவள் ஒளிந்திருந்தாள். ரோமர்கள் தங்களுக்கென்று பூமிக்கடியில் ஏற்படுத்தின கல்லறைகளில் ஆயிரக்கணக்கான கிறிஸ்தவர்கள் மறைந்திருந்தார்கள்.

15ம் வசனத்தில் மணவாட்டியும் அவளுடைய தோழிகளும் ஆர்வமூட்டும் ஒரு காரியத்தை குறிப்பிடுகிறார்கள் - "திராட்சத்தோட்டங்களைக் கெடுக்கிற குழிநரிகளையும் சிறுநரிகளையும் நமக்குப் பிடியுங்கள் நம்முடைய திராட்சத்தோட்டங்கள் பூவும் பிஞ்சுமாயிருக்கிறது." ரோம ராஜ்யத்தின் வல்லமை மணவாட்டிக்கு எதிராக செயல்பட்டுகொண்டிருப்பதினால், திராட்சதோட்டத்தை கெடுக்கும் அந்த கொடூரமான உபத்திரவங்களை தடைசெய்வதற்கு அவள் குழிநரிகளை பிடிக்கும்படி ஆண்டவரிடம் விண்ணப்பிக்கிறாள். ஏரோது மிக தந்திரமுள்ள இரக்கமற்ற ராஜாவாக இருந்ததினால் இயேசு ஏரோதை "நரி" என்று அழைத்தார். (லூ 13:32) அதேபோல் இந்த வேதபகுதியிலும், "நரிகள்" என்று சொல்லப்படும் பொருள் ஒத்திருக்கிறது.

உண்மையில் ஏரோது சாத்தானைபோல மிகவும் வல்லமைப்படைத்த நரியாக இருந்தான். சபையின் இரண்டாம் கட்டத்தில் திராட்சைதோட்டமானது நீரோ மற்றும் டயோக்ளீசன் போன்ற "சிறு நரிகளால்" பயமுறுத்தப்பட்டது.

**நிலை 3 -** (உன்னதப்பாட்டு 3:1-5)

**போப் மார்க்கம் எழும்பியபோது சபையின் நிலை**

**பெர்கமு சபை** (வெளி 2:8-11)

3ம் அதிகாரத்தின் துவக்கத்தில் - "இராக்காலங்களில் என் படுக்கையிலே என் ஆத்தும நேசரைத் தேடினேன், தேடியும் நான் அவரைக் காணவில்லை. நான் எழுந்து நகரத்தின் வீதிகளிலும் தெருக்களிலும் திரிந்து, என் ஆத்தும நேசரைத் தேடுவேன் என்றேன், தேடியும் நான் அவரைக் காணவில்லை. நகரத்திலே திரிகிற காவலாளர் என்னைக் கண்டார்கள். என் ஆத்தும நேசரைக் கண்டீர்களா என்று அவர்களைக் கேட்டேன். நான் அவர்களை விட்டுக் கொஞ்சதூரம் கடந்துபோனவுடனே, என் ஆத்தும நேசரைக் கண்டேன், அவரை நான் என் தாயின் வீட்டிலும் என்னைப் பெற்றவளின் அறையிலும் கொண்டுவந்து விடுமட்டும் விடாமல் பற்றிக்கொண்டேன்." என்றாள்.

ஒருவர் சௌகரியமாக இளைபாரும் படுக்கை, விசுவாசத்தை அடையாளப்படுத்தும். காட்சியில் காணப்படும் படுக்கை திருப்தியாக தோன்றவில்லை. (ஏசா 28:20) ஆண்டவர் மணவாட்டியின் படுக்கையில் காணப்படவில்லை. இது "இருண்ட காலங்களில்" நடந்தது. அதிலிருந்து 1260 வருடங்கள் துவங்கியது. முக்கியமான விசுவாசத்தின் மூலம் தேவனுடைய ஆவி, வெளிப்படாமல் இருப்பதை மணவாட்டி கண்டு தன்னுடைய நேசரை தேடும்படி நகரத்தின் வீதிக்கு சென்றாள். வழியிலிருந்த காவலர்களை கண்டு, என் ஆத்தும நேசரைக் கண்டீர்களா என்று கேட்டாள். இவர்கள் கிறிஸ்துவ மத தலைவர்களை அடையாளப்படுத்து -கிறார்கள். ஆனால் அவளுக்கு எந்தவிதமான பதிலும் கிடைக்கவில்லை. ஆகவே அவள் தொடர்ந்து தன்னுடைய ஆத்தும நேசரை தேடினாள்.

அவள் தன்னுடைய ஆத்தும நேசரை கண்டுபிடித்தபின் -" அவரை நான் என் தாயின் வீட்டிலும் என்னைப் பெற்றவளின் அறையிலும் கொண்டுவந்து விடுமட்டும் விடாமல் பற்றிக்கொண்டேன்." என்று 4ம் வசனத்தில் வாசிக்கிறோம். கலாத்தியர் 4:26ம் வசனத்தின்படி ஆபிரகாமின் உடன்படிக்கையில், சாராள், சபைக்கு ஆவிக்குரிய தாயாக இருக்கிறாள். மணவாளனை தன்னுடைய தாயின் வீட்டிற்கு கொண்டுவரும் காரியமானது - அவள் கிறிஸ்துவின் மூலமும் அவளுடைய பலியின் உடன்படிக்கையின் மூலமும் தேவனோடு கொண்டுள்ள உறவை அவள் மீண்டுமாக அறிந்துகொள்வதை காட்டுகிறது. அனைத்து கோட்பாடுகளும் மத குருக்களின் ஆட்சியில் தொலைந்துபோனது. அதற்குபின் பலி செலுத்துவது தேவனுடைய ஊழியத்தை செய்து ஒரு சராசரியான அர்ப்பணிக்கப்பட்ட கிறிஸ்துவ வாழ்க்கையை ஜீவிப்பது போன்ற காரியங்களை பதின்மூன்றாம் நூற்றாண்டில் வாலடேன்ஸ் மீண்டும் ஸ்தாபிக்கப்படும் வரை இந்த முறைமைகள் காணப்படவில்லை.

**நிலை 4-**(உன்னதப்பாட்டு 3:6 -6:9)

**போப் மார்க்கம் ஆட்சியின்போது சபையின் நிலை**

**தியத்தீரா சபை** (வெளி 2:8-19)

4ம் அதிகாரத்தில் மணவாளன் தன்னுடைய மணவாட்டியைக் குறித்து தெளிவாக விவரிக்கிறார். அவளை ஒரு வெள்ளைப்போளமலை என்றும் சாம்பிராணிமலை என்றும் பரிமளதைலமும் வாசனை செடிகளுமுள்ள சிங்காரவனம் என்றும் அழைக்கிறார். (வசனம் -6) அவள் நாவின்கீழ் தேனும் பாலும் இருக்கிறதாக அவர் கூறுகிறார். மேலும் அவள் வஸ்திரங்களின் வாசனை லீபனோனின் வாசனைக்கொப்பாயிருக்கிறதாக அவர் கூறுகிறார். (வசனம் 10,11) வெளிப்படுத்தலில் சொல்லப்படும் தியத்தீரா சபைக்கு இது மிகவும் பொருத்தமானது. தியத்தீரா என்பதற்கு பலியின் சுகந்த வாசனை என்று பொருள். போப் மார்க்கத்தின் வல்லமை உச்சக்கட்டத்தில் இயங்கியது, மணவாட்டியின் பலி தேவனுக்கு முன் சுகந்த வாசனையாக ஏறெடுக்கப்பட்டது. அவளுடைய குணாதிசயங்கள் கனிதரும் அளவுக்கு தொடர்ந்து வளர்ச்சியடைய துவங்கியது.

ஆனால் இந்நிலை 12ம் வசனத்தில் மாறிவிடுகிறது - "என் சகோதரியே, என் மணவாளியே, நீ அடைக்கப்பட்ட தோட்டமும், மறைவு கட்டப்பட்ட நீரூற்றும், முத்திரிக்கப்பட்ட கிணறுமாயிருக்கிறாய்." அந்த சிங்காரவனத்தில் காணப்பட்ட சகலவிதமான கனிதரும் குணங்களும் இங்கு வீணாக போய்விட்டது போல தோன்றுகிறது. இப்படிப்பட்ட தோட்டம் அடைக்கப்பட்டால் அதினால் என்ன பயன் ? நீரூற்று கட்டப்பட்டதினால் என்ன லாபம் ? தெய்வீக திட்டத்தை பற்றி புரிந்துகொண்டால் மட்டுமே இது பயனுள்ளதாக இருக்கும். உலகத்தில் உள்ள பொது ஜனங்களுக்கு தேவையான சுகத்தையும் ஆசீர்வாதங்களையும் அளிப்பதற்கு சுவிசேஷ யுகத்தில் உள்ள சபைக்கு காலம் இல்லை என்பதை வெவ்வேறு யுகங்களை பற்றியும், காலங்களைப் பற்றியும் புரிந்துகொள்ளும்போது நாம் தெளிவாக அறிந்து கொள்ளலாம். இந்த வேலை அடுத்த யுகத்திற்கு ஒதுக்கிவைக்கப் பட்டிருக்கிறது. மற்றவர் உபத்திரவப்படும் போது அவர்களுக்கு உதவிசெய்ய

வேண்டும் என்ற அவளுடைய இருதயத்தின் விருப்பத்தை இங்கு காட்டுகிறது. (யாக் 1:27) வறுமையையும், வியாதிகளையும் அவள் காணும்போது அதை மாற்ற நினைக்கிறாள். ஆனாலும் அவள் முத்திரிக்கப்பட்டதினால் அவளால் கூடாமல் போகிறது. அவள் மரணத்தை நோக்குகிறாள் அதை இந்த உலகத்தை விட்டே நித்தியமாக விரட்ட விரும்புகிறாள் ஆனால் அந்த நீருற்று முத்திரிக்கப்பட்டிருப்பதினால் அவளால் முடியவில்லை.

ஆனால் நடக்கக்கூடிய மிகப் பெரிதான வேலைகளுக்கு அவளால் முடிந்தவரைக்கும் ஆய்த்தப்பணிகளை செய்யலாம். அவளுடைய இருதயத்தில் ஆவியின் கனிகள் முழுமையாக வளர்ந்திருப்பதை உறுதிப்படுத்தலாம். இராஜ்யத்தில் சிலர் ஆசீர்வாதங்களை பெற போராடுகிறபோது அவள் கற்றுகொண்ட உண்மையான பொறுமை அவர்களுக்கு ஆறுதல் அளிக்கும். அவள் இரக்கங்களை கற்றுக் கொள்வதினால், நெருக்கப்பட்ட இருதயங்களை கனிவோடு ஆதரிப்பாள். அவள் தன்னுடைய உள்ளத்தின் ஆழத்திலிருந்து நேசிக்க கற்றுகொண்டதால், அவள் சிங்கார வனத்தின் நற்கந்தம் விளைவிக்கும் செடிகளாகவும், கனிகொடுக்கும் மரங்களாகவும் மாறுகிறாள். இதனால் மனுக்குலத்திற்கு ஜீவனை மட்டும் அல்ல, தேவனோடு நல்லுறவையும் திரும்ப ஏற்படுத்துவாள்.

சிங்காரவனத்தைப் பற்றி மணவாளனுடைய விமர்சனங்களை கேட்ட மணவாட்டி - "வடக்கு காற்றே எழும்பு, தென்றலே, வா கந்தப்பிசின்கள் வடிய என் தோட்டத்தில் வீசு, என் நேசர் தம்முடைய தோட்டத்துக்கு வந்து, தமது அருமையான கனிகளைப் புசிப்பாராக" (உன்ன 4:16)என்று பதில் அளித்தாள். அவளுடைய தோட்டம் நீருற்றுகளால் நிரப்பப்படுவதற்கு, உபத்திரவங்களை அடையாளப்படுத்தும் வடக்கு காற்றை எவ்வளவு அற்புதமாக ஏற்றுக்கொள்ளுகிறாள். அவள் தேவனுக்கேற்ற கனிகளை கொடுக்க விரும்புகிறாள். மேலும் இனி வரும் காலத்தில் தாகமாக இருப்போருக்கும் ஜீவ தண்ணீரை கொடுக்க வாஞ்சிக்கிறாள். (வெளி 22:1,17) அந்த வடக்கு காற்றை ஏற்றுகொள்வதினால் அவளுக்கு நன்மையை வருவிக்கும் சோதனைகளை ஏற்றுக்கொண்டு ஆழமான ஆவிக்குரிய ஞானத்தை செயலாற்றுகிறாள்.

**நிலை 5** -(உன்னதப்பாட்டு 6:10-7:9)

**சீர்த்திருத்தலுக்கு முன் இருந்த சபையின் நிலை**

**சர்தை சபை** (வெளி 3:1-6)

6ம் அதிகாரத்தில் மீண்டுமாக மணவாட்டி விவரிக்கப்படுகிறாள் - "சந்திரனைப்போல் அழகும், சூரியனைப்போல் பிரகாசமும் கொடிகள் பறக்கும் படையைப்போல் கெடியுமுள்ளவளாய், அருணோதயம்போல் உதிக்கிற இவள் யார் ?" (வசனம் -10) ஜான் வைக்கிலிப் மற்றும் ஜான் ஹஸ்ஸினுடைய காலத்தை இது விவரிக்கிறது. ஐரோப்பாவில் ஜான் வைக்கிலிப் சீர்திருந்தலுக்கு அஸ்திபாரமாக ஒரு இயக்கத்தை துவங்கினார். சத்தியத்தின் கொடிகளை வல்லமையுள்ள படையை போல சுமந்த இந்த அற்புதமான சகோதரர்களின் வெளிச்சமான உபதேசங்கள் போப் மார்க்கத்தின் இருண்ட ஆட்சியில் ஒரு சிறிய விடியலாக தோன்றியது. தேவனுக்கு முன்பாக இவர்கள் சூரியனைபோல் பரிசுத்தமாக இருந்தார்கள். வேதாகமத்தை பொதுவான மொழிகளில் மொழிபெயர்த்து அனைத்து பாஷைக்காரர்களுக்கும் சத்தியத்தை அறிவிக்கவேண்டும் என்ற அவர்களின் விருப்பமானது சூரிய வெளிச்சமாகிய சுவிசேஷத்தின் சத்தியம் தேவனை தேடுபவர்களுக்கு கிடைக்க வழிவகுக்க துவங்கியது.

இந்நிலைக்கும் அடுத்து வரும் நிலைக்கும் ஒரு அருமையான பாலம் அமைக்கப்பட்டிருக்கிறது. 11ம் வசனத்தில் - "பள்ளத்தாக்கிலே பழுத்த கனிகளைப் பார்க்கவும், திராட்சச்செடிகள் துளிர்விட்டு, மாதளஞ்செடிகள் பூத்ததா என்று அறியவும், வாதுமைத் தோட்டத்துக்குப் போனேன்." என்று கர்த்தர் சொல்லுகிறார். திராட்சச்செடி துளிர்விட்டதா என்று அவர் பார்க்கும்படி சென்றார். ஆனால் இது அடுத்த நிலையை எடுத்துக்காட்டும் 7ம் அதிகாரம் 12ம் வசனம் வரைக்கும் இவைகள் துளிர்க்கவில்லை. ஐந்தாம் மற்றும் ஆறாம் சபைகளுக்கு இடையிலிருக்கும் பாலமானது, சீர்த்திருத்தலுக்கான ஆயத்தபணிகளை அதாவது உண்மையான சபை துளிர்த்து சீர்த்திருத்தல் ஏற்படுவதறக்கு எவ்வாறு அடித்தளம் இட்டது என்று தெளிவாக விவரிக்கிறது. ஆகவே உண்மையில் விக்கிலிப் "சீர்த்திருத்தலின் விடிவெள்ளி" என்று அழைக்கப்படுகிறார்.

**நிலை 6 -** (உன்னதப்பாட்டு 7:11 - 8:7)

**சீர்த்திருத்தலின் போது சபையின் நிலை**

**பிலதெல்பியா சபை** (வெளி 3:7-13)

"வாரும் என் நேசரே, வயல்வெளியில் போய், கிராமங்களில் தங்குவோம். அதிகாலையிலே திராட்சத்தோட்டங்களுக்குப் போவோம், திராட்சக்கொடி துளிர்த்து அதின் பூ மலர்ந்ததோ என்றும், மாதளஞ்செடிகள் பூப்பூத்ததோ என்றும் பார்ப்போம், அங்கே என் நேசத்தின் உச்சிதங்களை உமக்குத் தருவேன். தூதாயீம் பழம் வாசனை வீசும், நமது வாசல்களண்டையிலே புதியவைகளும் பழையவைகளுமான சகலவித அருமையான கனிகளுமுண்டு, என் நேசரே, அவைகளை உமக்கு வைத்திருக்கிறேன்." (உன்ன 7 :11-13)

இவைகள் மார்டீன் லூத்தரின் காலங்களையும் அதை தொடர்ந்துவந்த காலங்களையும் விவரிக்கிறது.

அக்காலத்தில் உண்மையான திராட்சசெடி மீண்டுமாக பூத்தது. அதன் விளைவாக உலகம் முழுவதும் சத்தியம் பரவ துவங்கியது. நாடுகளிலும், கிராமங்களிலும், பொது ஜனங்களிடமும் சத்தியம் பிரசங்கிக்கப்பட்டது. சபையின் இந்த நிலை"புதியவைகளும் பழையவைகளுமான" என்பது எதை குறிக்கும் ? சந்தேகத்திற்கு இடமின்றி "விசுவாசத்தினால் நீதிமான் பிழைப்பான்" என்ற உபதேசத்தையே இது குறிக்கும். இந்த வசனங்கள் இதை "அன்பான கிச்சிலி பழம்" என்று அழைக்கிறது. சீர்த்திருத்தவாதிகள் இந்த பழைய சத்தியத்தை வெளிப்படுத்தியபோது தேவனுடைய அன்பான நற்கந்தத்தை வெளிப்படுத்தியது.

பிலதெல்பியா சபையின் முடிவை 8ம் அதிகாரம் 5ம் வசனம் விவரிக்கிறது. "தன் நேசர்மேல் சாய்ந்துகொண்டு வனாந்தரத்திலிருந்து வருகிற இவள் யார் ? கிச்சிலிமரத்தின்கீழ் உம்மை எழுப்பினேன்,அங்கே உமது தாய் உம்மைப் பெற்றாள், அங்கே உம்மைப் பெற்றவள் வேதனைப்பட்டு உம்மைப் பெற்றாள்." வனாந்திரம் என்ற சொல் நமக்கு பழக்கமான ஒரு அடையாளமாகும். போப் ஆட்சியின் 1260 வருடங்கள் உண்மையான சபை வனாந்தரத்திற்கு ஓடியது என்று நாம் வெளி 12:6ம் வசனத்தில் வாசிக்கிறோம். இந்த காட்சி இங்கு முடிவடைகிறது. தன்னுடைய நேசரின் மேல் சாய்ந்துகொண்டதால் மட்டுமே சபை பிழைக்கமுடிந்தது.

பிரன்சு புரட்சியாகிய பெரும் வெள்ளத்தை அனுப்பி உண்மையான சபையை அழிக்க சாத்தானுடைய திட்டத்தை 7ம் வசனம் குறிப்பிடுகிறது. "திரளான தண்ணீர்கள் நேசத்தை அளிக்கமாட்டாது, வெள்ளங்களும் அதைத் தணிக்கமாட்டது". பிரன்ச்சு புரட்சிக்கு ஒத்துபோகும் நேரடியான காலங்கள் - "அப்பொழுது அந்த ஸ்திரீயை வெள்ளங்கொண்டு போகும்படிக்குப் பாம்பானது தன் வாயிலிருந்து ஒரு நதிபோன்ற வெள்ளத்தை அவளுக்குப் பின்னாக ஊற்றிவிட்டது." (வெளி 12:15) ஆனால் நேசரின் மேல் வைத்திருந்த பற்று ஒருபோதும் குறையாததால், சாத்தானின் வஞ்சகமான சூழ்ச்சி தோல்வி அடைந்தது.

**நிலை 7** -(உன்னதப்பாட்டு 8:8-14)

### அறுவடையின் போது சபையின் நிலை-

### லவோதிகேயா சபை (வெளி 3:14-22)

வசனம் 8- "நமக்கு ஒரு சிறிய சகோதரியுண்டு, அவளுக்கு ஸ்தனங்களில்லை, நம்முடைய சகோதரியைக் கேட்கும் நாளில் அவளுக்காக நாம் என்ன செய்வோம் ?" மணவாட்டியும் அவளுடைய தோழிகளும் பேசிக்கொள்கிறார்கள். ஆகவே, இது சபைக்கும், திரள் கூட்டத்தாருக்கும் உள்ள செய்தியாக இருக்கவேண்டும். இங்கு சொல்லப்படும் சிறிய சகோதரி இஸ்ரயேல் ஜாதியைக் குறிக்கும். அவளுக்கு ஸ்தனங்கள் இல்லை என்று வாசிக்கிறோம். அதாவது இந்நிலையில் இஸ்ரயேலர்கள் மற்றவர்களை தாங்கி கொள்ள அல்லது உதவுவதற்கு தேவையான குணங்களை வளர்த்திருக்கமாட்டார்கள். அவளுடைய அவிசுவாசமே அவளுடைய ஆவிக்குரிய வளர்ச்சியை குன்றச்செய்தது. இதற்கு எதிரிடையாக "என் ஸ்தனங்கள் கோபுரங்கள்" என்று சபையைக் குறித்து 10ம் வசனத்தில் விவரிக்கிறது. ஒரு தாய் பாலூட்டும் அளவுக்கு தாய்மை அடைந்தது போல மணவாட்டி முழுமையாக வளர்ச்சியடைந்துவிட்டாள். மனுக்குலத்தை பராமரிப்பதற்கு அவள் ஆயத்தமாகிவிட்டாள்.

11 மற்றும் 13ம் வசனங்கள் ஆண்டவரின் திராட்சத்தோட்டத்தின் அறுவடையை குறித்து பேசுகிறது. "...ஒவ்வொருவன் ஆயிரம் வெள்ளிக்காசு கொண்டுவரும்படி ....... தோட்டங்களில் வாசம்பண்ணுகிறவளே, தோழர் உன் சத்தத்தைக் கேட்கிறார்கள், நானும் அதைக் கேட்கட்டும்". இந்த அறுவடையின் செய்தி மணவாட்டி வகுப்பாரை சேர்ந்த அனைவருக்கும் கொடுக்கப்படுகிறது. பாபிலோனை விட்டு வெளியேறுவதற்கு கொடுக்கப்படும் எச்சரிப்பாக இருக்கிறது.


இறுதியாக, இயேசு இந்த உலகத்தின் இராஜ்யங்களின் மேல் அதிகாரம் கொண்டவராக காட்சியளிக்கவேண்டும் என்பதற்காக இராஜ்யத்தை தீவிரமாக ஸ்தாபிக்கவேண்டும் என்ற விருப்பத்தை மணவாட்டி 14ம் வசனத்தில் வெளிப்படுத்துகிறாள்."என் நேசரே, தீவிரியும் கந்தவர்க்கங்களின் மலைகள் மேலுள்ள வெளிமானுக்கும் மரைகளின் குட்டிக்கும் சமானமாயிரும்." மணவாட்டியின் விருப்பத்திற்கு ஏற்றவாறு மணவாளனுடைய பதில் வெளிப்படுத்தலின் முடிவு வசனத்தில் கொடுக்கப்பட்டுள்ளது. "மெய்யாகவே நான் சீக்கிரமாய் வருகிறேன் என்றார். ஆமென் கர்த்தராகிய இயேசுவே, வாரும்.." (வெளி 22:20)

இது நித்தியமான நேசப் பாட்டின் முடிவை குறிக்கிறது. இரண்டாயிர வருடங்களாக வளர்ந்து வரும் உறவை எடுத்துக்காட்டுகிற உணர்ச்சியூட்டும் ஒரு நேசக் கதை. விலையேறப்பெற்ற நியாபகங்களை கொண்டதும், விசேஷமாக இப்படிப்பட்ட வாழ்க்கையை வாழ்ந்தவர்களின் பொக்கிஷமாக இருக்கும் ஒரு கதை. வரும் காலங்களில் இவர்களின் ஐக்கியம் பரலோகத்திலும், பூமியிலும் பெரும் மகிழ்ச்சியை உண்டுபண்ணும்.

"நாம் சந்தோஷப்பட்டுக் களிகூர்ந்து அவருக்குத் துதிசெலுத்தக்கடவோம். ஆட்டுக்குட்டியானவருடைய கலியாணம் வந்தது, அவருடைய மனைவி தன்னை ஆயத்தம்பண்ணினாள் என்று சொல்லக் கேட்டேன்." (வெளி 19: 7)

தேவனுடைய வீடு

# சாலொமோனின் ஆலயம்



"இப்போதும் கர்த்தர் சொல்லிய தம்முடைய வார்த்தையை நிறைவேற்றினார், கர்த்தர் சொன்னபடியே, நான் என் தகப்பனாகிய தாவீதின் ஸ்தானத்தில் எழும்பி, இஸ்ரயேலின் சிங்காசனத்தின்மேல் உட்கார்ந்து இஸ்ரயேலின் தேவனாகிய கர்த்தரின் நாமத்திற்கு ஆலயத்தைக் கட்டினேன்." -1இராஜாக்கள் 8:20

**Edmund Jezuit**

நமக்கு பாடங்களை கற்பிக்க அநேக காட்சிபொருள்களை வசனங்கள் பயன்படுத்துகிறது. எடுத்துக்காட்டாக ஆசரிப்புக்கூடாரம், சாலொமோனின் ஆலயம் மற்றும் எசேக்கியேலின் தேவாலயம். மேலும், ஜனங்கள், மிருகங்கள், பறவைகள், மரங்கள், பூச்சிக்களும் நமக்கு பாடங்களை கற்பிக்கலாம். ஒவ்வொன்றும் தனித்தனியாக வெவ்வேறு பாடங்களை கற்பித்தாலும், அவைகள் அனைத்தும் தெய்வீக திட்டத்திற்கு தொடர்புடையதாகவே இருக்கிறது.

சாலொமோனின் ஆலயத்தைப் பற்றி தெளிவாக புரிந்துகொள்ள, சொல்லர்த்தமான ஆலயம் ஒரு நிழல் என்றும், அதன் நிஜமான பொருள் ஆவிக்குரிய ஆலயத்தை குறிப்பிடுகிறது என்பதற்கு நாம் பொருளும் / நிழலுமான திறவுகோலை பயன்படுத்தவேண்டும்.

அப்போஸ்தலனாகிய பவுல் நம்முடைய சரீரங்களை ஆலயம் என்று எழுதுகிறார் - "நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா ? "(1கொரி 3:16,17) பேதுரு ஒவ்வொரு தனிப்பட்ட சபை அங்கத்தினர்களையும் ஜீவனுள்ள கற்களை போல என்று குறிப்பிடுகிறார் - "ஜீவனுள்ள கற்களைப்போல ஆவிக்கேற்ற மாளிகையாகவும், இயேசுகிறிஸ்து மூலமாய்த் தேவனுக்குப் பிரியமான ..... ஆசாரியக்கூட்டமாகவும் கட்டப்பட்டுவருகிறீர்கள்."(1பேதுரு 2:5) உடனடியாக நம்முடைய சிந்தை சாலொமோன் கட்டின சொல்லர்த்தமான ஆலயத்தை நினைவுப்படுத்துகிறது. நிஜத்திற்கும், நிழலுக்கும் உள்ள தொடர்பை பாருங்கள் - சொல்லர்த்தமான கற்கள் மற்றும் ஜீவனுள்ள கற்கள்.

தேவனுடைய ஜனங்களை "தேவனுடைய ஆலயம்" என்று அப்போஸ்தலனாகிய பவுல் அடையாளப்படுத்துகிறார். பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும் இது மிக அழகாக சித்தரிக்கப்படுகிறது என்று நாம் கண்டுபிடிக்கலாம். ஒரு வகையில், நம்முடைய சரீரங்கள் ஆசரிப்புக்கூடாரம் அல்லது தேவன் தங்குமிடமாக இருக்கிறது. ஆதியிலிருந்த ஆசரிப்புக்கூடாரம் ஒரு ஆலயமாக கருதப்பட்டது ஏனெனில், தேவன் வாசம் செய்யும் இடம் பரிசுத்தஸ்தலமாக இருந்தது. பவுல் தேவனுடைய ஜனங்களை தேவனுடைய ஆலயம் என்று குறிப்பிடுகையில், நம்முடைய சரீரங்கள் பரிசுத்த ஆவி வாசம் செய்யும் ஆசரிப்புக்கூடாரமாக குறிப்பிடுகிறார். ஆகவே நம்முடைய சரீரங்கள் தேவன் வாசம் செய்யும் தற்காலிகமான இடமாக உள்ளது.

ஆயினும், காலப்போக்கில் ஒரு மிக பெரிய மாற்றம் முழுமையாக ஏற்படும். இந்த தற்காலிகமான வாசஸ்தலம் நிரந்தரமான ஆலயமாக மாறிவிடும். பரிசுத்தவான்கள் பூரணப்பட்டபின் ஆவிக்குரிய சரீரங்களை பெற்றுகொள்வார்கள். இந்த ஒரு மிகப் பெரிய மாற்றத்தை, இராஜாவாகிய சாலொமோன் கட்டின அற்புதமான ஆலயம் அடையாளப்படுத்துகிறது.

சபையின் அங்கத்தினர்களை ஜீவனுள்ள கற்கள் என்று பேதுரு குறிப்பிடும்போது, அவர் சாலொமோனின் ஆலயத்தில் உள்ள சொல்லர்த்தமான கற்களைப் பற்றி யோசித்தார். அதில் கட்டப்படும் எந்த கல்லும் அந்த இடத்திற்கு வருவதற்கு முன்னதாகவே செப்பனிடப்பட்டு வடிவமைக்கப்பட்டது. இந்த உலகமாகிய கற்சுரங்கத்திலிருந்து ஜீவனுள்ள கற்கள் பிரிக்கப்படும் மிக அழகான ஒரு பாடம் இங்கிருப்பதை நாம் காணலாம். நாம் அந்த கற்சுரங்கத்திலிருக்கும் போதே, நம்முடைய தேவன் நம்மை உருவாக்க துவங்குகிறார். அந்த கற்சுரங்கத்திலிருந்து நாம் பிரிக்கப்பட்டு, ஒன்று சேர்க்கப்பட்டு, இனிவரும் வேலைகளுக்காக செப்பனிடப்படுவதை சாலொமோனின் ஆலய பணி மிக அழகாக சித்தரிக்கிறது.

சபை ஒரு ஆலயமாக கட்டப்பட்டு வருவதை நாம் சிந்திக்கும்போது, இனி வரும் காலத்தில் நிறைவேற்றப்படுவதற்கு அநேக வேலைகள் இருப்பதை நாம் உணரலாம். ஒரு ஆலயம் குறிப்பான சில முக்கியமான வேலைகளை நிறைவேற்ற கடமைப்பட்டிருக்கிறது. ஜனங்களுக்கு முன் ஒரு காட்சிபொருளாக இருப்பதற்கு ஆலயம் கட்டப்படுவதில்லை. ஆகவே கிறிஸ்து என்னும் நிஜமான ஆலயம் நிச்சயமாக செயலாற்றும். மனுக்குலத்தை தேவனோடு தொடர்பு கொள்ள இந்த ஆலயம் பயன்படுத்தப்படும். இது ஜனங்களின் ஜெபவீடாக இருக்கும். தேவனுடைய இந்த ஆலயத்தின் வழியாக அதாவது மகிமையடைந்த கிறிஸ்து மற்றும் சபையின் வழியாக ஜனங்கள் அனைவரும் தேவனை தேடி தொழுதுக்கொள்வார்கள். ஆகவே ஏசாயா எழுதும்போது - "திரளான ஜனங்கள் புறப்பட்டு வந்து - நாம் கர்த்தரின் பர்வதத்துக்கும், யாக்கோபின் தேவனுடைய ஆலயத்துக்கும் போவோம் வாருங்கள், அவர் தமது

வழிகளை நமக்குப் போதிப்பார், நாம் அவர் பாதைகளில் நடப்போம் என்பார்கள், ஏனெனில் சீயோனிலிருந்து வேதமும், எருசலேமிலிருந்து கர்த்தரின் வசனமும் வெளிப்படும்." (ஏசா 2:3) என்று எழுதினார்.

தேவன் மகிமையடைந்த சபையில் நிரந்தரமாக வாசம்செய்து அதன் வழியாக இந்த உலகத்தை ஆசீர்வதிப்பார். விசேஷமாக தேவனுடைய பரிசுத்த வீடாகிய ஆவிக்குரிய ஆலயத்தை நோக்குபவர்களுக்கு நிச்சயமாக ஆசீர் வழங்குவார்.

அக்காலத்தில் சாலொமோன் கட்டின ஆலயம் மட்டுமே மிக உயர்ந்தாகவும், பிரமாண்டமாகவும் இருக்கவில்லை. இதை காட்டிலும் பெரிய ஆலயங்கள் கட்டப்பட்டிருந்தாலும், சாலொமோனின் ஆலயம் விலையுயர்ந்த பொருட்களினால் அலங்கரிக்கப்பட்டதினால், மற்ற எல்லா ஆலயங்களைவிட செல்வமிக்கதாக இருந்தது. அந்த ஆலயத்தை கட்டும்போது அதில் பயன்படுத்தப்பட்ட பொன், வெள்ளி, விலையேறபெற்ற கற்களை பார்க்கும்போது இந்த ஆலயம் ஒரு தனித்துவம் வாய்ந்ததாக இருக்கிறது. சாலொமோனின் தந்தை தாவீது இந்த ஆலயத்தை கட்ட மிகவும் வாஞ்சையாக இருந்தார் ஆனால் - "..கர்த்தருடைய வார்த்தை எனக்கு உண்டாகி - நீ திரளான இரத்தத்தைச் சிந்தி, பெரிய யுத்தங்களைப் பண்ணினாய், நீ என் நாமத்திற்கு ஆலயத்தைக் கட்டவேண்டாம், எனக்கு முன்பாக மிகுதியான இரத்தத்தைத் தரையிலே சிந்தப்பண்ணினாய்."(1நாளா 22:8) என்று தேவன் அவருக்கு தடைவிதித்தார்.

தாவீது ஒரு யுத்த மனுஷனாக இருந்தார். இந்த சுவிசேஷ யுகத்திலிருக்கும் சபையை தாவீதின் நிலையை அடையாளப்படுத்துகிறது. இக்காலத்தில் கிறிஸ்துவுக்கு நல்ல போர் சேவகர்களாக இருக்கும் சபை ஜனங்கள், இந்த உலகத்தையும், மாம்சத்தையும், சாத்தானையும் எதிர்த்து போராடிக்கொண்டும், எச்சரிப்புகொடுத்துகொண்டும் இருக்கிறார்கள். ஆனால் சாலொமோன் மகிமையடைந்த சபையை அடையாளப்படுத்துகிறார்.

இது தாவீதுக்கு மிக பெரிய ஏமாற்றத்தை கொடுத்தாலும், தன்னுடைய குமாரனாகிய சாலொமோனுக்கு ஆலயம் கட்ட வாய்ப்பு கிடைத்ததை எண்ணி அவர் ஆறுதல் அடைந்தார். அந்த ஆலயத்திற்கு வேண்டிய பொருட்களை சேகரிப்பதற்காகவும், அந்த ஆலயத்தின் வரைபடத்தை பெற்றுகொண்டதில் தாவீது சந்தோஷம் அடைந்தார். இவையனைத்தையும் தாவீது சாலொமோனிடம் ஒப்படைத்தார்.

ஆபிரகாம் ஈசாக்கை பலி செலுத்தி இடமாகிய அதே மோரியா மலையில் ஆலயத்தை கட்டும் படி சாலொமோனுக்கு கட்டளைகொடுக்கப்பட்டது. அந்த இடத்தை சுற்றியுள்ள பக்கங்கள் செங்குத்தாக இருந்ததினால், கட்டுவதற்கு மிக கடினமாக இருந்தது. இருப்பினும் அனைவரின் கண்களும் தெளிவாக காட்சியை பெறுவதற்கு தேவன் இந்த ஆலயத்தை உயர்வான இடத்தில் கட்டும்படி விரும்பினார். ஆனால் ஆசரிப்புக்கூடாரம் தரையில் நிருவப்பட்டது.

மிக பிரமாண்டமானதும், மிகவும் முக்கியத்துவம் வாய்ந்துமான இந்த செயல் முறைதிட்டத்தை புரிந்துகொள்வது மிகவும் கடினமாக உள்ளது. இந்நாளில் உள்ள மதிப்பை பார்க்கும் போது மூன்று பில்லியன் டாலர்கள் மதிப்புள்ள தங்கமும், வெள்ளியும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த ஆலயத்தை கட்ட 30,000 இஸ்ரயேலர்களும், 1,53,000 கானானியர்களும் வேலை செய்தார்கள். இவ்வளவு ஆட்கள் இருந்தும் இதை கட்டுவதற்கு ஏழு வருடங்கள் சென்றது. பொருட்களை ஆயத்தப்படுத்த மூன்று வருடங்கள் தேவைப்பட்டது.

அந்த கட்டிடம் இரண்டு அறைகள் கொண்டிருந்தது. பரிசுத்த ஸ்தலம் என்ற முதல் அறை, முப்பதடி உயரமும், முப்பதடி அகலமும், அறுபதடி நீளமுமாக இருந்தது. அதில் பத்து பொன் மேஜைகளும், பத்து பொன் குத்துவிளக்குகளும், ஒரு தூபபீடமும் இருந்தது. மகா பரிசுத்த ஸ்தலம் என்று அழைக்கப்படும் இரண்டாவது அறை சரியாக முப்பது அடி கொண்ட ஒரு கனசதுரமாக இருந்தது. அதில் புதிதாக கட்டப்பட்ட இரண்டு மிக பெரிய கேரூபீன்கள் அந்த பழைய உடன்படிக்கை பெட்டியின் மேல் நிழலிட்டது. ஆசரிப்புக்கூடாரத்தில் உள்ள இரண்டு அறைகளில் ஒன்றை விட மற்றொன்று இரட்டிப்பான அளவில் இருந்தது.

இரண்டு அறைகளுக்கும் எசேக்கியேலின் ஆலயத்தில் உள்ள ஊசலாடும் கதவுகளை போல் இல்லாமலும், ஆசரிப்புக்கூடாரத்தில் உள்ள பின்னப்பட்ட தொங்கு திரைச்சீலைகளைபோல் இல்லமாலும் மடிப்பு கதவுகள் இருந்தன. (1இரா 6:34)

அந்த கட்டிடத்திற்கு முன் இரண்டு மிகப்பெரிய தூண்கள் இருந்தன. அதை சுற்றி பிரகாரத்தில் ஒரு மிக பெரிய பலிபீடம் நிறுத்தப்பட்டது. (ஆசரிப்புக்கூடாரத்தில் உள்ள பலிபீடத்தைபோல் நான்கு மடங்கு பெரிதாக இருந்தது.) அதற்கு பின் ஒரு பெரிய தண்ணீர் தொட்டி கட்டப்பட்டிருந்தது. அந்த தொட்டியின் வட்ட குறுக்களவு பதினைந்து அடிகளும், ஏழரை அடி உயரமுமாக இருந்தது. அதில் ஆயிரக்கணக்கான காலன் தண்ணிர் கொண்டது. அங்கு சிறிய அளவில் பத்து தண்ணீர் தொட்டிகள் சக்கரத்தின் மேல் வைக்கப்பட்டிருந்தது. இவைகள் ஆறு அடி சதுர அகலமும், நான்கரை அடி உயரமுமாக இருந்தது.

கற்களினால் கட்டப்படும் எந்த கட்டிடத்திற்கும் ஒரு மூலைக்கல் இருக்கவேண்டும். அந்த கல்

கட்டிடத்தின் சுவர்களுக்கு அஸ்திபாரக்கல்லாகவும், துவக்க நிலையாகவும் ஸ்தாபிக்கப்படும். இந்த ஆலயத்திற்கும் ஒரு மூலைக்கல் இருந்தது.

கீழ்நோக்கியுள்ள வளைவில் மூலைக்கல்லை வைக்க திட்டமிடப்பட்டது. அந்த மூலைக்கல் இரு சுவர்களையும் தாங்கி பிடிப்பதினால் ஒரு உறுதியான அஸ்திபாரம் தேவைப்பட்டது. இது ஆலயத்தின் அஸ்திபாரத்தை தாங்கக்கூடிய மிக முக்கியமான கல்லாக இருந்தது. ஆலயம் கட்டுபவர்கள் மிகவும் ஞானமாக வேலைகளை செய்யவேண்டியதாக இருந்தது. கட்டிடக்கலை நிபுணர்கள் ஒரு தனித்துவம் வாய்ந்த கல்லை வெட்டி அந்த இடத்தில் வைத்தார்கள். அது பதினாலு அடி நீளமும் நான்கு அடி உயரமுமாக இருந்தது. ஆலயத்திற்கு உறுதியான ஆதாரமாக இருக்கும்படி இந்த கல்லை பூமியில் உள்ள இயற்கையான கல்லில் புதைத்தார்கள். நிழலாக இருக்கும் இந்த கல் நிஜத்தில் நம்முடைய ஆண்டவராம் இயேசுவை மிக அழகாக சித்தரிக்கிறது. "ஆதலால் கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறதாவது - இதோ, அஸ்திபாரமாக ஒரு கல்லை நான் சீயோனிலே வைக்கிறேன், அது பரீட்சிக்கப்பட்டதும், விலையேறப்பெற்றதும், திட அஸ்திபாரமுள்ளதுமான மூலைக்கல்லாயிருக்கும், விசுவாசிக்கிறவன் பதறான்." (ஏசா 28:16)

ஆலயத்தின் சுவர்களுக்கு தேவைப்பட்ட அனைத்து கற்களும், திறமைவாய்ந்த கட்டிடக்கலை நிபுணரால் தேர்வு செய்யப்பட்டது. ஒவ்வொரு கல்லும் குறிப்பிட்ட அளவிலும், வடிவத்திலும் செப்பனிடப்பட்டது. திறமையுள்ள கட்டிட கலைநிபுணரால் மட்டுமே சரியான கல்லை தேர்வு செய்ய முடியும். கற்சுரங்கத்திலிருந்து கற்களை வெட்டி எடுத்த பின்னர் அதே இடத்தில் அவைகள் செப்பனிடப்பட்டது. அந்த கற்கள் வெட்டி எடுக்கப்பட்டபோது சாம்பல் நிறத்தில் உறுதியற்று இருந்ததாகவும் அவைகளின் மேல் சூரிய வெளிச்சம் பட்டபோது நிறம் வெண்மையாக மாறி உறுதிப்பட்டதாக சொல்லப்படுகிறது. ஒவ்வொரு கல்லும் அந்த ஆலயத்தில் ஒவ்வொரு குறிப்பிட்ட இடத்திற்காக வடிவமைக்கப்பட்டது.

இந்த செயல் முறை திட்டத்தின் முக்கியத்துவத்தை நாம் பார்க்கும்போது, எண்ணிக்கையில் அதிகமான மேற்பார்வையாளர்கள் தேவைப்பட்டிருக்கவேண்டும். 550 மேற்பார்வையாளர்களும், 3,300 மேஸ்திரிகளும் அங்கு வேலைசெய்தார்கள். அதில் 250 இஸ்ரயேலர்களும், 3,600 கானானியர்களும் இருந்தார்கள். இங்கு இஸ்ரயேலர்களை விட கானானியர்கள் எண்ணிக்கையில் அதிகமாக இருந்தார்கள். ஆகவே இந்த ஆலய பணியில் இஸ்ரயேலர்களை காட்டிலும் புறஜாதிகள் அதிக எண்ணிக்கையில் ஈடுபட்டிருந்தார்கள். ஈராம் என்ற ஒரு புறஜாதி இராஜா இந்த ஆலயத்திற்கு கொடுத்த பொன்னையும், வெள்ளியையும், **கேதார்** மரங்களையும் தேவன் அங்கிகரித்தார். அரசன் அந்த வேலைக்கான சிறந்த வேலைக்காரர்களையும் கொடுத்தான்.

இந்த ஆலயமாகிய தேவனுடைய வீட்டை கட்டுவதற்கு தேவன் புறஜாதிகளை ஏன் அனுமதிக்கவேண்டும் ? ஒருவேளை இஸ்ரயேலர்கள் தாங்களாகவே இந்த பணியை நிறைவேற்றி முடிக்க இயலாததினால் தேவன் இதை அனுமதித்தாரா ? நிஜத்தில் காணப்படும் ஜீவனுள்ள கற்களை செப்பனிடுகிறவர்கள் யார் ? சபைக்குள் ஐக்கியத்தில் உள்ள சகோதரர்கள் ஓரளவுக்கு இதை செய்கிறார்கள். ஆனால் வெளியில் புறஜாதியாராலும், அந்நியராலும், சொல்லபோனால் அதிகமாக ஆவிக்குரிய வளர்ச்சியில் பங்கை வகிக்கும் பகைவர்களாலும் செப்பனிடப் படுகிறார்கள். ஆகவே ஆவிக்குரிய ஆலயத்திற்கு தேவைப்பட்ட கற்களை வெளி ஆட்கள் சுத்தியல் கொண்டும் வாச்சுகளை கொண்டும் செப்பனிட்டு, அவைகளை மெருகேற்றுகிறார்கள். புறஜாதிகள் இந்த வேலையில் ஈடுப்பட்டிருந்தாலும், இவையனைத்தும் தெய்வீக கண்காணிப்பின் கீழ் நடந்து கொண்டிருப் -பதையும், அதன் பலனை பற்றியும் அவர்கள் அறியாதிருக்கிறார்கள்.

ஆலயம் கட்டும் இடத்தில் அந்த கற்கள் கொண்டுவரப்பட்டு, அவைகள் இருக்கவேண்டிய இடத்தில் வைக்கப்பட்டபோது, ஒவ்வொன்றும் அதன் அதன் இடத்தில் மிக நேர்த்தியாக பொருத்தப்பட்டது. அங்கு சுத்தியல், வாச்சுகளின் சத்தம் கேட்கப்படவில்லை என்று வாசிக்கிறோம். (1இரா 6:7) நமக்குள்ள பாடம் இங்கு மிக தெளிவாக உள்ளது. ஜீவனுள்ள கற்கள் இந்த பூமியிலேயே பணித்தீர்க்கப்படவேண்டும். எல்லா கற்களும் இந்த பூமியில் ஆயத்தப்படுகிறது. செப்பனிடப்பட்டு, முழுமையாக பணித்தீர்ந்து, வடிவமைக்கப்பட்ட கற்கள் மட்டுமே மோரியா மலைக்கு எடுத்துசெல்லப்பட்டது. அது போல் பூரணமாக்கப்பட்ட ஜீவனுள்ள கற்கள் மட்டுமே ஆவிக்குரிய ஆலயத்தை ஸ்தாபிக்க பரலோகம் செல்ல முடியும். அந்த ஆலயத்தில் ஒவ்வொரு கற்களும் அதன் அதன் இடத்தில் பொருத்தப்படும்.

### தூண்கள்

ஆலயத்தில் வாசலில் இரண்டு மிகப்பெரிய தூண்கள் நிறுத்தப்பட்டிருந்தது. வலது பக்கத்தில் இருக்கும் தூணை "யாகீன்" (யோயாகீம்) என்றும் இடது பக்கத்திலிருக்கும் தூணை "போவாஸ்" என்றும் அழைத்தார்கள். ஒவ்வொரு தூணின் வட்டத்தின் சுற்றளவு பதினெட்டு அடிகளும் முப்பத்து நான்கு அரை அடி உயரமும், வெண்கலத்தினால் செய்யப்பட்டதுமாக இருந்தது.

அந்த தூண்களின் பெயர்கள் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. யாகீன் என்பதற்கு "அவன்

ஸ்தாபிப்பான்" என்றும் போவாஸ் என்பதற்கு "அதற்குள் பலமாயிருக்கிறது" என்றும் பொருள். இவைகள் இரண்டும் - கிறிஸ்துவே தேவனுடைய இராஜ்யத்தை ஸ்தாபிப்பவர் மேலும் இந்த வல்லமையான வேலைக்கு தேவைப்படும் பலம் அவருக்குள் இருக்கிறது என்ற அர்த்தம் கொண்டதாக இருக்கிறது.

ஆலயத்தின் சுவர்கள் விசித்திரமாக மூன்று அடுக்குகளை கொண்டு மூடப்பட்டதைக் குறித்து 1இராஜாக்கள் 6:15-22ம் வசனங்களில் தெளிவாக விவரிக்கிறது. வெளிப்புறத்தில் உள்ள சுவர்கள் தனிப்பட்ட கற்களினால் கட்டப்பட்டது. சுவரின் உட்புறத்தில் கேதுரு மரங்களில் மொக்குகளும் மலர்ந்த பூக்களுமான சித்திரவேலை செய்யப்பட்டது. அதற்கு மேல் பொன் தகடு மூடப்பட்டது. மூடியாக அந்த பொன் தகட்டின் மேல் விதவிதமான நிறங்களை கொண்ட ஆபரணங்கள் பொருத்தப்பட்டது.

பொன்னினால் செய்யப்பட்டு, விலையுயர்ந்த கற்களினால் அலங்கரிக்கப்பட்ட இந்த இரண்டு அறைகளையும் சற்று கற்பனை செய்து பாருங்கள். எழுபது விளக்குகள் எரியும்போது, அங்கு சுற்றியுள்ள பொன்னும், விலையுயர்ந்த கற்களும், மாணிக்கங்களின் பிரதிபலிப்பு எவ்வளவு அழகாக இருந்திருக்கும்.

இந்த சுவர்களுக்கும், ஆசரிப்புக்கூடாரத்தில் உள்ள சுவருகளுக்கும் இடையில் ஒரு ஒற்றுமை காணப்படுகிறது. ஆசரிப்புக்கூடாரத்தில் ஒவ்வொரு பலகையையும் தாங்கிப்பிடிக்க இரண்டு வெள்ளி பாதங்கள் இருந்தன, அவைகள் பொன்னினால் மூடப்பட்டது. வெள்ளி தேவனுடைய வார்த்தைகளை அடையாளப்படுத்துவதினால், (சங் 12:6) சபையின் ஒவ்வொரு அங்கத்தினர்களும் சத்தியத்தினால் எவ்வாறு கட்டப்பட்டு, அதில் நிலைத்திருக்கிறார்கள் என்பதை தெளிவாக காட்டுகிறது. ஆனால் ஆலயத்தில் இவைகள் முழுமைபெறும்போது இவர்களின் தனித்துவம் காணப்படாமல் போய்விடுகிறது. ஆலயத்தில் ஒருவரும் தனிதனி கற்களை காண்பதில்லை. சபை முழுமையான ஒரே ஆலயமாக கட்டப்படும்.

**பரிசுத்த ஸ்தலம்**

பரிசுத்த ஸதலத்தின் வாசல்கள், மடக்கு கதவுகளை கொண்டிருந்தது. இந்த அறையில் ஏழு அகல்களை கொண்ட பத்து பொன் விளக்குகளும், பத்து பொன் மேஜைகளும், சுவருக்கு அருகில் ஒரு துாப பீடமும் இருந்தது. ஆசரிப்புக்கூடாரத்திற்கு ஒப்பிட்டு பார்க்கும்போது இங்கு பத்து விளக்குகள் வைக்கப்பட்டிருக்கிறது. இன்றைக்கு தேவனுடைய வெளிச்சத்திற்கு ஒரு எல்லை விதிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இறுதியில், மகிமையடைந்த தேவனுடைய ஆலயத்தில் தேவனுடைய வெளிச்சம் முழுமையாக பிரகாசிக்கும்போது, அதன் அளவு பல மடங்குகள் அதிகரிக்கும் என்பதை இந்த ஆலயத்தில் உள்ள பத்து விளக்குகளும் எடுத்துக்காட்டுகிறது. "இப்பொழுது கண்ணாடியிலே நிழலாட்டமாய்ப் பார்க்கிறோம், அப்பொழுது முகமுகமாய்ப் பார்ப்போம். இப்பொழுது நான் குறைந்த அறிவுள்ளவன், அப்பொழுது நான் அறியப்பட்டிருக்கிறபடியே அறிந்துகொள்ளுவேன்." (1கொரி 13:12)

ஆசரிப்புக்கூடாரத்தில் ஒரே மேஜை இருந்தது, ஆனால் இந்த ஆலயத்தில் பத்து மேஜைகள் வைக்கப்பட்டிருக்கிறது. ஒருவேளை இராஜ்யத்தில் ஒருவருக்கு அதிகமான நபர்கள் தேவனுடைய ஆகாரத்தினால் போஷிக்கப்படுவார்கள் என்பதை காட்டுவதற்கு இங்கு பத்து மேஜைகள் வைக்கப்பட்டிருக்கலாம்.

அந்த அறையில் உள்ள சுவர்களும், உட்கூரையும் பொன்னினால் மூடப்பட்டு, பலவிதமான விலையுயர்ந்த கற்களினால் அலங்கரிக்கப்பட்டது. உடனடியாக நாம் மல்கியா தீர்க்கதரிசியின் வார்த்தைகளை நினைவுக்குகொண்டுவரலாம் - "என் சம்பத்தை நான் சேர்க்கும் நாளிலே அவர்கள் என்னுடையவர்களாயிருப்பார்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார், ஒரு மனுஷன் தனக்கு ஊழியஞ்செய்கிற தன்னுடைய குமாரனைக் கடாட்சிக்கிறதுபோல நான் அவர்களைக் கடாட்சிப்பேன். "(மல்கி 3:17) உண்மையில் கர்த்தருடைய சம்பத்து அல்லது பொக்கிஷம் அந்த நிஜமான ஆலயத்தில் ஜொலிக்கும். விலையுயர்ந்த கற்கள் பொன்னில் பொருத்தப்பட்டிருப்பதை அவர்களின் தெய்வீக சுபாவத்தை எடுத்துக்காட்டுகிறது.

**மகா பரிசுத்த ஸ்தலம்**

பரிசுத்த ஸ்தலம் நம்மை மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் வழிநடத்துகிறது. அந்த வாசலில் உள்ள மடக்கு கதவுகளின் வழியாகவும், அதற்குபின் இரத்தாம்பரம், இளநீலம் மற்றும் சிவப்பு நிறங்களைக் கொண்டு கேரூபீன்களை சித்திரவேலையாக செய்திருக்கும் தொங்கும் திரை சீலைகளின் வழியாக ஒருவர் இந்த ஸ்தலத்திற்குள் நுழையவேண்டும்.

ஆசரிப்புக்கூடாரத்தில் மகா பரிசுத்த ஸ்தலத்தில் வைக்கப்பட்டிருந்த உடன்படிக்கை பெட்டி அந்த ஸ்தலத்தில் வைக்கப்பட்டிருந்தது. ஆனால் கிழக்கு திசையை நோக்கி வைக்கப்பட்டிருந்தது. ஆசரிப்புக்கூடாரம் வட - தெற்கு திசையில் நீளமாக இருந்தது. ஆனால் ஆலயம் கிழக்கு - மேற்கில் நீண்ட அளவை கொண்டிருந்தது. ஆசரிப்புக்கூடாரத்தில் இரண்டு கேரூபீன்களும் உடன்படிக்கை பெட்டியின் மேல் நின்றவைகளாக, தங்களுடைய சிறகுகளை பறப்பதற்கு ஆயத்த நிலையில் உயர எழுப்பி, தங்களுடைய தலைகளை கீழே குனிந்து அந்த பெட்டியை

நோக்கிகொண்டிருந்தது. இவைகள் தேவனுடைய அன்பையும், வல்லமையையும் அடையாளப்படுத்துகிறது. அவைகள் அந்த பெட்டியின்மேல் இரத்தம் தெளிக்கப்படுவதற்காக காத்துக்கொண்டிருந்தது. இரத்தம் தெளிக்கப்பட்டவுடன், தேவனுடைய நீதி நிறைவேற்றப்பட்டு, மரித்துகொண்டிருக்கும் மனுக்குலத்தை மீட்க அவைகள் வேகமாக பறந்து செல்லும் என்பதை காட்டுகிறது.

ஆலயத்திலிருக்கும் கேரூபீன்கள் மிக பெரிதாக இருந்தது. "அந்தக் கேருபீன்களை உள் ஆலயத்திலே வைத்தான், கேருபீன்களின் செட்டைகள் விரித்திருந்ததினால், ஒரு கேருபீனின் செட்டை ஒரு பக்கத்ததுச் சுவரிலும், மற்றக் கேருபீனின் செட்டை மறுபக்கத்துச் சுவரிலும் தொடத்தக்கதாகியிருந்தது, ஆலயத்தின் நடுமையத்தில், அவைகளின் செட்டைகள் ஒன்றொடொன்று தொடத்தக்கதாயிருந்தது. (1இராஜ 6:27)

தேவனுடைய மிகுந்த அன்பையும், வல்லமையையும் அவைகள் மிக பெரிய அளவில் இராஜ்யத்தில் செயல்படபோவதையும் இது காட்டுகிறது. தேவனுடைய இந்த இரண்டு குணங்களும் ஒன்றோடு ஒன்று தொடர்புடையதாக இருக்கிறது.

இந்த கேரூபீன்கள் ஒலிவ மரத்தால் செய்யப்பட்டு பொன் தகட்டினால் மூடப்பட்டிருந்தது. தேவனுடைய ஆவியை மிக அழகாக சித்தரிக்கும் ஒலிவ எண்ணையை கொடுக்கும் இந்த ஒலிவ மரம் நம்முடைய நினைவுக்கு வருகிறது.

மிக பிரமாண்டமான இந்த கேரூபீன்களின் நிழலில் ஆசரிப்புக்கூடாரத்திலிருந்த உடன்படிக்கை பெட்டி நின்றது. ஆனால் ஆலயத்தில் உள்ள உடன்படிக்கை பெட்டியிலிருந்த மன்னா வைத்திருந்த பொன் பாத்திரமும், ஆரோனின் துளிர்த்தகோலும் காணப்படவில்லை. பத்து கற்பனைகளைக் கொண்ட இரண்டு கற்பலகைகள் மட்டுமே அங்கிருந்தது. பரலோகத்தில் சபையின் நிலையை உண்மையில் இந்த காட்சி அற்புதமாக சித்தரிக்கிறது. மன்னா வைத்திருந்த பொன் பாத்திரம் அழியாமையை அடையாளப்படுத்துகிறது. "... ஜெயங்கொள்ளகிறவனுக்கு நான் மறைவான மன்னாவைப் புசிக்ககொடுத்து....."(வெளி 2:17) மகிமை அடைந்த சபை அங்கத்தினர்கள் அழியாமையை பெற்றிருப்பதினால் அவர்கள் இனி அழியாமையை தேடபோவதில்லை. ஆகவே ஆலயத்தில் மன்னா வைத்திருந்த பொன் பாத்திரம் காணப்படவில்லை.

பூமியில் தேவன் ஆசாரியத்துவத்திற்காக தேர்வு செய்த காரியங்களை - ஆரோனின் துளிர்த்தகோல் காட்டுகிறது. ஆனால் தேவனால் தேர்வுசெய்யப்பட்ட அனைவரும் பரலோகத்தில் அவருடைய உண்மையான இராஜரீகமான ஆசாரியர்களாக இருப்பார்கள். ஆகவே தேவன் இவர்களை மறுபடியும் தேர்வு செய்ய அவசியமில்லாததினால் அங்கு ஆரோனின் கோல் காணப்படவில்லை.

உடன்படிக்கை பெட்டியில் இருக்கும் அந்த இரண்டு கற்பலகைகள் என்றுமே எடுக்கப்படுவதில்லை. தேவனுடைய சட்டங்கள் நித்தியமானது.

ஆசரிப்புக்கூடாரத்திலிருந்த பெட்டிக்கும் ஆலயத்திலிருந்த பெட்டிக்கும் மற்றும் ஓர் வித்தியாசம் இருந்தது. அந்த பெட்டியை சுமப்பதற்கு இருந்த தண்டுகள் நீக்கப்பட்டிருந்தது. "பெட்டியிலிருக்கிற தண்டுகளின் முனைகள் சந்திதி ஸ்தலத்திற்கு முன்னே காணப்படத்தக்கதாய் அந்தத் தண்டுகளை இழுத்தார்கள், புறம்பே அவைகள் காணப்படவில்லை. அது இந்நாள்வரைக்கும் அங்கே இருக்கிறது."(11நாளா 5:9) இனி தண்டுகள் தேவைப்படாததினால் அவைகள் அங்கு காணப்படவில்லை. இஸ்ரயேலர்கள் வனாந்தரத்தில் பிரயாணமாக செல்கையில், உடன்படிக்கை பெட்டி தொடர்ந்து நகர்ந்துகொண்டே இருந்தது. ஆனால் அந்த பெட்டி நிரந்தரமான இடமாகிய ஆலயத்தில் வைக்கப்பட்ட பின், அது இனி நகரவேண்டிய அவசியமில்லாதிருந்தது. சாலொமோனின் ஆலயம் திரைக்கு பின்னால் இருக்கும் மகிமையடைந்த நிஜமான ஆலயத்தை அடையாளப்படுத்துகிறது. ஆனால் அக்காலத்தில் உடன்படிக்கை பெட்டியை சுமந்த ஆசாரியர்கள் ஆசரிப்புக்கூடார நிலைமையிலிருந்து ஆலயத்தின் நிலைமைக்கு கடந்துசென்றார்கள். பெரும்பாலான ராஜரீக ஆசாரியர்கள் இந்நிலைக்கு முன்னதாகவே சென்றுவிட்டார்கள். சபையின் கடைசி அங்கத்தினர்கள் மகிமையடைந்த ஆலயத்திற்குள் நுழையும் போது, உடன்படிக்கை பெட்டி தன்னுடைய இளைப்பாறுதலுக்குரிய இறுதி இடத்தை வந்து சேரும்.

**ஆலய பிரதிஷ்டை**

ஏழு வருடங்களுக்குப்பின், ஆலயம் கட்டி தீர்க்கப்பட்டது. ஆனால் முதலில் அதை பிரதிஷ்டை செய்யவேண்டியதாக இருந்ததினால், அதற்கான ஆயத்தபணிகள் மிக அதிக அளவில் இருந்தபடியால் ஆலய பிரதிஷ்டை ஒரு வருடத்திற்குப்பின் ஒத்திவைக்கப்பட்டது. காலப்போக்கில் இந்த பிரதிஷ்டை ஜனங்கள் அனைவரும் தங்களை சுத்திகரித்தபின் வரும் கூடாரப் பண்டிகையின் போது நடத்தவேண்டியதாக இருந்தது. இஸ்ரயேல் ஜாதி இதுவரையிலும் கண்டிராத பிரதிஷ்டையை அப்பொழுது கண்டது. உடன்படிக்கை பெட்டியை தவிர பழைய ஆசரிப்புக்கூடாரத்தின் சகல தட்டுமுட்டு பொருட்களும் பணியிலிருந்து ஓய்வெடுத்து கொண்டது.

மாபெறும் வெற்றி முழக்கங்களுடைய அணிவரிசையோடு விழா துவங்கியது. ஆசாரியர்கள் சாலொமோனோடு சென்று மகா பரிசுத்த ஸ்தலத்தில் உடன்படிக்கை பெட்டியை வைத்தார்கள். அதற்குபின் 120

வெள்ளி பூரிகைகள் ஊதப்பட்டது. பிரகாரத்தில் விசேஷமாக நிறுத்தப்பட்டிருந்த ஒரு மேடையில் சாலொமோன் மகிமையுள்ள வஸ்திரங்களை தரித்தவராக ஏறினார். எண்ணிக்கையில் அடங்காதவர்களின் துதி பாடல்கள் தேவனிடத்தில் ஏறெடுக்கப்பட்டது. தேவனுடைய அங்கீகரிப்பை பிரதிபலிக்க மிகப் பெரிய மேகம் ஒன்று ஆலயத்தை மூடியது. பாடல்களின் ஓசை குறைந்தபோது சாலொமோன் தன்னுடைய முகத்தை ஜனங்கள் பக்கமாக திருப்பி அவர்களை ஆசீர்வதித்தார். அவர் ஜனங்களோடு பேசி, கடந்த வரலாற்றையும், தேவனுடைய இந்த புதிய வீட்டின் முக்கியத்துவங்களை பற்றியும் அதை பிரதிஷ்டை பண்ணும் நாளைப் பற்றியும் அவர் விவரித்து சொன்னார். ஜனங்களுக்கு முன்பாக, சாலொமோன் பலிபீடத்திற்கு அருகில் வந்து தன்னுடைய கரங்களை வானத்திற்கு நேராக திருப்பி, முழங்கால் படியிட்டு ஜெபித்தார். நாம் எவ்வாறு அல்லது எந்த நிலையில் ஜெபிக்கவேண்டும் என்று குறிப்படும் முதல் வேத வசனம் இதுவே. ஜெபிக்கும்போது மனுஷர் எப்போதும் நிற்பார்கள்.

சாலொமோன் மிக அழகான ஒரு ஜெபத்தை தேவனிடத்தில் ஏறெடுத்தார். அவர் தேவனுடைய ஆசீர்வாதங்களுக்காக மன்றாடினார். மேலும் தேவனுடைய கட்டளைகளை கடைபிடிக்கும்படிக்கும் அவர்மேல் விசுவாசம் வைப்பதற்கும் ஜனங்களை துரிதப்படுத்தினார். (11நாளா 6:14-42)

அதற்குபின் தொடர்ச்சியான ஸ்தோத்திர பலிகள் ஏறெடுக்கப்பட்டது. 22,000 காளைகளும், 120,000 ஆட்டுக்கடாக்களும் பலியிடப்பட்டது. இவ்வளவு அதிகமான பலிகளை நாம் நினைத்து பார்க்கக்கூட முடியவில்லை. அங்கிருந்த பலிபீடமும் மிக பெரியதாக இருந்தது. ஆனால் இத்தனை பலிகளுக்கு அது போதாமல் இருந்தது. ஆகவே அந்த ஆலயத்திற்கு சுற்றியுள்ள முழு பிரகாரத்தையும் ஒரு மிக பெரிய பலிபீடமாக பரிசுத்தப்படுத்தினார். வானத்திலிருந்து வந்த அக்கினி அற்புதமாக பலிகளை பட்சித்தது என்று வசனங்கள் பதிவு செய்துள்ளது.

சாலொமோன் கட்டின நிழலான ஆலயத்தின் பிரதிஷ்டையை நாம் மீண்டுமாக ஆராய்ச்சி செய்கையில், பரலோகத்தில் நிஜமான ஆலயம் முடிவடையும் போது நடக்ககூடிய பிரதிஷ்டை மிக அழகாக சித்தரிக்கப்பட்டிருப்பதை நாம் உணரலாம். இந்த பிரதிஷ்டை உடனடியாக துவங்காது. காத்திருப்பதற்காக ஒரு காலம் இருக்கிறது. திரள் கூட்டத்தார் தங்களுடைய வஸ்திரங்களை ஆட்டுக் குட்டியானவரின் இரத்தத்தில் தொய்த்து வெளுக்கும் வரை இந்த பிரதிஷ்டை நடைபெறாது. திரள்கூட்டத்தாரும் முழுமை அடைந்து அவர்கள் வெள்ளை அங்கிகளை தரித்து நிற்கும்போது இந்த பிரதிஷ்டை துவங்கும்.

அன்று ஆலய பிரதிஷ்டையின் போது சாலொமோன் தனித்துவமான ஒரு பாத்திரமாக விளங்கினார். அவர் தனிமையாக பலிகளை செலுத்தினார். ஒரு இராஜாவாகவும், ஆசாரியனாகவும், நியாயதிபதியாகவும் பணிபுரிந்தார். ஆகவே தெய்வீகமான அதிகாரம் பெற்ற "சாலொமோனை விட பெரியவர்" என்ற பெயரை பெற்ற கிறிஸ்துவுக்கு நிழலாக சுட்டிக்காட்டப்பட்டார்.

ஆலய பிரதிஷ்டையின் முடிவில் சாலொமோன் ஜனங்களை அனுப்பிவிட்டார் -"எட்டாம் நாளில் ஜனங்களுக்கு விடைகொடுத்து அனுப்பினான், அவர்கள் ராஜாவை வாழ்த்தி, கர்த்தர் தமது தாசனாகிய தாவீதுக்கும் தமது ஜனமாகிய இஸ்ரயேலுக்கும் செய்த எல்லா நன்மைக்காகவும் சந்தோஷப்பட்டு மனமகிழ்ச்சியோடே தங்கள் கூடாரங்களுக்குப் போய்விட்டார்கள்." (1இராஜ8:66)


ஆயிரவருட ஆட்சிக்குபின் மனுக்குலத்தின் காரியங்களை எவ்வளவு அழகான தீர்க்கதரிசன காட்சியாக இங்கு காட்டப்பட்டுள்ளது. ஆயிரவருட ஆட்சியோடு சிருஷ்டிப்பின் ஏழாம் நாள் முடிவடையும். மனுக்குலத்தை மீண்டுமாக தேவனோடு ஒப்புரவாக்கி, ஒப்புராக்குதலின் வேலைகளை சபை முழுமையாக நிறைவேற்றி முடித்திருக்கும். சபை தன்னுடைய வேலைகளை செய்து முடித்து, மனுக்குலம் பூரணப்பட்டபின் வரும் அந்த எட்டாம் நாளில், சபை உலக ஜனங்களை பார்த்து -" இனி நீங்கள் போகலாம்" என்று சொல்வார்கள். அப்பொழுது ஜனங்கள் அனைவரும் சபையை மிக சிறப்பாக பாராட்டுவார்கள்.

ஜனங்கள் அன்று சாலொமோனாகிய தங்களுடைய இராஜாவை ஆசீர்வதித்தது போல மனுக்குலம் தங்களுடைய இராஜாவை வாழ்த்தி, அவர் பட்ட பாடுகளுக்காகவும், உபத்திரவங்களுக் -காகவும் நன்றி செலுத்துவார்கள். இஸ்ரயேல் ஜனங்கள் தங்களுடைய கூடாரங்களுக்கு போய் மகிழ்ச்சியாக இருந்தது போல தேவன் மனுக்குலத்திற்காக ஏற்படுத்தின இந்த உலகத்தில் ஜனங்கள் அனைவரும் சந்தோஷமாக இருப்பார்கள். அக்காலத்தைக் குறித்து ஏசாயா எழுதும் போது - "என் ஜனம் சமாதான தாபரங்களிலும், நிலையான வாசஸ்தலங்களிலும், அமைதியாய்த் தங்கும் இடங்களிலும் குடியிருக்கும்."(ஏசா 32:18)

அக்காலத்தில் முழு மனுக்குலத்தின் எண்ணங்கள் எவ்வாறு இருக்கும் என்று தாவீது தன்னுடைய புத்தகத்தில் வெளிப்படுத்தினார் - "கர்த்தாவே, என் முழு இருதயத்தோடும் உம்மைத் துதிப்பேன், உம்முடைய அதிசயங்களையெல்லாம் விவரிப்பேன்." (சங்கீ 9:1)

இந்த முழு மனுக்குலத்திற்கு முன் எப்படிப்பட்ட மகிமையான எதிர்க்காலம!

மேசியாவின் சங்கீதம்



# சங்கீதம் 72

"தாவீதுடைய கடைசி வார்த்தைகள் .... இஸ்ரயேலின் சங்கீதங்களை இன்பமாய்ப் பாடின ... ஈசாயின் குமாரனாகிய தாவீது ...."- 11சாமுயேல் 23:1

சாலொமோன் இரண்டாம் விசை இராஜாவானபோது அதாவது தாவீதின் மரணத்திற்கு ஒரு வருடத்திற்கு முன்னதாக இந்த சங்கீதம் எழுதப்பட்டிருக்கவேண்டும். (1நாளா 29:22,23) மேசியாவைப் பற்றி அநேக சங்கீதங்களில் இதுவும் ஒன்று. இயேசு உயிர்த்தெழுந்த பின் மோசேயின் நியாயப்பிரமாணத்திலும் தீர்க்கதரிசிகளின் ஆகமங்களிலும் **சங்கீதங்களிலும்** என்னைக் குறித்து எழுதியிருக்கிறவைகளெல்லாம் நிறைவேற வேண்டியதென்று, நான் உங்களோடிருந்தபோது உங்களுக்குச் சொல்லிக்கொண்டுவந்த விசேஷங்கள் இவைகளே...."(லூக் 24:44) என்று சொன்னார். கிறிஸ்துவின் பாடுகளையும், பலிகளையும், அவருடைய இராஜ்யத்தின் மகிமையான ஆட்சியையும் குறித்து அநேக சங்கீதங்கள் பாடப்பட்டிருக்கிறது. இருப்பினும் இந்த சங்கீதத்தில் அவருடைய மகிமையான ஆட்சி மிக அழகாக வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.

தாவீதின் குமாரன் தேவனுடைய நாமத்திற்கென்று ஒரு வீட்டை கட்டவேண்டும் என்று தேவன் தாவீதிடம் வாக்களித்திருந்தார். மேலும் அவருடைய இராஜ்யம் நித்தியமாக ஸ்தாபிக்கப்படும் என்றார். (11சாமு 7:11-17) தேவனுடைய இந்த வாக்குத்தத்தம் சாலொமோனிடத்தில் ஒரு பகுதி மட்டுமே நிறைவேறியது. ஆனால் இதனுடைய முழுமையான நிறைவேற்றம் "தாவீதின் குமாரனாகிய" கிறிஸ்துவின் நாட்களில் நிறைவேறும். இது கிறிஸ்துவின் சமாதானமும், நீதியுமான வரக்கூடிய ஆட்சிக்கு அடையாளமான காட்சிகள் முன்னதாகவே தாவீதின் வார்த்தைகள் மூலம் எழுதப்பட்டது.

## ஜெபம் - சங்கீதம் 72 :1

***சாலொமோனைப்பற்றிய சங்கீதம்.***

***தேவனே, ராஜாவுக்கு உம்முடைய நியாயத்தீர்ப்புகளையும், ராஜாவின் குமாரனுக்கு உம்முடைய நீதியையும் கொடுத்தருளும்.***

எபிரெய பாஷையில் "சாலொமோனுடைய..." என்று துவங்குகிறது. அதே வசனம் **KJV** யில் "சாலொமோனைப்பற்றிய..." என்று துவங்குகிறது. சந்தேகத்திற்கு இடமின்றி இந்த சங்கீதம் இராஜாவுக்காக ஏறெடுக்கப்படுகிற ஒரு ஜெபமாக இருக்கிறது. சாலொமோன் இராஜாவாகவும், இராஜாவாகிய தாவீதின் குமாரனுமாக இருக்கிறார் என்பதே இந்த ஜெபத்தின் பொருளாக இருக்கிறது.

ஆயினும், இங்கு இராஜா என்று தாவீதையும் "இராஜாவின் குமாரன்" சாலொமோனையும் குறிப்பிடுவதாக **கம்பானியன்** பைபிள் கருதுகிறது.

"ஈசாயின் புத்திரனாகிய தாவீதின் விண்ணப்பங்கள் முடிந்தது" என்று முடிவு வசனங்கள் குறிப்பிட்டாலும், ஐந்து புத்தகங்கள் கொண்ட ஒரு தொகுப்பின் இரண்டாவது பகுதியில் இந்த வசனம் சேர்க்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக இந்த சங்கீதத்தின் எழுத்தாளர் இதை முழுமையாக ஆதரிக்கவில்லை.

இந்த சங்கீதத்தை பொருத்தவரையில், ஆல்பட் பார்நெஸ் என்ற பிரபல வேதாகம வல்லுனரின் கருத்து - "இறுதியில், இந்த சங்கீதம் மேசியாவைக் குறித்தும் அவருடைய ஆட்சியைக் குறித்தும் விவரிப்பதற்காக வடிவமைக்கப்பட்டிருந்தாலும், அது சாலொமோனின் ஆட்சியைக் குறித்தும் சொல்லப்படுகிறது என்று சங்கீதக்காரன் நம்புவது தவறாக இருப்பதற்கு வாய்ப்பில்லை. சாலொமோனுடைய ஆட்சி அடையாளமாக வரக்கூடிய ஆட்சியை பிரதிபலித்தது.

## அவருடைய நீதி - சங்கீதம் 72:2-11

***அவர் உம்முடைய ஜனங்களை நீதியோடும், உம்முடைய ஏழைகளை நியாயத்தோடும் விசாரிப்பார். பர்வதங்கள் ஜனத்திற்குச் சமாதானத்தைத் தரும், மேடுகள் நீதியின் விளைவோடிருக்கும். ஜனத்தில் சிறுமைப்படு -கிறவர்களை அவர் நியாயம் விசாரித்து, ஏழையின் பிள்ளைகளை இரட்சித்து, இடுக்கண் செய்கிறவனை நொறுக்குவார். சூரியனும் சந்திரனுமுள்ளமட்டும், அவர்கள் உமக்குத் தலைமுறை தலைமுறையாகப் பயந்திருப்பார்கள். புல்லறுப்புண்ட வெளியின்மேல் பெய்யும் மழையைப் போலவும், பூமியை நனைக்கும் தூறலைப்போலவும் இறங்குவார். அவருடைய நாட்களில் நீதிமான் செழிப்பான், சந்திரனுள்ள வரைக்கும் மிகுந்த சமாதானம் இருக்கும். ஒரு சமுத்திரந்தொடங்கி மறுசமுத்திரம் வரைக்கும் நதிதொடங்கி பூமியின் எல்லைகள் வரைக்கும் அவர் அரசாளுவார். வனாந்தரத்தார் அவருக்கு முன்பாகக் குனிந்து வணங்குவார்கள், அவருடைய சத்துருக்கள் மண்ணை நக்குவார்கள். தர்ஷீசின் ராஜாக்களும் தீவுகளின் ராஜாக்களும் காணிக்கைகளைக் கொண்டுவருவார்கள், ஷேபாவிலும் சேபாவிலுமுள்ள***

***ராஜாக்கள் வெகுமானங்களைக் கொண்டுவருவார்கள். சகல ராஜாக்களும் அவரைப் பணிந்துகொள்வார்கள், சகல ஜாதிகளும் அவரைச் சேவிப்பார்கள்.***

பாதிக்கப்பட்டவர்களும், எளியோர்களும் பெறக்கூடிய உதவிகளையும், ஆசீர்வாதங்களையும் பற்றியே இந்த வசனங்கள் தொடர்ந்து பேசுகிறது. தேவனுடைய ஜனங்களை நியாயம்விசாரிக்க சாலொமோனுக்கு விசேஷித்த ஞானம் கொடுக்கப்பட்டிருந்தது. (1இரா 3:9-12) ஆகவே அவர்வரக்கூடிய ஞானமான மேசியாவின் ஆட்சியை சித்தரிக்கிறார். எதிர்காலத்தில் பூமியின் மேல் நடத்தப்படும் ஆட்சியின் அம்சங்களைக் குறித்து ஏசாயா தீர்க்கதரிசி விவரிக்கும்போது, இதே வார்த்தைகளை பயன்படுத்துகிறார் - "நீதியின்படி ஏழைகளை நியாயம் விசாரித்து, யதார்த்தத்தின்படி பூமியிலுள்ள சிறுமையானவர்களுக்குத் தீர்ப்புச்செய்து, பூமியைத் தமது வாக்கின்கோலால் அடித்து, தமது வாயின் சுவாசத்தினால் துன்மார்க்கரைச் சங்கரிப்பார். நீதி அவருக்கு அரைக்கட்டும், சத்தியம் அவருக்கு இடைக்கச்சையுமா யிருக்கும்." (ஏசா 11:4,5)ஹெரால்டு பிரதிகள் "நல்ல செய்திகளை" பிரசுரிப்பதுபோல பர்வதங்களும், மலைகளும் சமாதானத்தையும், நீதியையும் கொண்டுவரும். ஏசாயா தீர்க்கதரிசி அறிவிப்பது போல - "சமாதானத்தைக் கூறி, நற்காரியங்களைச் சுவிசேஷமாய் அறிவித்து, இரட்சிப்பைப் பிரசித்தப்படுத்தி - உன் தேவன் ராஜரீகம் பண்ணுகிறாரென்று சீயோனுக்குச் சொல்லுகிற சுவிசேஷகனுடைய பாதங்கள் மலைகளின்மேல் எவ்வளவு அழகாயிருக்கின்றன. (ஏசா 52:7) தேவனுடைய இராஜ்யத்தில் சமாதானமும், நீதியும் ஆட்சி செய்யும் என்ற காரியத்தை இந்த தீர்க்கதரிசன வார்த்தைகள் மிக அழகாக சித்தரிக்கிறது. (ஏசா 32:17) யோயேல் தீர்க்கதிரிசி எழுதும்போதும் - " அக்காலத்தில் பர்வதங்கள் திராட்சரசத்தைப் பொழியும், மலைகள் பாலாய் ஓடும், யூதாவின் ஆறுகள் எல்லாம் பிரவாகித்து ஓடும், ஒரு ஊற்று கர்த்தருடைய ஆலயத்திலிருந்து புறப்பட்டுச் சித்தீம் என்னும் பள்ளத்தாக்கை நீர்ப்பாய்ச்சலாக்கும்" (யோயேல் 3:18) மிக பெரிய தேசங்களுக்கும், சிறிய தேசங்களுக்கும் அடையாளப்படுத்தும் பர்வதங்கள் மற்றும் மலைகள் சமாதானத்தையும், நீதியையும் ஸ்தாபிக்கும்.

ஒவ்வொரு கால அளவின் மூலமும் - சூரியன், சந்திரன் அல்லது தலைமுறைகள் - மனுக்குலம் நித்திய காலங்களுக்கு இராஜாவை பயபக்தியோடு கனப்படுத்தும். ஆனால் சாலொமோனின் ஆட்சியின் காலத்தில் இது உண்மையாக இருக்கவில்லை. ஆனால் வரக்கூடிய இராஜ்யத்தில் ஆட்சி செய்யக்கூடிய இராஜாதி இராஜாவை இது துல்லயிமாக விவரிக்கிறது.

இந்த சங்கீத வார்த்தைகள், தாவீதின் கடைசி வார்த்தைகளுக்கு ஒத்திருக்கிறது - "கர்த்தருடைய ஆவியானவர் என்னைக் கொண்டு பேசினார், அவருடைய வசனம் என் நாவில் இருந்தது. இஸ்ரயேலின் தேவனும் இஸ்ரயேலின் கன்மலையுமானவர் எனக்குச் சொல்லி உரைத்ததாவது - நீதிபரராய் மனுஷரை ஆண்டு, தெய்வபயமாய்த் துரைத்தனம் பண்ணுகிறவர் இருப்பார். அவர் காலையில் மந்தாரமில்லாமல் உதித்து, மழைக்குப் பிற்பாடு தன் காந்தியினால் புல்லைப் பூமியிலிருந்து முளைக்கப்பண்ணுகிற சூரியனுடைய விடியற்கால வெளிச்சத்தைப் போல இருப்பார் என்றார்." (11சாமு 23:2-4)

இந்த இராஜ்யம் பூமியின் இறுதி எல்லை வரைக்கும் விஸ்தரிக்கப்படும். இதைக் குறித்து சகரியா தீர்க்கதரிசி சொல்லும்போது - "... அவருடைய ஆளுகை ஒரு சமுத்திரந் தொடங்கி மறுசமுத்திரம்வரைக்கும், நதிதொடங்கிப் பூமியின் எல்லைகள்பரியந்தமும் செல்லும். " (சகரி 9:10) உண்மையான சாலொமோனின் ஆட்சியில் இது நடைபெறாமல் போனாலும், மேசியாவின் இராஜ்யம் உலக அளவில் ஸ்தாபிக்கப்பட்டு, ஆட்சிக்கு உட்படுத்தப்படும்.

வனாந்தரத்தில் சஞ்சரிக்கும் சமுதாயத்திற்கு அப்பாற்பட்டவர்கள் அதாவது தங்களுடைய வழிகளில் நடப்பவர்கள், எந்த விதமான அதிகாரத்திற்கும் உட்படாதவர்கள், மேசியாவுக்கு முன் **சிரம் குனிவார்கள்.** அவர்கள் தங்களை முழுமையாக ஒப்புக்கொடுப்பார்கள் என்று வாசிக்கிறோம். அவருடைய எதிரிகளை பொருத்தவரைக்கும் -"மண்ணை நக்குவார்கள்" என்று வசனங்கள் குறிப்பிடுகிறது. (ஏசா 49:23) அல்லது இவர்கள் முற்றிலுமாக அழிக்கப்படுவார்கள். (மீகா 7:17)

சகல இராஜாக்களும் தலைவணங்குவார்கள் என்று இந்த சங்கீதம் குறிப்பிட்டாலும், தர்ஷீசின் ராஜாக்கள், தீவுகளின் ராஜாக்கள் மற்றும் ஷேபா விசேஷமாக குறிப்பிடப்படுகிறார்கள். தர்ஷீச் யாபேத்தின் வம்சாவழிவந்தவர்கள்(ஆதி 10:4,5) ஷேபா சேமின் வம்சாவழிவந்தவர்கள் (ஆதி 10:28) மற்றும் சேபா காமின் வம்சவழிவந்தவர்கள்.(ஆதி 10:7) இப்படியாக நோவாவின் மூன்று குமாரர்களின் வம்சாவழிகளில் வந்த இந்த முழு மனுக்குலமும் இராஜாவை பாராட்டி, வெகுமானங்களையும், காணிக்கைகளையும் கொண்டுவந்து பணிந்துகொள்வார்கள் என்று அடையாளமாக சொல்லப்படுகிறது.

"ஒரு சமுத்திரந்தொடங்கி மறுசமுத்திரம்வரை க்கும்" என்பது சவக்கடலிலிருந்து மத்தியதரைகடல் வரைக்கும். அடுத்து இங்கு சொல்லப்படும் நதி, ஐபிராத்தை குறிப்பிடுகிறது. வனாந்தரம் என்பது கிழக்கு அல்லது தெற்கு வரைக்கும். தர்ஷிஸ் மற்றும் தீவுகள் - மேற்கு வரைக்கும். இறுதியாக, "ஷேபா மற்றும் சேபா" - தெற்கில் சிவந்த சமுத்திரத்தில் உள்ள அனைத்து பாகங்களையும் குறிப்படும்." என்று ராபர்ட்டு ஆல்ட்டர், இந்த சங்கீதத்தில் சொல்லப்படும் எல்லைகளைக் குறித்து விமர்சிக்கிறார்.

## மகிமையான ஆட்சி - சங்கீதம் 72:12-17

***கூப்பிடுகிற எளியவனையும், உதவியற்ற சிறுமையானவனையும் அவர் விடுவிப்பார். பலவீனனுக்கும் எளியவனுக்கும் அவர் இரங்கி, எளியவர்களின் ஆத்துமாக்களை இரட்சிப்பார். அவர்கள் ஆத்துமாக்களை வஞ்சகத்திற்கும் கொடுமைக்கும் தப்புவிப்பார், அவர்களுடைய இரத்தம் அவருடைய பார்வைக்கு அருமையாயிருக்கும். அவர் பிழைத்திருப்பார், ஷேபாவின் பொன் அவருக்குக் கொடுக்கப்படும், அவர்நிமித்தம் இடைவிடாமல் ஜெபம்பண்ணப்படும், எந்நாளும் ஸ்தோத்திரிக்கப்படுவார். பூமியிலே மலைகளின் உச்சிகளில் ஒரு பிடி தானியம் விதைக்கப்பட்டிருக்கும், அதின் விளைவு லீபனோனைப்போல அசையும், பூமியின் புல்லைப்போல நகரத்தார் செழித்தோங்குவார்கள். அவருடைய நாமம் என்றென்றைக்கும் இருக்கும், சூரியனுள்ளமட்டும் அவருடைய நாமம் சந்தான பரம்பரையாய் நிலைக்கும், மனுஷர் அவருக்குள் ஆசீர்வதிக்கப்படுவார்கள், எல்லா ஜாதிகளும் அவரைப் பாக்கியமுடையவர் என்று வாழ்த்துவார்கள்.***

இராஜாக்களைப் பற்றி பேசினபின், இந்நாள் வரையிலும் நீண்ட காலமாக உதவியற்று கிடந்த சிறுமைப்பட்டவர்களைப் பற்றி தொடர்ந்து பேசுகிறார். இவர்கள் விடுவிக்கப்படுகிறார்கள் அல்லது இரட்சிக்கப்படுகிறார்கள். ( கிரையத்திற்கு கொள்வதற்கு என்று எபிரெய பதம் பொருள்படுகிறது) பெரியோர் முதல் சிறியோர் வரை மேசியாவின் சமாதானமும் நீதியுமான ஆட்சியில் பயனடைவார்கள்.

அனைவரும் இராஜாவை வாழ்த்துவார்கள். உண்மையில், இந்த இராஜ்யம் என்றுமே முடிவதில்லை. மனுக்குலம் தங்களால் முடிந்தவரைக்கும் பொன்னை அடையாளப்படுத்தும் மிக சிறந்த வெகுமாணங்களை இராஜாவுக்கு கொண்டுவருவார்கள். ஷேபா நாட்டு இராணி அதிகமான பொன்னை வெகுமானமாக கொண்டுவந்தாள், அவளுடைய இராஜ்யம் சாலொமோனுக்கு கீழ் இல்லாததினால் அவள் எந்தவிதமான கப்பமும் கட்டவில்லை. ஆனால் மற்ற இராஜாக்கள் சாலொமோனுக்கு கப்பங்களை கட்டினார்கள் என்று வசனங்களில் வாசிக்கிறோம். (1இராஜ 10:23-29). மகா இராஜாவினிடத்தில் காணிக்கைகளும், கப்பங்களையும் மனுக்குலம் செலுத்தும் என்பதை இங்கு அடையாளமாக சொல்லப்படுகிறது.

மேலும் வருங்காலத்தில் இந்த பூமி அதிகமான பலனை கொடுக்கும் என்று 16ம் வசனம் பேசுகிறது. (சங் 67:6) நெடுந்தொலைவிலும், லீபனோனின் அடர்த்தியான காடுகளிலும் இதன் செழுமை காணப்படும். பூமியில் மேல் நீர்பாய்ச்சப்பட்டு செழித்திருக்கும் புல்லை போல ஆண்டவரின் ஈடுபலியினால் நகரத்தார் அனைவரும் செழித்தோங்குவார்கள்.(ஓசியா 13:14, ஏசா 35:10)

சாலொமோன் தேவனால் ஆசீர்வதிக்கப்பட்டார். அவருடைய நாமம் இந்நாள் வரைக்கும் தொடர்ந்து நீடித்திருக்கிறது. ஆனால் இந்த வசனத்திற்கு இதை காட்டிலும் மிக மேன்மையான நிறைவேற்றம் - நித்தியமாக தேவனிடத்தில் ஆசீர்வாதத்தை பெற்ற இயேசு கிறிஸ்துவுக்குள் இருக்கிறது. இவருடைய நாமமே நித்தியமாக நீடித்திருந்து, எனறென்றைக்கும் நிலைத்திருக்கும்.

யோசுவா என்பதற்கான எபிரெய பதம் இயேசு, அதற்கு யேகோவா என் இரட்சகர் என்று பொருள். தங்களுடைய ஜீவனுள்ள நாட்களெல்லாம் மேசியாவை நித்தியத்திற்கு கனப்படுத்தும் போதெல்லாம், தேவனையும் கனப்படுத்துவார்கள். அந்த இராஜ்யத்தில் ஆபிரகாமுக்கு கொடுக்கப்பட்ட அற்புதமான வாக்குத்தத்தம் நிறைவடையும் - "உனக்குள் பூமியில் உள்ள முழு குடும்பத்தாரும் ஆசீர்வதிக்கப்படுவார்கள்." (ஆதி 12:3, கலா 3:8)

## தேவனை துதித்தல் - சங்கீதம் 72:18-20

***இஸ்ரயேலின் தேவனாயிருக்கிற கர்த்தராகிய தேவனுக்கு ஸ்தோத்திரமுண்டாவதாக, அவரே அதிசயங்களைச் செய்கிறவர். அவருடைய மகிமைபொருந்திய நாமத்துக்கு என்றென்றைக்கும் ஸ்தோத்திரமுண்டாவதாக, பூமி முழுவதும் அவருடைய மகிமையால் நிறைந்திருப்பதாக. ஆமென், ஆமென். ஈசாயின் புத்திரனாகிய தாவீதின் விண்ணப்பங்கள் முடிந்தது.***

தேவனை துதிப்பதோடு இந்த சங்கீதம் நிறைவடைகிறது. அவருடைய மகிமைபொருந்திய நாமம் என்றென்றைக்கும் ஸ்தோத்திரிக்கப்படும். அவர் ஒருவரே அதிசயங்களை செய்பவர். உண்மையில், இராஜாதி இராஜாவின் ஆட்சியில் இந்த முழு மனுக்குலமும் நீதியிலும், சமாதானத்திலும் நிலைத்திருப்பதால் அவருடைய மகிமையின் சாயலை பிரதிபலிக்கும். அப்படியே ஆகக்கடவது, அப்படியே ஆகக்கடவது. "உணர்ச்சிகரமான இந்த கருத்தை பலமாக வலியுருத்துவதற்கு அவர் "ஆமென்" என்ற வார்த்தையை இருமுறை பயன்படுத்துகிறார். தேவனுடைய சித்தம் நிறைவேறப்போகிறது என்ற அவருடைய இருதயத்தின் விருப்பம் அவருடைய உள்ளத்தில் வழிந்தது." என்று ஆல்பர்ட்டு பார்நெஸ் குறிப்பிடுகிறார்.

கடைசியாக வரும் வார்த்தைகள் சங்கீதத்தில் வருவதில்லை. பழங்காலத்தில் ஐந்து புத்தங்களை கொண்ட இரண்டாவது தொகுப்பின் முடிவில் இது குறிப்பிடப்படுகிறது. முதல் புத்தகத்தில் உள்ள கடைசி சங்கீதத்தின் முடிவிலும் இதே வார்த்தைகளை நாம் காணமுடிகிறது. "இஸ்ரயேலின் தேவனாகிய கர்த்தர் அநாதியாய் என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் ஸ்தோத்தரிக்கப்படத்தக்கவர். ஆமென், ஆமென்." (சங் 41:13)